# கந்தபுராண சுருக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

800
MKS
T/200/0175

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# கந்தபுராணச் சுருக்கம்

ஆக்கியோன் :
திரு. த. குமாரசுவாமிப்பிள்ளை
[ஆசிரியர், ஸ்ரீ ராமநாத வித்தியாலயம்]

திருமகள் அழுத்தகம்
சுன்னுகம்

1948

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமை ஆக்கியோனுக்குரியது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளுறை அதிகாரங்கள்



| | | பக்கம் |
|---|---|---|
| 1. | திருக்கைலாசம் ... ... ... | 1 |
| 2. | உமையம்மை மலைமகளானது ... | 3 |
| 3. | மேருமலையின் நிகழ்ச்சி ... ... | 5 |
| 4. | காமதகனம் ... ... ... | 7 |
| 5. | மோனம் நீங்கியது ... ... ... | 9 |
| 6. | திருமணம் ... ... ... | 11 |
| 7. | முருகன் திருவவதாரம் ... ... | 15 |
| 8. | முருகன் திருவிளையாட்டு .. ... | 18 |
| 9. | பிரமனைச் சிறையிட்டது ... .. | 21 |
| 10. | பிரமனைச் சிறை நீக்கியது ... ... | 23 |
| 11. | விடைபெற்றுப் போருக்குப் புறப்படல் | 25 |
| 12. | தாரகன் வதை ... ... ... | 27 |
| 13. | அசுரேந்திரன மகேந்திரம் சென்றது ... | 30 |
| 14. | குமாரபுரி ... ... ... | 32 |
| 15. | மாயை வரலாறு ... ... ... | 35 |
| 16. | மார்க்கண்டேயர் ... ... ... | 37 |
| 17. | மாயை உபதேசம் ... ... ... | 44 |
| 18. | அசுரர் யாகஞ் செய்து வரம் பெற்றது | 46 |
| 19. | சுக்கிரன் உபதேசம் ... ... | 49 |
| 20. | திக்கு விஜயம் ... ... ... | 51 |
| 21. | பட்டாபிஷேகம் ... ... ... | 54 |
| 22. | அரசு செய்தது ... ... ... | 56 |
| 23. | புதல்வரைப் பெறுதல் ... ... | 58 |
| 24. | இந்திரன் மறைந்திருந்தது ... ... | 61 |
| 25. | விந்தமலை ... ... ... | 63 |
| 26. | வில்வலன் வாதாவி வதை ... ... | 65 |
| 27. | காவிரி நீங்கியது ... ... ... | 67 |
| 28. | திருக்குற்றாலம் ... ... ... | 69 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | பக்கம் |
|---|---|---|
| 29. | தேவர் புலம்பல் ... ... ... | 71 |
| 30. | மகாசாத்தா ... ... ... | 73 |
| 31. | அசமுகியும் அயிராணியும் ... ... | 75 |
| 32. | சூரன் தண்டஞ் செய்தல் ... ... | 77 |
| 33. | வீரவாகுதேவர் தூது செல்லல் ... | 80 |
| 34. | சூரன் அமைச்சியல் ... ... ... | 83 |
| 35. | போர் தொடங்குதல் ... ... | 86 |
| 36. | சூரபதுமன் வதை ... ... ... | 88 |
| 37. | தெய்வயானை அம்மை திருமணம் ... | 91 |
| 38. | விண்குடியேற்றியது ... ... | 93 |
| 39. | தக்கன் தவம் ... ... ... | 95 |
| 40. | தக்கன் மகப்பெற்றது ... ... | 97 |
| 41. | உமை தக்கன் மகளானது ... ... | 100 |
| 42. | பிரமதேவன் யாகஞ் செய்தது ... | 103 |
| 43. | ததீசி முனிவர் ... ... ... | 105 |
| 44. | ததீசி உத்தரம் ... ... ... | 107 |
| 45. | கயமுகன் தோற்றம் ... ... | 112 |
| 46. | தக்கன் யாகம் ... ... ... | 116 |
| 47. | யாக சங்காரம் ... ... ... | 118 |
| 48. | அடி முடி தேடியது ... ... | 121 |
| 49. | கந்த விரதம் ... ... ... | 123 |
| 50. | வள்ளியம்மை திருமணம் ... ... | 127 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# காப்பு

திகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்.

உச்சியின் மகுட மின்ன வொளிர்தர நுதலி னோடை
வச்சிர மருப்பி னொற்றை மணிகொள்கிம் புரிவ யங்க
மெய்ச்செவிக் கவரி தூங்க வேழமா முகங்கொண் டுற்ற
கச்சியின் விகட சக்ரக் கணபதிக் கன்பு செய்வாம்.

மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
ஏவருந் துதிக்க நின்ற விராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேண் மலரடி போற்றி யன்னான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி
[போற்றி.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

**(வித்துவான் திரு. க. கி. நடராஜன் B. O. L அவர்கள் எழுதியது)**

தமிழிலுள்ள புராணங்களுக்குள்ளே, சிவபிரானுடைய மூன்று திருக்கண்கள் போன்று விளங்குவன பெரியபுராணம், கந்தபுராணம், திருவிளையாடற் புராணம் என்னும் மூன்றுமாம்.

இளமை, அழகு, மணம் முதலிய பல பொருள் குறிக்கும் முருகு என்னுஞ் சொல் தமிழ்மொழியில் ஒரு திவ்வியமான சொல்லாகும். பண்டைத் தமிழ் மக்கள் கடவுளை முருகன் என்று அழைத்தனர். கைபுனைந் தியற்றாக் கவின்பெறு சிறப்போடு திகழும் இயற்கையன்னையின் எழில்நலங் கண்ட இடங்களி லெல்லாம் முருகனைக் கண்டு வழிபட்டனர் தமிழ் மக்கள். முருகப்பிரானும் சிவபிரானும் வேறல்லர்; ஒருவரேயாவர் என்பது கந்தபுராணத்தை நன்கு கற்ற ஒவ்வொருவரும் அறிவர்

முருகப்பிரான் கோயில்கொண்டருளிய திருப்பதிகளுள், கச்சியம்பதி தனிச் சிறப்புடையது. இஃது அருட்செல்வர்கள் பலர் உருகி யுருகிப் பாடிய உயர்ந்த திருப் பாடல்களைப் பெற்று என்றுமழியாப் பெரும் புகழோடு நிலவுவது. இத் திவ்வியமான திருத்தலத்தைத் தரிசிப்பதே ஒரு பாக்கியமாம்.

இத் திருப்பதியிலே, ஆதி சைவ அந்தணர்குலத்திலே அவதரித்தவர் கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் இவர் கச்சியம்பதியிலேயுள்ள குமரகோட்டத்து எழுந்தருளியிருக்கின்ற முருகப்பெருமானை மெய்யன்போடு பூசைசெய்து வருங்கால், அப்பெருமானுர் கனவிற்றோன்றி ஆஞ்ஞாபித்தபிரகாரம், வடமொழியி லுள்ள கடல்போன்ற காந்தபுராணத்தின் ஐந்தாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கிதையாகிய சங்கர சங்கிதையின் பன்னிரண்டு கண்டங்களுள் முதற்கண்டமாகிய சிவரகசிய கண்டத்தின் முதலாறு கண்டத்தையும் கந்தபுராணம் எனப் பெயரிட்டுத் தமிழில் அருளிச்செய்தார்.

வடமொழியிலுள்ள காந்தபுராணம் சகல வேதாந்தங்களின் சாரத்தையும் உள்ளடக்கியது; ஐம்பது கண்டங்களாற் புனையப்பட்டது: ஓரிலக்கங் கிரந்தங்களை யுடையது; இப்புராணம் ஆறு சங்கிதைகளைக் கொண்டது. (சங்கிதை - சரித்திரம்.)

அவையாவன :- (1) சனற்குமாரசங்கிதை, (2) சூத சங்கிதை, (3) பிரம சங்கிதை, (4) விட்டுணு சங்கிதை, (5) சங்கர சங்கிதை, (6) சூர சங்கிதை என்னும் ஆறுமாம். அவற்றுள் ஐந்தாவதாகிய சங்கர சங்கிதை மூவாயிரங் கிரந்தங்களை யுடையது; பன்னிரண்டு கண்டங்களை யுடையது. அவற்றுள் முற்பட்ட சிவரகசிய கண்டத்துள் முதலாறு கண்டத்திலும் கூறப்படுவனவற்றையே தன்னகத்துக் கொண்டு விளங்குவது தமிழிற் கச்சியப்பசிவாசாரிய சுவாமிகள் இயற்றியருளிய கந்தபுராணம். இப் புராணத்தின் பெருமை எம்மால் விரிக்குந்தரத்ததன்று. வடமொழிக் காந்த புராணம் கடலாகுமானல், அக் கடலைக் கடைந்தெடுத்த அமிழ்தம் போன்றது தமிழிலுள்ள இக் கந்தபுராணம் என்று அறிஞர் போற்றுவர். இப் புராணம் மற்றெந்நாட்டினும் பார்க்க நம் ஈழநாட்டில் மிக்க பத்தி சிரத்தையோடு ஓதப்படுவதாகும். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களுடைய கந்தபுராணப் பதிப்பும், அவர்களெழுதிய கந்தபுராண வசனமும் பிறவும் இதற்குப் பெரிதுங் காரணமாயின என்று கூறுதல் மிகையாகாது. ஆயின், புராண படனம் முதலியன மிக அருகிவருகின்ற இக்காலத்திலே கந்தக் கடவுளின் திருவிளையாடல்களை எடுத்துக் கூறும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத் திவ்விய புராணத்தின் சாரத்தை மிக இலகுவான நடையிற் பள்ளிச் சிறுரும் படித்து இனிதினுணரக்கூடியதாகச் சுருக்கி எழுதின் நல்லது என்று திருவுள்ளங்கொண்ட அருட்குரவனுடைய உள்ளக் குறிப்பை உணர்ந்து, கந்தபுராணச் சுருக்கம் என்னும் இந்நூல் எழுதப்பெற்றதாகும்.

இந்நூலை எழுதுதற்கு, இதன் ஆசிரியர் சைவத் திருவாளர் பன்டிதர் த. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள் எல்லா வகையிலுந் தகுதிவாய்ந்தவர்களாவர். திருக்கோவில்களிற் சிறந்த முறையிற் புராணபடனஞ் செய்தும், செய்வித்தும், இனிமையாகப் பொருள் விரித்தும், சைவ சங்கங்களிற் புராணப் பிரசங்கங்களும் விரிவுரைகளும் நிகழ்த்தியும் தொண்டாற்றி வருபவரும், ஸ்ரீ இராமநாத வித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமைபார்த்து வருபவருமாகிய பண்டிதர் திரு. த. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள் இப்பணியைச் செய்தற்கு எல்லாவகையிலுந் தகுதியுடையவர் என்பதை எவரே மறுப்பர்! அவர்கள் சிறுச்சிறு வசனமாக, படிப்பதற்கு இன்பம் பயக்கக்கூடிய முறையிலே, கதைகளை எவ்வளவு சுருக்க முடியுமோ அவ்வளவு சுருக்கி எழுதியிருக்கின்றுர்கள். முதல்நின்று கடைசி வரை படித்து நான் இன்புற்றேன். இந்நூல் சிறுவர்க்கு மாத்திரமல்ல, பெரியோர்க்கும் பயன்படக் கூடியதாக அமைந்துள்ளது. பண்டிதரவர்களுடைய சிறந்த பணியை நாம் பாராட்டுகின்றோம். பள்ளிக் கூடங்களில் இதனை ஒரு சமய பாட புத்தகமாக அமைத்தும், வாங்கிப் படித்தும் தமிழுலகம் இப் பணியை ஊக்குமாக.

இங்ஙனம்
க. கி. நடராஜன்

19, பிரப்பங்குளம் றோட்,
வண்ணார்பண்ணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

உலகெலாம் அழகிய இளமைத் திருக்கோலத்தையே விரும்பும். இளமைச் செவ்வியை என்றும் உடையவர் முருகப்பெருமான். தம்மை வழிபடும் மெய்யன்பர்முன் விரைந்து செல்பவர். வேண்டிய வரங்களை அருளுபவர். அப்பெருமானது வரலாற்றைத் தமிழில் விரித்துக் கூறும் நூல் கந்தபுராணமாம். இப்புராணம் பதினாயிரத்து முந்நூற்று நாற்பத்தைந்து செய்யுட்களை உடையது. "புதுமயி லூர்பரன் புராணத் துற்றிடாக், கதையிலை யன்னது கணிதமின்றரோ" என்றபடி பலவிதமான கதைகளைக் கூறுவதனாற் பரந்துபட்டுச் செல்வது. இப்புராணக் கதைகளை இளஞ்சிறுரும் படித்தறியும்படி மிகவும் சுருக்கமாக எழுதும்படி தவஞானச் செல்வராகிய பெரியார் அடியேனுக்குப் பணித்தருளினர். அப்பெரியார் பணித்த வழிநின்று கதைகளை எவ்வளவு சுருக்க முடியுமோ அவ்வளவு சுருக்கிப் பல படலக் கதைகளை ஒவ்வொரு தலையங்கங்களில் அடக்கி ஐம்பது பாடங்களாக எழுதியுள்ளேன். பெரியார் பணியின் வழிப்பட்டு முருகப்பெருமான் வரலாற்றை எழுதியதனால் கந்தபுராணச் சுருக்கம் என்னும் இந்த வசனநூலில் வழுக்கள் காணப்படினும் தமிழ் வல்ல அறிஞர்கள் ஆதரிப்பார்கள் என்பது எனது நம்பிக்கை.

இந்நூலை அச்சிடுதற் கேற்றவாறு குறியீடுகள் அமைத்து எழுதி உதவிய பண்டிதர், திருவாளர் மு. சின்னத்தம்பி B. A. Hons. அவர்களுக்கும், இடையிடையே பாட்டுக்களைச் சேர்த்தும், காப்புச் செய்யுட்களுக்கு உரை எழுதியும், அணிந்துரை ஈந்தும் சிறப்புச்செய்த வித்துவான், திருவாளர் க. கி. நடராசா B. O. L. அவர்களுக்கும் எனது நன்றி உரியதாக.

இங்ஙனம்
த. குமாரசுவாமிப்பிள்ளை
ஆசிரியன்

ஸ்ரீ இராமநாத வித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காப்பு

திகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்.

**இதன் பொருள் :** திகழ் தச கர செம் முகம் ஐந்து உளான் – விளங்காநின்ற பத்துத் திருக்கரங்களும் செவ்விய ஐந்து திருமுகங்களு முள்ளவராகிய சிவபெருமானது, சகட– தேருக்கு, சக்கர – உருளாய் நின்ற, தாமரை நாயகன் – தாமரைக்குத் தலைவனாகிய சூரியன், அகட – வயிற்றின்கண்ணே, சக்கர வில் மணி ஆ உறை – வட்டமான ஒளிபொருந்திய இரத்தினமாக இருக்கப்பெற்ற, விகட சக்கரன் – விகட சக்கர விநாயகருடைய, மெய் பதம் போற்றுவாம் – மெய்மையாகிய திருவடிகளை (இந்நூல் இனிது முடிதற்பொருட்டு) யாம் துதிப்பாம் என்றவாறு.

திகழ் தசக் கரம்: திகடசக்கரம் எனப் புணர்ந்தமைக்கு விதி வீரசோழியத்துட் காணக்கிடக்கின்றது. வீரசோழியத்துள் முதற்கண் உள்ள எழுத்ததிகாரம் சந்திப்படலத்துள் (15).

"நான்கொடு மூன்றுறுன்ப தாமுயி ரின்பின்பு நவ்வருமேல்" என்றற் றொடக்கத்துக் கலித்துறையின்கண்ணே, "பதினைந்தொ டெண்ணிரண்டாய்த் தோன்றுடற் பின்னர்த் தகாரம் வரினிரண்டுந் தொடர்பால் ஆன்றவைந்தா முடலாம்" (ழகார லகார வொற்றீற்று நிலைமொழிப் பதத்தின் பின்னர் வருமொழி முதல் தகாரம் வந்து புணர்ந்தால் நிலைமொழியீறும் வருமொழி முதலுந் திரிந்து தனித்தனி யிரண்டும் டகாரமாம்) எனவரும் பகுதியையும் "முன்பி லொற்றுக் கழிவு முண்டே" (அஃதாவது, பின்னும் அவ்விலக்கணத்துள் நிலைமொழியீற்றிற்கு அழிவு முண்டு) எனவரும் பகுதியையும் பார்க்க.

பத்துக் கைகளாவன :– வலப்பக்கத்தில் சூலம் மழு, வாள், வச்சிரம், அக்கினி என்பன வமைந்த ஐந்தும், இடப்பக்கத்தில் அபயம், பாசம், மணி, சர்ப்பம், அங்குசம் என்பன அமைந்த ஐந்துமாம். பிறவாறுங் கூறுப.

ஐந்து முகங்களாவன :- ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் என்பனவாம். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உச்சியின் மகுட மின்ன வொளிர்தர நுதலி னோடை
வச்சிர மருப்பி னொற்றை மணிகொள்கிம் புரிவ யங்க
மெய்ச்செவிக் கவரி தூங்க வேழமா முகங்கொண் டுற்ற
கச்சியின் விகட சக்ரக் கணபதிக் கன்பு செய்வாம்.

*இ-ள்: உச்சியில் மகுடம் மின்ன - சிரசிற் கிரீடம் ஒளி வீசவும், நுதலின் ஓடை ஒளிர் தர - நெற்றியிற் பட்டம் பிரகாசிக்கவும், வச்சிர மருப்பின் ஒற்றை மணிகொள் கிம்புரி வயங்க - வைரித்த ஒற்றைக் கொம்பில் இரத்தின மழுத்தப்பெற்ற கிம்புரி விளங்கவும், மெய் செவி கவரி தூங்க - உண்மை பொருந்திய காதுகளாகிய சாமரங்கள் தூங்கவும், மா வேழ முகம் கொண்டு கச்சியின் உற்ற - பெருமை பொருந்திய யானை முகத்தைக்கொண்டு காஞ்சிபுரத்தி லெழுந்தருளியுள்ள, விகட சக்ர கணபதிக்கு அன்பு செய்வாம் - விகட சக்கர விநாயகரிடத்து யாம் அன்பு வைப்பாம். எ - று.* (உ)

மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
ஏவருந் துதிக்க நின்ற விராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேண் மலரடி போற்றி யன்னான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி
[போற்றி.

*இ-ள்: காஞ்சி மா அடி வைகுஞ் செவ்வேள் - காஞ்சி நகரத்திலுள்ள மாமரத்தின் கீழலெ லெழுந்தருளியிருக்கும் முருகக்கடவுளினுடைய, மூவிரு முகங்கள் போற்றி - ஆறு திருவதனங்களும் எம்மால் துதிக்கப்படுவன, முகம் பொழி கருணை போற்றி - அத் திருவதனங்கள் பொழிகின்ற திருவருள் வெள்ளமுந் துதிக்கப்படுவது, ஏவரும் துதிக்க நின்ற ஈராறு தோள் போற்றி - எவரும் துதிக்கும்படி நிலைபெற்ற பன்னிரண்டு திருக்கரங்களும் துதிக்கப்படுவன, அன்னான் சேவலும்மயிலும் போற்றி - அந்தக் கடவுளினுடைய சேவற் கொடியும் மயில் வாகனமுந் துதிக்கப்படுவன, திருக்கை வேல் போற்றி போற்றி - திருக்கரத்திற் பொருந்திய வேலாயுதமுந் துதிக்கப்படுவது எ - று. கருணை - முக விலாசம் எனினுமாம்.* (ங)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# கந்தபுராணச் சுருக்கம்

## திருக்கைலாசம்

உலகெலாம் செய்த புண்ணியம் ஒருங்கு திரண்டிருப்பது போன்றது திருக்கைலாசம். வெள்ளியை உருக்கி வார்த்தாற்போல உச்சியில் இருந்து பனிக்கட்டிப் பாளங்கள் உருகியோடப் பெறுவது. தன்னையடைந்தவரைத் தன்மயமாக்கும் இறைவனைப்போல, அடைந்தவரை ஒளிமயமாக்குவது. சிவனைத் தெளிந்துணர்ந்த மெய்ஞ்ஞானிகளது உள்ளம்போலவும், வானகமாகிய இடம்போலவும், பரிசுத்தமாகிய வெள்ளியின் ஒளி வீசுவது. விஷ்ணுமூர்த்தி துயில்கின்ற பாற்கடல் சிவபெருமானுக்கும் ஆசனமாயிருக்க விரும்பி மலைவடிவுகொண்டாற் போல்வது. அமுதம் நிறைந்த களங்கமில்லாத ஆயிரகோடி சந்திரர் ஒருங்கே உதயஞ் செய்திருப்பதுபோல விளங்குவது.

மேலும், நெற்றிக் கண்ணும், நான்கு திருப் புயங்களுமுடைய நந்தியெம்பெருமான் திருக் கரத்தில் பொற்பிரம்பு தாங்கிக் காவல் செய் திருக்கப் பெறுவது. இந்திரன் முதலிய தேவர் களும் ஞான முனிவர்களும் பூதகணத்தவர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்நாளும் போற்றிப் பொருந்தி இருக்கப்பெறு வது. அரம்பையர் ஆடலும், விஞ்சையர் கின்னரர் பாடலும், கந்தருவர் வாத்திய ஒலியும், மெய்யன்பர் தோத்திர ஒலியும் எவ்விடங்களிலும் ஒலிக்கப்பெறுவது. அடி: எல்லாவுலகங்களுக்கும் கீழேபோய், முடி: எல்லாவுலகங்களுக்கும் மேலேபோய், எல்லா உலகங்களும் அழியும் காலத்தும் சிவபெருமானைப்போல அழியாமல் நிற்பது. கிரகங்களும், நட்சத்திரங்களும், தேவரும், பிறரும் வலமாக வரும்படி யிருப்பது. மேரு முதலிய மலைகளும், ஏழு சமுத்திரங்களும, சக்ர வாளகிரியும், பெரும்புறவாழியும் நான்கு திசைகளிலும் மதில்போற் சூழ, நடுவே வீற்றிருப்பது.

அத்தகைய திருக்கைலாசத்தின் நடுவில், சுற்றிடங்களெல்லாம் நவரத்தினங்களின் ஒளி வீசிக்கொண்டிருக்கும் பொன்மயமான செம் பொற்றிருக்கோவில் ஒன்றுண்டு. அக்கோவிலின் நடுவில் சபாமண்டபத்தில் புண்ணியவடிவான இரத்தின சிங்காசனத்தின்மேல் வேத முதல்வரா கிய சிவபெருமான் உமாதேவியாரோடும் வீற் றிருந்தருளுவர். தும்புரு, நாரதர் முதலானோர் யாழ் முதலிய வாத்தியங்களை இசைப்பர். விஞ் சையர் முதலானோர் இசை பாடுவர். கண நாதர்கள் கங்கையின் அலைகள் புரள்வதுபோல, வெண்சாமரைகளை வீசுவர். அன்பர்கள் ஆல வட்டங்களை அசைத்து நிற்பர். உருத்திரர், பூதர் முன் வணங்கித் துதித்து நிற்பர். இத்தகைய சிறப்புடன் விளங்குவது திருக்கைலாசம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. உமையம்மை மலைமகளானது

மேலே கூறிய சிறப்புக்களுடன் திருக்கைலாசத்தில் வீற்றிருந்தருளிய இறைவி எழுந்து, சிவபெருமானைப் பணிந்து, "சுவாமி, அடியாள் தக்கன் மகளென்ற பெயரைப்பெற்ற உடலத்துடன் இனிமேல் இருக்க அஞ்சினேன்; இதை நீக்கும்வழியைக் கிருபை செய்தருளல்வேண்டும்!" என்று வேண்டினாள். இறைவன், "உமையே! நீ இங்ஙனம் நினைப்பது உயிர்களெல்லாம் உய்ய வேண்டுமென்னும் கருணையினாற் போலும்! இமய மலையரசன் உன்னைப் புதல்வியாய்ப் பெறுதற்கு அநேககாலம் அருந்தவஞ் செய்கின்றான்; அவன் மகளாய் அவதரித்து, ஐந்துவயதின்மேல் தவஞ் செய்வாய்; யாம் வந்து, உன்னை மணஞ்செய்வேம்," என்று அருள்புரிந்தான். உமை விடை பெற்றுச் சென்றாள்.

பனி எங்கும் மூடியிருப்பதால் கைலாசம் போலத் தோன்றுகின்ற இமயமலையை இறைவி அடைந்தாள். அம்மலையில் அமிர்தம்போல நீர் நிறைந்த பத்மையென்னுந் தடாகக் கரையில், தவஞ் செய்துகொண்டிருக்கிற இமயமலையரசன் காணும்படி தாமரைப் பூவின்மேல் அம்பிகை பச்சைப் பசுங் குழந்தையாய் வீற்றிருந்தாள். அரசன் கண்டு, "உமையம்மையே அருளால் குழந்தை வடிவாயினள்," என எண்ணி, ஓடிச் சென்று குழந்தையை எடுத்தான்; சிரமேல் தாங்கிச் சென்று மனைவியாகிய மேனை கையிற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்தான். மேனையும் அளவில்லா மகிழ்ச்சியோடு வாங்கி, ஆண்டவன் அருளைப் புகழ்ந்து, குழந்தையைப் பெற்றவள் போன்ற தன்மையை அடைந்து, நாயகன் மகிழும்படி அன்போடு வளர்த்து வந்தாள்.

ஐந்து வயதானதும் அம்பிகை அரசனை அணுகி, "சிவபிரான் திருமணம் செய்யும்படி தவஞ் செய்வேன்; இம்மலையில் ஒரு பக்கத்தில் என்னை விடுக," என்றாள். அரசன், "அன்னையே! எம்மைப் பிரிந்து, தவஞ் செய்ய இப் பருவம் போதாது," என்றான். "எல்லோரையும் காப்பவன் ஈசன் ஒருவனே! ஆதலின் எனது உரை மறுது விடுக," என்றாள் அம்பிகை. அரசன் ஓரிடத்துக் கன்னிகாமாடம் அமைத்துத் தகுந்த கன்னியரைத் துணையாக விடுத்தான். உமை சிவபெருமானை நினைந்து தவஞ் செய்துகொண்டிருந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. மேருமலையின் நிகழ்ச்சி

பிரமன் மக்களாகிய சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் என்னும் முனிவர் நால்வரும் சிவபெருமான் உபதேசித்த வேதங்கள் முழுவதையும் அறிந்தும், மனம் அமைதி பெறவில்லையென்று, கைலாசத்தை யடைந்து சிவபெருமானை வணங்கி, "சுவாமி! எங்கள் மனமொடுங்க அருள்புரிக," என வேண்டினர். இறைவன், சிவாகமங்களிற் சொல்லப்படுகின்ற சரியை, கிரியை, யோகம், என்னும் மூன்று படிகளையும் உபதேசித்துக் கல்லாலவிருட்ச நிழலில் எழுந்தருளி, "ஞானம்: சொல்லால் அறிவிக்க முடியாதது; செயலால் அநுபவத்தில் அறிந்து கொள்ளத் தக்கது," என்பதை விளக்கி, ஒரு திருக்கரத்தைத் திருமார்பில் சேர்த்தி, ஒரு திருக்கரத்தால் மௌனமுத்திரை காட்டி, யோக வடிவாய் இருந்தருளினார். முனிவர்கள் உண்மையுணர்ந்து ஞான அநுபவிகள் ஆயினர்.

சிவபெருமான் ஒருகணம் யோகத்திலிருக்க, தேவர்களுக்குப் பல யுகங்கள் கழிந்தன. சூரன் முதலான அசுரர் துன்பங்களுக்கு அஞ்சி, இந்திரன் மனைவியோடும் மேருமலையை அடைந்திருந்தான். அசுரர் பொன்னுலகை அக்கினிக்கு இரையாக்கிச் சயந்தனையும், தேவர்களையும், தெய்வமகளிரையும் சிறைப்படுத்தியதைக் கேள்வியுற்று, வருந்தி, சிவபெருமானைக் குறித்துத் தவஞ்செய்தான். இறைவன் காட்சி கொடுத்தருள, இந்திரன் வணங்கி, "எம்பெருமானே! அசுரர் துன்பம் எம்மாற் பொறுக்க முடியவில்லை; அவர்களை அழித்து எம்மைக் காத்தருள்க," என்று துதித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான். "இந்திரனே! எம்மை அவமதித்த தக்கன் யாகத்தில் சென்றிருந்த பாவத்தால் இப்படி வருந்தினீர்; எம்மிடத்து ஒரு புதல்வன் தோன்றி அசுரரை யழித்து உங்களைக் காப்பான்" என்று கூறி மறைந்தருளினன்.

இந்திரன் தனது மனைவியை வியாழபகவான் இல்லத்தில் இருத்திவிட்டு, மனோவதியை அடைந்து பிரமதேவனைப் பணிந்து, நிகழ்ந்தவெல்லாம் சொல்லி, "இறைவன் யோகத்தில் இருக்கின்றான்; உமை இமயமலையில் தவஞ்செய்திருக்கின்றாள்; இருவரும் பிரிந்திருக்கையில் புதல்வன் எப்படித் தோற்றுவான்? இதற்கு என் செய்வோம்?" என்றான். எல்லாவற்றையும் கேட்ட பிரமதேவன், இந்திரன் முதலானவரோடு வைகுந்தத்தை யடைந்து, எல்லாவற்றையும் எடுத்துக் கூறி, "சிவபெருமான் உமையைப் பிரிந்து யோகத்திலிருத்தலால், தேவர், மனிதர், மற்றுமுள்ள சகலவுயிர்களும், ஆண் பெண் கூடுதலின்றியிருத்தலால், எனது படைத்தல் தொழிலும் விருத்தியடையவில்லை; யானும் கலைமகளின் புணர்ச்சியைப் பெறேன் ஆயினேன். இனிச் செய்யவேண்டுவது யாது? அதனை யருளிச்செய்க!" என்று வேண்டினான்.

இவைகளை உணர்ந்த விஷ்ணு, பிரமனைப் பார்த்து, "மன்மதனை அழைத்துச் சிவபெருமானிடம் அனுப்புங்கள்; அவன் புஷ்ப பாணங்களைச் செலுத்தி, யோகத்தைக் குலைத்துக் காமத்தைத் தூண்டுவான். இறைவன் மலைமகளை மணஞ் செய்து புதல்வனைத் தருவான்," என்று கூறினார். பிரமன் மகிழ்ந்து தேவர்களோடும் மனோவதியை அடைந்திருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. காமதகனம்

பிரமதேவன் தாமரையாசனத்திருந்து மன்மதனை வரும்படி நினைத்தான். அவன் அங்கு வந்து பிரமனைப் பணிந்து, "என்னை நினைத்த காரணம் யாது?" என்று கேட்டான். அதற்குப் பிரமன், "தேவர்கள் எல்லாரும் சூரனால் வருந்துகின்றனர்; சிவபிரான் ஒரு புதல்வனைத் தந்து, இன்னலை நீக்குவதாக அருள் செய்தார்; இப்பொழுது உமையைப் பிரிந்து யோகத்திலிருக்கின்றார்; இறைவனுடைய யோகத்தைக் கலைத்து, காம வேட்கையை உண்டாக்கினால் உமையை மணந்து புதல்வனைத் தோற்றுவிப்பார்; இது செயவல்லவன் உன்னைத் தவிர வேறு யாருமில்லை; இப்பொழுதே சென்று, இவ்வுதவியைச் செய்வாய்!" என்றனன். மன்மதன் இருகாதையும் மூடிச் சிறிதுநேரம் அயர்ந்து, "எனக்கு அழிவைத் தருவதாகிய இச்செயலை என்னிடத்து அன்பில்லாதவரன்றோ சொல்வார்? இதை விடுத்து வேறு ஒன்றைச் செய்யக்கூடிய ஒன்றைச் சொன்னால் செய்வேன்!" என்றான். பிரமன் பின்னும், "வானவர் படுந் துயரமறிந்தும் நீ மறுக்கலாமா? ஆபத்துக் காலத்திற் செய்யப் படுவதே உதவியாகும்!" என்று கூறினன். மன்மதன், "உன்னுடைய நாவில் வாணியை இருத்தினேன்; எனது தந்தையாகிய விஷ்ணுவின் மார்பில் கமலையை இருத்தினேன்; எத்தனையோ தேவர் முனிவர்களை வென்றேன்; ஆயினும் இவ்வெற்றியெல்லாம் சிவபிரானருளால் நிகழ்வது;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பெருமானை எதிர்த்துப் பொரப்போனால் யான் அழிந்து விடுவேன்; யான் இசையேன்!" என்றான். பிரமன், "நான் எத்தனையோ எடுத்துக் கூறியும் நீ மறுக்கின்றாய்; இன்னும் தடை சொன்னாற் சாபமிடுவேன்!" என்றான். இதைக் கேட்டதும் மன்மதன் தனக்குள், "இவர்கள் சாபத்தைப்பெற்று வருந்துவதிலும் பார்க்க, சிவபிரான் முன் சென்று அழிய நேர்ந்தாலும் ஒருக்கால் உய்யவுங்கூடும்; விதியை யார் கடப்பார்?" என்று தேறிக்கொண்டு, "யான் செல்கின்றேன்!" என்று விடைபெற்றுச் சென்று, தனது சேனைகளை ஆயத்தஞ் செய்து, இரதிதேவியுடன் திருக்கைலாசத்தை அடைந்தான்.

சென்றவன் புறத்தே நின்று அங்குள்ள பட்சிகள் மிருகங்கள்மீது புஷ்பபாணங்களைச் செலுத்தினான். நந்திதேவர் இதையறிந்து உம்காரம் செய்தார். முன்னே சிவபிரான், "மன்மதன் வந்தால் தடுக்கவேண்டாம்; வேறு யாரையும் உள்ளே விடாதே!" எனப் பணித்ததின் கருத்தை உணர்ந்தார். மன்மதன் நந்திதேவரைப் பணிந்து, உள்ளே செல்ல வழிகேட்டான். "மேற்கு வாயிலால் செல்வாய்" என்று அவர் பணிக்க அவன் அங்ஙனமே சென்று, இறைவன் முன்னிலையில் நின்று வில்லை வளைத்தான். உடனே மயங்கி விழுந்து மூர்ச்சையானான். பின் இரதிதேவி தேற்றத் தேறியெழுந்து, புஷ்பபாணத்தைச் செலுத்தினான். சிவபிரான் தமது நெற்றிக்கண்ணைச் சிறிது திறந்தார். உடனே மன்மதன் உடலம் எரிந்து சாம்பலாயிற்று. இதைக்கண்ட மனைவியாகிய இரதிதேவி அளவிலாத் துயரம்கொண்டு புலம்பினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. மோனம் நீங்கியது

திருக்கைலாசத்திற்கு மன்மதனை யனுப்பி, அங்கே நடக்கும் சம்பவத்தைப் பார்க்கப் புறத்தே வந்து நின்ற பிரமா முதலிய தேவர்கள் எல்லோரும் மன்மதன் எரிந்ததைப் பார்த்துக் கலங்கி அழுது, "இனி என் செய்வது?" என்று இரங்கி இறைவனைத் துதித்தனர். இறைவன் கருணை கூர்ந்து எல்லோரையும் அழைத்து வரும்படி நந்திதேவருக்குக் கட்டளையிட்டார். நந்திதேவர் எல்லோரையும் உள்ளேவிட, சென்ற தேவர்கள் வணங்கித் துதித்துத் தங்கள் குறைகளை விண்ணப்பம் செய்தனர். சிவபெருமான், "நீங்கள் வருந்தவேண்டாம்; விரைவில் மலைமகளை மணந்து, புதல்வனைத் தோற்றுவித்து அவனால் உங்கள் துன்பத்தை நீக்குவிப்போம்!" என்று அருளிச் செய்தார். தேவர்கள் துதித்து விடை பெற்றுச் சென்றனர்.

அன்னார் விடைகொண் டேகியபி
　　னதுகண் டிரதி யெம்பெருமான்
முன்னு லிறைஞ்சிப் போற்றிசெய்து
　　முறையோ முறையோ விறையோனே
பொன்னார் கமலத் தயன்முதலோர்
　　புணர்ப்பா லெங்கோன் போந்திங்கே
உன்னுன் முடிந்தா னவன்பிழையை
　　யுளங்கொ ளாம லருளென்றாள்.

—மோன நீங்கு படலம்: செய். உள

பின்பு இரதிதேவி தனது நாயகனைக்குறித்து இரந்து வேண்டினாள். இறைவன் "இமயமலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமை திருமணம் நிகழும்போது உன் நாயகனை எழுப்பித்தருவோம்!" என்று அருள்புரிந்தார். கேட்ட இரதிதேவி இமயமலையை அடைந்து கார்முகிலின் வரவை எதிர்நோக்கும் மயில்போல, ஒரு பக்கத்தில் தவஞ் செய்திருந்தாள்.

சிவபெருமான் முனிவர் நால்வரையும் பார்த்து, "ஞானமாவது சொல்லால் உணர்த்தப் படுவதன்று; இவ்வாறு மௌனமாயிருந்து நம் மைத் தியானித்தலேயாம்" என்று அருளிச்செய் தார். முனிவர்கள், "தேவரீரது கருணையினால் அடியேம் உய்ந்தேம்," என்று துதித்தனர். இறைவன் "ஞானயோக நிட்டையிலிருந்து பாச விடுதலை பெற்று, சுவானுபூதிமான்களாய் நமது திருவடிகளை அடைவீர்களாக," என்றருளி விடை கொடுத்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. திருமணம்

இமயமலையில் அம்பிகை தவஞ் செய்து கொண்டிருக்கின்ற இடத்திற்குச் சிவபெருமான் முப்புரிநூலணிந்து, விபூதி, உருத்திராக்கம் தரித்து, கிழப்பிராமணர் போலச் சென்ருர். சென்ற கிழவரைக் கண்ட இறைவி உள்ளே அவரை யழைத்து உபசரிக்க, அவர், "அரசன் புதல்வியாகிய நீ இப்படி அருந்தவஞ் செய்வது ஏன்?" என வினவினர். காவலாயிருந்த துர்க்கை, "இவள் சிவபெருமானை மணஞ்செய்யக் கருதித் தவஞ் செய்கின்ருள்!" என்று கூறினள். பிராமணர் நகைத்து, "தேவர் முனிவரும் காணுத சிவபெருமான் இவளுடைய தவத்திற்கு வருவாரா? இவள் தவம் வீணுகும்," என்ருர். அம்பிகை, "சிவன் வந்தால் சரி; அல்லது தவஞ் செய்து உயிர்விடுவேன்!" என்ருள். பிராமணர், "அந்தச் சிவனுடைய நிலைமை உனக்குத் தெரியாதா? அவன் அணிவது பாம்பு; உடுப்பது புலித்தோல்; உண்பது நஞ்சு; கையில் வைத்திருப்பது ஓடு; ஆடுவது சுடலையில்; இந்தச் செல்வங்களைப் பெறுவதற்கா தவஞ் செய்கின்ருய்?" என்றனர். "மறையவராய் உள்ளார் சிலர் விபூதி உருத்திராக்கம் அணிந்தும் இல்லொழுக்கநெறி தவறினர் போன்று, பரமபதியாகிய சிவபெருமானை இகழ்வர். அவ்வியல்பே உன்னிடமுங் காணப்படுகின்றது; சீக்கிரம் வெளியே போ!" என்று உமை கூறவே, "கோபம் வேண்டாம்! யானுன்னை மணஞ் செய்யக் கருதியே வந்தேன்" என்ருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பிகை இருசெவிகளையும் மூடிக்கொண்டு ஒரு புறம் ஓடினாள். இறைவன் இடபவாகனத்திற் கணங்கள் சூழக் காட்சி கொடுத்தனர்.

அம்பிகை அவரை வணங்கிப் பிழையைப் பொறுக்கும்படி வேண்டினள். இறைவன் கருணை செய்து, "நாளை மணஞ்செய வருவேம்!" என்று கூறி மறைந்தருளினார். இச் சம்பவங்களைத் தோழியர் இமயமலையரசனுக்குச் சொல்ல, அரசனும் மனைவியும் வந்து அம்பிகையை அழைத்துச் சென்றனர். சிவபெருமான் தெய்வ முனிவர் எழுவரையும் மணம் பேசி வரும்படி இமயமலை அரசனிடம் அனுப்பினார். அரசன் உடன்பட்டமையை முனிவர்கள் இறைவனுக்கு விண்ணப்பஞ் செய்தனர். இமயமலையரசன் எல்லோருக்கும் அறிவித்து நகரை அலங்கரிப்பித்தான்.

சிவபெருமான் எல்லோரையும் அழைக்கும்படி நந்திதேவருக்குப் பணித்தருளினார். அவர் நினைத்த மாத்திரத்தில் தேவர்கள், முனிவர்கள், உருத்திரர்கள், கணத்தலைவர்கள் யாவரும் கைலையில் வந்து இறைவனைத் துதித்தனர்.

இமயமலையரசன் திருக்கைலாசத்தை அடைந்து சிவபெருமானை வணங்கி, "இது நல்ல முகூர்த்தம்! திருமணஞ் செய்ய எழுந்தருள வேண்டும்," எனப் பிரார்த்தித்தான். இறைவன், "கணங்களோடு வருவேம்; முன் செல்லுதி," என்று விடைகொடுத்துத் தாம் திருமணக்கோலங் கொண்டு, கண்டவர் கண்ணிமையாக் காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுடன், விண்ணவர் பூமழை பொழிய, தும்புரு நாரதர் யாழ் வாசிக்க, விஞ்சையர் இசைபாட, அரம்பையர் ஆட, கணத்தலைவர் வாத்தியங்களை முழக்க, இடபவாகனத்தி லிவர்ந்து இமயமலையை அடைந்தார்.

மேனை தெய்வப் பெண்களோடு வந்து இறைவரது பாதங்களிற் பாலால் அபிஷேகஞ் செய்து, ஆலத்தி சுற்றி வணங்கிச் சென்றாள். இறைவர் எழுந்தருளித் திருமண மண்டபத்தின் நடுவே இந்திரநீல இரத்தினத்தாற் செய்த சிங்காசனத்தில் வீற்றிருந்தருளினர். உடன் வந்தோர் அனைவரும் தத்தமக்குரிய ஆசனங்களில் அமர்ந்தனர்.

அத்தருணம் எல்லா உலகத்தவரும் வந்து கூடினமையால் பூமியின் தென்பாகம் உயர்ந்து வடபாகம் தாழ்ந்தது. எல்லோரும், "சிவனே! சிவனே!!" என்று இரங்கினர். எம்பெருமான் அகத்திய முனிவரை அழைத்து, "உன்னைப்போல் தவத்திற் சிறந்தோர் உலகிலில்லை. நீ நினைந்தவற்றையெல்லாம் முடிப்பாய்; இப்போதே தென் திசையிற் சென்று பொதிய மலையில் இருப்பாய்! பூமி சமமாகும்," என்று அருளினர். அகத்தியர் வணங்கி, "தேவரீருடைய திருமணக்காட்சியைத் தெரிசிக்காமல் போக என் மனம் கவல்கின்றது," என்றார். இறைவன், "எமது மணக்கோலத்தை அங்கு காட்டுவோம்," என்றருள, அகத்தியர் வணங்கிப் பொதிய மலைக்குச் சென்றார். பூமி சமமாயிற்று. முறைப்படி திருமணம் நடைபெற்றது. அச்சமயம் அங்கே தவஞ் செய்திருந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரதிதேவி வந்து வணங்கி, வேண்டினள். இறைவர் மன்மதனை வரும்படி நினைத்தருளினார். உடனே அவன் தோன்றி இறைவனையும் இறைவியையும் வணங்கினான். "இரதிக்குமாத்திரம் உருவமாய் இருப்பாய்; மற்றையோருக்கு அருவமாயிருந்து உன் அரசியலை நடாத்துவாய்," என்று இறைவர் அவனுக்கு அருள் புரிந்தார். பின்பு இமயமலையரசனுக்கும் மனைவிக்கும் இன்னருள செய்து, உமாதேவியை இடபவாகனத்தில் வைத்துக்கொண்டு, முன்போல எல்லா வைபவங்களும் நிகழ, திருக்கைலாசத்தை அடைந்து அங்குவந்தோரனைவர்க்கும் விடை கொடுத்து வீற்றிருந்து அருளினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7. முருகன் திருவவதாரம்

" அருவமு முருவு மாகி
    யநாதியாய்ப் பலவா யொன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப்
    பிழம்பதோர் மேனி யாகக்
கருணைகூர் முகங்க ளாறுங்
    கரங்கள்பன் னிரண்டுங் கொண்டே
யொருதிரு முருகன் வந்தாங்
    குதித்தன னுலக முய்ய."

தேவர்கள் யாவரும் சூரனாற் படுந் துன்பங்களைப் பொறுக்க முடியாதவர்களாய் மேருமலையிற் கூடி ஆலோசித்தார்கள். திருக்கைலாசத்தை அடைந்து நந்தி தேவரிடம் அநுமதி பெற்று உள்ளே சென்று, சிவபெருமானை வணங்கிச் சூரனாற் படுந் துன்பங்களைக் கூறி, "இனி எங்களாற் பொறுக்கமுடியாது! எங்களைக் காத்தருள்க; அல்லது அழித்தருள்க" என்று முறையிட்டார்கள். சிவபெருமான், "அஞ்சாதீர்" என்று அவர்களுக்கு அபயம் கொடுத்து, ஆறு திருமுகங்களோடு வீற்றிருந்தார். ஒவ்வொரு நெற்றிக் கண்ணிலும் ஒவ்வொன்றாக ஆறுபொறிகள் தோன்றின. யாவரும் வெப்பந் தாங்க முடியாதபடி அப் பொறிகள் எங்கும் பரந்தன. உமையம்மை அவ் வெப்பத்திற்கு அஞ்சி, ஓடினள். எல்லோரும் அஞ்சவே இறைவன் ஆறு பொறிகளையும் ஓரிடத்து வரச்செய்து, அக்கினியையும் வாயுவையும் பார்த்து "இவற்றைச் சுமந்து சென்று கங்கையில் விடுங்கள்," என்று கட்டளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிட்டார். அப்படியே அவர்கள்விட, கங்கை சரவணப் பொய்கையிற் சேர்த்தது. அங்குள்ள தாமரைப் பூவின்மேற் குமாரக் கடவுள் ஆறு திருமுகங் கொண்ட குழந்தை வடிவாய் வீற்றி ருந்தார். இந்திரன் முதலிய திக்குப்பாலகர் காவல் புரிந்தனர். கார்த்திகைப் பெண்கள் அறுவரையும் அழைத்துப் பாலூட்டும்படி தேவர்கள் கூறினர். அவர்கள் வரவைக் கண்ட குழந்தை முருகன் ஆறு குழந்தைகளாய் வடிவங் கொண்டு, அநேக திருவிளையாடல்களைச் செய்திருந்தான்.

பின்பு ஒருதினம் சிவபெருமான் உமாதேவி யாரோடும் இடபவாகனத்தி லேறிச சரவணப் பொய்கையை அடைந்தார். உமாதேவியார் ஆறு குழந்தைகளும் ஒன்றுபோலிருக்கக் கண்டு, அவற்றை ஒருங்கே அணைத்தெடுத்தார். ஆறுருவும் ஓருருவமாகக் கண்டு, குழந்தைக்குக் 'கந்தன்' எனப் பெயரிட்டுத் தங்கள் நடுவில் வைத்துக் கொண்டு இறைவனுந் தேவியும் திருக்கைலா சத்தை யடைந்தனர்

முன் அம்பிகை ஓடியபொழுது அவளது திருவடிச் சிலம்பிலிருந்து சிதறிய ஒன்பது இரத் தினங்களிலும் அம்பிகையின் உருவம் தோன்ற, அவ்வுருவம் ஒன்பதையும் பெண்களாக வெளியே வரும்படி இறைவன அழைத்தார். அருளால் வெளிப்போந்த பேரழகுடைய அப் பெண்கள் இறைவனைப் பார்த்துக் காமுற்றுக் கருப்பமெய் தினர். அதுகண்ட இறைவி சினந்து, "நெடிது காலம் இக்கருவைச் சுமப்பீர்களாக!" என்றனள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் இக் கடுமொழி கேட்டு நடுங்கி, மேனி வியர்த்தனர். அவ் வியர்வையினின்றும் இலக்கம் வீரர் தோன்றி இறைவனையும் உமையையும் வணங்கினர். நெடுங் காலமாகக் கருவைச் சுமந்த நவகன்னியர் இறைவனையும் உமையையும் வணங்கி, "யாங்கள் மிக இளைத்தேம்; இனிச் சுமக்கலாற்றேம்; அருள்புரிக," என்று பணிந்தனர். இறைவன் உமையைப் பார்த்து, "இவர்க்கு அருள்புரிவாய்," என்று பணித்தார். அம்பிகை அவர்களை நோக்கி, "கருவுயிர்ப்பீர்களாக," என்று அருளினள். முன்னே நந்திகணவீரர் ஒன்பதின்மர் கருவிற் புகுந்து சிவனை நினைந்து யோகிருந்தவர் அச்சமயம் வெளியே தோன்றினர். அவர்களே வீரவாகுதேவர் முதலிய வீரர்கள். இந்த ஒன்பது வீரரும் முன்தோன்றிய இலக்கம் வீரரும் சிவபெருமான் கட்டளைப்படி முருகக் கடவுளின் துணைவர்களாய் அமர்ந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8. முருகன் திருவிளையாட்டு

திருக்கைலாசத்தில் துணைவர்களோடு வீற்றிருக்கின்ற குமாரக்கடவுள் திருவிளையாடல்புரிய மனங்கொண்டார். பேரழகு வாய்ந்த குழந்தை வடிவுடன் பலவகை அணிகள் பூண்டவராய் மண்ணில் இருப்பார்; விண்ணில் இருப்பார்; திசைகள் தோறுஞ் செல்வார்; பாதலத்திற்போவார். இவ்வாறு கணப்பொழுதில் எல்லா உலகங்களிலுஞ் சென்று மீள்வார். மலைகளைத் தலைகீழாக்குவார்; யாறு குளங்களை மாற்றியமைப்பார்; பூமியைச் சுழலச் செய்வார்; இப்படிப் பல அதிசயங்களைச் செய்வார். இவ் வேறுபாடுகளைக் கண்டோரெல்லாரும் தியங்கி மயங்கினர். தேவர்கள் பலர் மேரு மலையை அடைந்து இந்திரனிடம் இவற்றைக் கூறி, "மாயம் வல்ல அசுரர் செயலோ? யாதோ, அறிகிலோம்" என வருந்தி இருக்கும் சமயம், முருகக் கடவுள் மேருமலையில் தோன்றி அநேக ஆடல்களைச் செய்தார். நேரிற்கண்டு, "இவன் தான் இவற்றைச் செய்தவன்; தனித்து அகப்பட்டான்; இவனைப்பொருது அழிப்போம்" என்றெண்ணி இந்திரன் வெள்ளை யானையிலேறித் தேவர்கள் சூழ எதிர்த்தான். போர் தொடங்கிற்று; முருகக் கடவுள் அம்புகளினால் தேவர்களையும் வெள்ளை யானையையும் அழித்தார்; இந்திரனும் மயங்கி விழும்படி செய்தார். இறந்தவர் போக, எஞ்சிய தேவர்கள் ஓடினர். இவற்றையெல்லாம் நாரத முனிவர் தேவகுரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வுக்குக் கூறினர். உடனே வியாழபகவான் அங்கு வந்து முருகனைத் துதித்து, "எம் பெருமானே! சூரன் முதலிய அசுரரால் பலகாலம் துன்ப மடைந்த தேவர்கள் தேவரீரால் தமது துன்பங் களை நீக்கவேண்டு மென்று காத்திருக்கின்றனர். தேவரீரென்று அறியாமல் மயங்கிச் செய்த பிழை யைப் பொறுத்து அவர்களைக் காத்தருளவேண் டும்" என்று பணிந்தான். கந்தவேள் கருணை கூர்ந்து இறந்த தேவர்களையும் வெள்ளை யானை யையும் இந்திரனையும் எழுப்பி, எல்லா உலகங் களும் எல்லாப் பொருள்களும் தமது திருமேனி யில் அமைந்து தோன்றும்படி பாரமேசுரவடிவங் கொண்டு நின்றார். கண்டதும் தேவர்கள் அச்சமும் ஆச்சரியமும் உடையவர்களாய்த் துதித்தார்கள். "சுவாமீ! பழைய வடிவுடன் தோன்றி மாறுபாடமைந்தவற்றை யெல்லாம் முன்போல் அமைத்தருள்க" என்று வேண்டி னர். முருகன், "எல்லாம் முன்போல் ஆக" என்று அருளியவுடன் அப்படியே அமைந்தன கண்டு அற்புதமடைந்த தேவர்கள் "எம்பெரு மானே! சூரன் முதலிய அவுணர்களைச் சங்கரித்து எங்களைக் காத்தருள்க" என்றிரந்தனர். "நீவிர் சேனைகளாய் அமைந்துவர யாம் சேனைத்தலைவ னாய்ச் சென்று அசுரர் கிளையை அழிப்பேம்; அஞ்சாதீர்," என்று முருகன் அருளினன். அது கேட்டு மகிழ்ந்த தேவர்கள், "தேவரீரைப் பூசிக்க ஆவல் கொண்டோம்; அருள புரிக" என வேண்ட, "அங்ஙனமாக" என்று அருள்புரிந்து, திருக்கைலாசத்தின் பக்கலிலுள்ள ஒரு மலையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைந்தார். தேவர்கள் பூசைக்குரிய பொருள்களெல்லாம் சேகரித்து, அம் மலையில் தெய்வத் தச்சனுல் ஆலயம் அமைப்பித்துச் சிங்காசனத்தில் முருகக்கடவுளை எழுந்தருளுவித்து முறைப்படி பூசித்துத் துதித்தனர். முருகக்கடவுள் அருள் செய்து மறைந்து கைலாசத்தையடைந்து வீரரும், பூதரும், கணநாதரும் புடைசூழ வீற்றிருந்தருளினர். தேவர்களுந் தத்தம இடங்களை அடைந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9. பிரமனைச் சிறையிட்டது

நாரதமுனிவர் சிவபெருமானைக் குறித்து ஒரு யாகஞ் செய்தார். தேவர், முனிவர், அந்தணர் யாவரும் கூடிச் செய்த யாகத்தில்: ஆலகால விஷம்போல, ஓம குண்டத்தில் ஒரு ஆட்டுக்கடாத் தோன்றி யாவரையும் வருத்திச் சிலரைக் கொன்று, விண், மண் எங்கும் துன்பஞ் செய்து உலாவியது. எல்லோரும் திருக்கைலாசத்தை யடைந்து, குமாரக் கடவுளைக் கண்டு முறையிட்டனர். அவர், "அஞ்சாதீர்" என்று அருளி, "அந்த ஆட்டுக்கடாவை விரைவிற் கொண்டு வருக," என்று வீரவாகு தேவருக்குப் பணித்தனர். வீரவாகு தேவர் எங்குந் தேடித்திரிந்து, சத்தியலோகத்துக்கு முன்னே வருவதைக் கண்டு, அதைப் பிடர்மயிரிற் பிடித்துக் கொண்டுவந்து முருகன் முன் விட்டனர் ஆட்டுக்கடாவும் அஞ்சி அடங்கிப் பணிவுடன் நின்றது. முருகன், "நீவிர் சென்று, யாகத்தை நிறைவேற்றுங்கள்," என்று அருளினர். அவர்கள் வேண்டுகோளின்படி ஆட்டுக்கடாவை முருகப்பெருமான் வாகனமாகக் கொண்டனர். அங்கு வந்தோரனைவரும் பணிந்து சென்று, யாகத்தை நிறைவேற்றினர்.

முருகக் கடவுள் தேவர் முனிவருக்கு அருள் புரிந்து அநேக திருவிளையாடல்களைச் செய்து, திருக்கைலாசத்தில் வீற்றிருக்கும் காலத்தில்: ஒருநாள் பிரமன் தேவர்களோடும் திருக்கைலாசத்தை யடைந்து சிவபெருமானை வணங்கி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்பி வரும்பொழுது கோபுர வாயிலில், பொன் மயமான ஆலயத்தில் இரத்தினங்கள் பதித்திருக்கு மிடத்தில், வீரவாகுதேவர் முதலிய வீரர்சூழ வீற்றிருந்த முருகக் கடவுளை விழுந்து வணங்காது கையாற் கும்பிடுதலும், அவன் மமதையை அறிந்த முருகக் கடவுள், "நீ யாது தொழில் புரி கின்றனை?" என்று வினவ; "நான் படைத்தல் தொழில் செய்கின்றவன்," என்று பிரமன் கூறி னன். "படைத்தல் தொழிலைச் செய்கின்ற உனக்கு வேதம் தெரியுமா?" என்று கேட்க, "சிவபிரான் ஆதிகாலத்தில் வேதங்களையெல்லாம் உபதேசித்தனர். எனக்குத் தெரியும்," என்றான். "அப்படியானால் இருக்குவேதத்தைச் சொல்வாய்" என்று கூற, பிரமன் பிரணவத்தை முதற்கூறி வேதம் சொல்லத் தொடங்கும்பொழுது, "பிரமனே நில்! முதலிற் கூறிய பிரணவத்தின் பொருளைச் சொல்வாய்" எனலும், பிரமன் பொருள் தெரியாது மயங்கி விழித்தான். உடனே முருகக் கடவுள் பிரமனது நான்கு தலைகளும் குலுங்கும்படி குட்டிச் சிறையிடுவித்தார்; எல்லா வற்றையும் தாமே படைக்கத் தொடங்கினார். பிரமனுடன் வந்த தேவர்கள் மனநடுக்கத்துடன் தங்கள் பதவிகளை அடைந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10. பிரமனைச் சிறை நீக்கியது

பிரமதேவனை முருகக் கடவுள் சிறையில் வைத்துச் சிலகாலம் செல்ல, விஷ்ணுமூர்த்தி தேவர் முனிவர்களுடன் திருக்கைலாசத்தை யடைந்து, நந்திதேவரிடம் விடைபெற்றுச் சிவ பெருமானை வணங்கிப் பிரமதேவனைச் சிறை யிட்டதைக் கூறி, "அவனைச் சிறை விடுத்தருள வேண்டும்," என்று பிரார்த்தித்தார். சிவபெரு மான் நந்திதேவரைப் பார்த்து, "நமது உத்தரவை முருகனுக்குத் தெரிவித்துப் பிரமனைச் சிறையி னின்றும் விடுவித்து அழைத்து வருவாய்!" என்று அனுப்பியருளினார். நந்திதேவர் கந்தமாதனத் திற்குச் சென்று, சிவபெருமானுடைய கட்டளை யைப் பணிந்து தெரிவித்தார். முருகக் கடவுள் நந்திதேவரைப் பார்த்து, "பிரமனைச் சிறையி னின்றும் விடோம், இங்கு நிற்பாயாகில் உன்னை யும் சிறைப்படுத்துவோம்," என்றார். நந்திதேவர் அஞ்சிச் சிவபெருமானிடஞ் சென்று நடந்ததைக் கூறி வணங்கினர். சிவபெருமான் தேவர் முனிவர் சூழ, கந்தமாதனத்தை யடைதலும், முருகக் கடவுள் வந்து வணங்கி வீற்றிருக்கச் செய்தார். "மைந்தனே! பிரமனைச் சிறையி னின்றும் விடுவாய்," என்று அருளினர். "தந்தையே! படைத்தல் தொழில் செய்பவ னுக்கு வேதம் முழுவதும் தெரிந்திருக்கவேண்டும்; வேதத்தின் முதலாயுள்ள பிரணவத்தின் பொருள் தெரியாத இவன் படைத்தல் தொழிலைச் செய்வது எப்படி? மனதில் அகந்தையும் நீங்கப் பெற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றிலன்; ஆதலாற் சிறை விடமாட்டேன்," என்ருன் முருகன். சிவபெருமான், "என்னே உனது செயல்! நந்தியை அனுப்பித் தெரிவிக்கவும் நீ விடவில்லை; நாம் நேரிற் சொல்லவும மறுக்கின்றனை," என்று கோபங் கொள்பவரைப் போலக் கூறியருள; முருகக் கடவுள் ஏவலரால் பிரமனைச் சிறையினின்றும் நீக்கிச் சிவபெருமான் முன் விடுத்தனர். சிவபெருமான் பிரமனுக்கு அருள் செய்து, "இன்றுமுதல் நீயே படைத்தல் தொழிலைச் செய்வாய்!" எனப் பணித்துக் குமாரக் கடவுளை மடியிலிருத்தி "பிரணவத்தின் பொருள் உனக்குத் தெரியுமாறுற் சொல்வாய்" என்ருர். முருகன், "அது முறைப்படி மறைவாக உபதேசித்தல் வேண்டும்," என்ருன். சிவபிரான் தமது வலக்காதைக் கொடுத்துச் "சொல்வாய்," என்று கேட்க முருகக் கடவுள் பிரணவப்பொருளைச் சொல்லியருளினர். சிவபிரான் அருள்செய்து திருக்கைலாசத்தையடைந்தார். குமாரக் கடவுள் அகத்திய முனிவருக்கு ஓங்காரப் பொருளையும் சிவாகமங்களையும் உபதேசித்தருளினுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11. விடை பெற்றுப் போருக்குப் புறப்படல்

விஷ்ணுமூர்த்தியின் புதல்வியராகிய அமுதவல்லி, சுந்தரவல்லி என்னுமிருவரும் சரவணப் பொய்கைக் கரையில் அருந்தவஞ் செய்தனர். முருகக்கடவுள் அவர் முன் தோன்றி, "எம்மைக் குறித்துத் தவஞ் செய்யும் நீவிர் விரும்பிய வரம் யாது?" என்ன; "எங்களை மணஞ் செய்தருள வேண்டும்," என்று விண்ணப்பம் செய்தனர். குமாரக்கடவுள், "அமுதவல்லி இந்திரன் புதல்வியாய்ப் பொன்னுலகத்திலும், சுந்தரவல்லி நம்பியரசன் புதல்வியாய்ப் பூவுலகத்திலும் இருப்பீர்களாக; யாம் முறைப்படி அங்கு வந்து மணஞ் செய்வோம்," என்று வரங் கொடுத்துத் திருக்கைலாசத்தை அடைந்தனர்.

அமுதவல்லி பெண் குழந்தையாய் இந்திரனை யடைந்தாள். இந்திரன் வெள்ளை யானையைப் பார்த்து, "இவள் எம் புதல்வி; அன்போடு வளர்க்குதி!" என்றான். யானை வளர்த்தலால் தெய்வயானை என்னும் நாமம் பெற்று வளர்ந்து வருவாளாயினள். சுந்தரவல்லி தொண்டைநாட்டு வள்ளிமலையை யடைந்து, வேடுவர்க்கதிபதியாகிய நம்பிராசனது புதல்வியாய் வளர்ந்து வருவாளாயினள். இவை இங்ஙனமாக,

இந்திரன் முதலிய தேவர்கள் எல்லோரும் திருக்கைலாசத்தில் சிவபெருமானை யடைந்து, தாம் சூரனாற் படுந் துன்பத்தை முறையிட்டுத் தம்மைக் காப்பாற்றும்படி வேண்டினர். சிவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரான் உருத்திரர் பதினொருவரையும் பதினொரு படைக்கலங்களாக்கி, ஒரு வேற்படையையும் உண்டாக்கிக் குமாரக்கடவுளிடம் கொடுத்து, ஏறிச் செல்வதற்குச் சிறந்த தேர் ஒன்றையும் ஆக்கிக் கொடுத்து,—“ மைந்தனே ! சூரன் முதலிய அவுணர்களைச் சங்கரித்துத் தேவர்களைச் சிறை மீட்டு வருவாய் !” என்றருளினார். வீரர்கள், கணநாதர்கள் யாவருக்கும் வேண்டிய ஆயுதங் களையும் உண்டாக்கிக் கொடுத்தருளினார்.

முருகக் கடவுள் சிவபெருமானையும் உமா தேவியாரையும் வணங்கி யருள்பெற்றுப் ,புறப் பட்டார். விஷ்ணு, பிரமா, இந்திரன் முதலிய தேவர்களும், வீரவாகு முதலிய வீரர்கள் இலக் கத்தொன்பதின்மரும், இரண்டாயிரம் வெள்ளம் பூத சேனைகளும், கணநாதர்களும் புடை சூழ்ந்து வர, வாயுதேவன் செலுத்தும் தேரின்மீதேறி யருளிப் பூமியில் வழிக்கொண்டு செல்வாராயினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12. தாரகன் வதை

முருகக்கடவுள் சேனைகளுடன் வழிக் கொண்டு செல்லும்பொழுது, தாரகாசுரன் வசிக்கின்ற கிரவுஞ்சமலையோடு சேர்ந்த மாயமா புரி சமீபித்தது. நாரத முனிவர் குமாரக்கடவுளை யண்டந்து வணங்கி, "சுவாமி, சூரபதுமன் தம்பி யாகிய தாரகாசுரன் கிரவுஞ்சன் என்னும் அசுர னோடு தங்கியிருக்குமிடம் இதுவாகும்; கிரவுஞ்சன் மாயைகளில் மிக வல்லவன்! இவ்வழியால் செல் லும் முனிவர் முதலியோரை மயக்கித் துன் புறுத்துகின்றவன்; ஒருகாலத்து அகத்திய முனி வர் அவ்வழியாற் செல்லும்பொழுது, அவரை மயக்க, அவர் கோபங் கொண்டு தேவரீரது வேற் படையால் அழியக்கடவதென்று சாபமிட்டனர்; அதனால் வானளாவி இம்மலை நிற்கின்றது. இதில் வசிக்கும் தாரகாசுரனைச் சங்கரித்தால், அவன் மூத்தோராகிய சிங்கமுகனையும் சூரனையும் அழித் தல் இலகுவாகும்!" என்று விண்ணப்பஞ் செய் தனர். "அப்படியே செய்வோம்," என்று அருள் புரிந்து, வீரவாகுதேவரைப் பார்த்து, "இலக்கத் தெட்டு வீரர்களோடும் ஆயிரம் வெள்ளம் பூத சேனைகளும், கணத் தலைவர்களும் சூழச் சென்று தாரகனை வளைத்துப் போர் தொடங்குதி; யாம் பின்னர் வருவேம்," என்று பணித்து; வீரர் களுக்கும் கணத் தலைவர்களுக்கும் தேவ தச்சனால் அநேகம் தேர்களை யுண்டாக்குவித்துக் கொடுத் தருளினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரவாகுதேவர், வீரரும் சேனைகளும் சூழப் போய்க்கிரவுஞ்சமலையைச் சூழ்ந்து போர் செய்யத் தொடங்கினர். இதனைத் தூதுவரால் அறிந்த தாரகாசுரன் சேனைகளோடு வந்து போர் செய்யத் தொடங்கினன். இருபக்கத்துச் சேனைகளும் போர் செய்ததிற் பலர் இறந்தனர். தாரகன் கோபங்கொண்டு, பூதரும், வீரரும் அஞ்சி யோடும்படி போர் செய்தான். வீரவாகுதேவர் எதிர்த்து அசுர சேனைகளை அழித்துத் தாரகனுந் திகைக்கும்படி போர் செய்தார். தாரகன் ஒரு மாயையை நினைத்துத் தோற்று ஓடுபவன்போல உள்ளேயோடினான். "இவனைப் பிடித்துக் கட்டிக் கொண்டு போவேன்," என்றெண்ணி வீரவாகுதேவர் பின் தொடர்ந்தார். வீரர்களும் அவர் பின் தொடர்ந்து சென்றார்கள். கிரவுஞ்சன் மாயையினால் அவர்கள் எல்லோரையும் மயக்கி இறந்தவர் போல் கிடக்கச் செய்தான். நாரதர் முருகக்கடவுளை யடைந்து, இச் சம்பவங்களைக் கூறினார். முருகக்கடவுள் சேனைகளோடு எழுந்தருளி, தாரகனோடு யுத்தஞ் செய்து அவன் முகத்திலிருந்த துதிக்கையையும், கொம்புகளையும் அறுத்து விழுத்தினார். அவன் முருகக்கடவுள் மீது தெய்வப் படைக்கலங்களை விட்டான். அவைகளெல்லாம் வந்து பக்கத்தில் வணங்கி நின்றன. அதைக்கண்டு ஆச்சரியமடைந்து, சிவப் படைக்கலத்தை விட்டான். முருகக்கடவுள் அதைத் திருக்கரத்தாற் பிடித்தருளினார். பின்பு தமது வேற்படையைச் செலுத்தி அருளினார். அவ்வேற்படை தாரகனையும் கிரவுஞ்சமலையையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கரித்து, அங்கே மயங்கிக் கிடந்த வீரர்களையும் எழுப்பிவிட்டு, ஆகாயவழிச் சென்று கங்கையில் முழுகி இறைவன் திருக்கரத்தில் வந்திருந்தது.

வீரர்களெல்லோரும் முருகன் பக்கலில் வந்து வணங்கி நின்றனர். தாரகன் விடுத்த சிவப் படைக்கலத்தை முருகக்கடவுள் வீரவாகு தேவரிடம் கொடுத்தருளினர். போர்க் களத்தில் இறந்தவர்க ளெல்லோரையும் எழுப்பி, அவ் விடத்தினின்றும் பெயர்ந்து செல்லும்போது, தேவகிரி என்னும் மலை சமீபித்தது. பகல் கழிந்து இராக்காலம் வந்தமையால், அம்மலையில் தேவத் தச்சனால் ஆலயம் அமைப்பித்து அங்கே தங்கியிருந்தனர். தாரகனையும் கிரவுஞ்சனையும் சங்கரித்த மகிழ்ச்சியினால் தேவர்கள் முருகக் கடவுளை அமிர்தத்தால் அபிஷேகித்துப் பூசை செய்து வணங்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13. அசுரேந்திரன் மகேந்திரம் சென்றது

தாரகாசுரன் இறந்தமையைத் தூதுவரால் அறிந்த அவன் மனைவியும் மற்றைத் துணைவியரும் அவன் உடல்மேல் விழுந்து தாங்கொணாத் துயரத்தோடு புலம்பினர். தாரகன் புதல்வன் அசுரேந்திரன் நிகழ்ந்தவற்றை யறிந்து தாயின் கால்களில் விழுந்து புலம்பி ஒருவாறு தெளிந்து அவர்களையெல்லாம் அனுப்பிவிட்டுத் தந்தையின் ஈமக்கடன்களைச் செய்துமுடித்தான். தாயாகிய சௌரியும் மற்றைத் துணைவியரும் நாயகனுடன் இறப்போம் என்று கூற, அசுரேந்திரன் தாயை வணங்கி, "என்னைப் பாதுகாத்திருப்பீராக!" என்று கூறினன். அவள் கோபித்து, மறுத்துரைத்து அக்கினி அமைத்துத் தரும்படி கூறினள். அவ்வாறே அவன் அக்கினி மூட்டிக் கொடுத்தான். சௌரியும் மற்றைத் துணைவியரும் அக்கினியில் விழுந்து இறந்தனர்.

அசுரேந்திரன் மிகுந்த துயரத்தோடு வீரமா மகேந்திரபுரியை அடைந்து சூரனுடைய கால்களில் விழுந்து, தன் தந்தை இறந்ததும் தகனஞ் செய்து வந்ததும் கூறி அழுதான். அதைக் கேட்ட சூரன் அடங்காக் கோபங்கொண்டு சகோதரனிறந்த துயரத்தால் வாடி, பின் மனந் தெளிந்து, "இப்பொழுதே சென்று சிவன் பாலனைக் கொல்வேன்!" என்றான். அமோகன் என்னும் மந்திரி சூரனை நோக்கி, "அரசே! பகைவருடைய எல்லாப் பலங்களையும் ஆராய்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்தே போர் செய்யச் செல்வது முறையாகும். ஒரு பாலகன்மீது தாங்கள் போருக்குப் புறப் படுவது தகுதியன்று; ஒற்றரையனுப்பி ஆராய்ந்து அதன் பின்னர் தக்கதைச் செய்வதே அரசர் முறையாகும்," என்று கூற, சூரன் அதனையேற் றுத் தூதுவரை யழைத்து, "பூமியில் வந்திருக் கின்ற சிவகுமாரனது நிலைமைகளையெல்லாம் ஆராய்ந்து வருவீர்!" என்று கட்டளையிட்டு, முன்போல அரசு செய்திருந்தான்.

தேவகிரியில் தங்கியிருந்த குமாரக்கடவுள் சூரியன் உதயமானதும் யாவருஞ் சூழப் புறப்பட்டு, திருக்கேதாரம், காசி, திருப்பருப்பதம், திருவேங் கடம், திருக்காளத்தி, திருவாலங்காடு, காஞ்சி புரம், முதலிய பல தலங்களைத் தரிசித்து மண்ணி யாற்றின் வடகரையில் வந்து சேர்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14. குமாரபுரி

மண்ணியாற்றங்கரையை அடைந்ததும் பகற் பொழுது கழிந்தது. பிரமன் முதலியோர் முருகக் கடவுளை வணங்கி, "இந் நதிக்கரை மணல் பரந்து சோலைகள் செறிந்து மனோரம்மியமாய் இருக்கின்றது; இரவு இங்கு தங்கியருளுக," என்று வேண்டினர். முருகக்கடவுள் அதற் கிசைந்து மயனால் ஆலயம் அமைப்பித்து, எல்லோரையும் அவரவர்க்குரிய இடங்களி லிருக்கச்செய்து, தாமும் வீற்றிருந்தருளினார். இது இவ்வாறாக,

நிலாவொளி வீச, பூஞ்சோலையிலும் மணல் மேடுகளிலும் இந்திரன் உலாவி வந்தான். அப்பொழுது சீர்காழியில் மனைவியுந் தானும் ஒளித்து வந்திருந்தகாலத்து இருவர் அணிகலன்களையும் ஒரு முடிப்பில் அமைத்து வன தேவதையிடம் கொடுத்திருந்தான். அத் தேவதை இந்திரன் முன் வந்து நகை முடிப்பை வைத்து வணங்கி நின்றது. முடிப்பை அவிழ்த்ததும் மேலே இந்திராணியின் அணிகலன்களைக் கண்டு காமக் கனல் சுட வெதும்பினான். அயலில் நின்ற ஏவலரைப் பார்த்து இந் நகைமுடிப்பைப் பேணி வைத்திருங்கள்," என்று கூறி, வன தேவதையைச் செல்லும்படி விடை கொடுத்தான். இந்திரன் நிலாவிலுலாவி இந்திராணியை நினைந்து புலம்பியும், பெருமூச்சு விட்டும் இடைவிடாது அநுபவித்த இன்ப நிலையை யெண்ணி வருந்தினான். சூரியன் உதயமானதும் முன்னைய எண்ணங்களை மறந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகக்கடவுள் முன்னிலையை அடைந்து வணங்கி நின்றான். குமாரக்கடவுள் சிவபூசைக்கு வேண்டிய பொருள்களை யெல்லாந் தருக என்று பணித்தார். இந்திரன் எல்லாப் பொருள்களையும் வருவித்தான். சிவாகமவிதிப்படி சிவபெருமானைப் பூசை செய்தார் முருகக்கடவுள். சிவபெருமான் உமாதேவியாரோடும் காட்சி கொடுத்து, "மைந்தனே! உனது பூசைக்கு மகிழ்ந்தோம்; இந்தப் படைக்கலம் வேறு எவரும் பெற்றிருக்கவில்லை! ஒரே முறையில் எல்லாவற்றையும் அழிக்க வல்லது இப்படை; நீயே இது வைத்திருக்கத் தக்கவன்," என்று சர்வசங்காரருத்திரப் படைக்கலமொன்றைக் கொடுத்து மறைந்தருளினர்.

பின்பு முருகக்கடவுள எழுந்தருளிப் பாலை நிலத்தைக் கடந்து செல்லும்பொழுது, அக்கினி மயமாய் நிழல் நீர் சிறிதுமின்றி மிருகங்கள் பறவைகளெல்லாம் தவிக்கின்ற அப் பாலைவனம் குளிர்ச்சியடைந்தது. திருப்பரங்குன்றிலிருந்த பராசர முனிவரின் புதல்வர் அறுவரும் முருகக் கடவுள் வருகையை யறிந்து, வந்து வணங்கினர். இந்திரன் முருகக்கடவுளை வணங்கி, "இவர்கள் பராசர முனிவரின் புதல்வர்; முன்னொருகாலத்து, சரவணப் பொய்கையிலுள்ள மீன்களைப் பிடித்துக் கரையில் விட்டு விளையாடினர்; அங்கே வந்த அவர்களின் தந்தை அவர்களை, 'மீன்களாகக் கடவீர்கள்' என்று சாபமிட்டனர்; 'அச்சாபம் எப்போது நீங்கு'மென்று இவர்கள் வேண்ட, 'இப்பொய்கையில் முருகன் குழந்தை வடிவாய் இருப்பான்; அம்பிகை வந்து அவனை யெடுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுது பால் சுரந்து பொய்கையிற் பாயும்; அதனை உண்டவுடன் முன்னை உருப்பெறுவீர்' என்றார்; அவ்வண்ணமே சாபம் நீங்கப்பெற்று வந்தோர் இவர்!" என்று கூறினன். முருகக் கடவுள் அவர்களையும் உடன்வருக எனப் பணித்துப் பாலைவனத்தைக் கடந்து, திருச்செந்தூரை யடைந்து மயனால் ஆலயம் அமைப்பித்து வீற்றிருந்தருளினார். பலவிதமான பணிகளைச் செய்து தேவர்கள் வணங்கினர். முருகக்கடவுள் இந்திரனைப் பார்த்து அசுரர் தோற்றம் முதலிய வரலாறுகளைச் சொல்லும்படி பணித்தார். இந்திரன் வியாழபகவானை வேண்ட வியாழபகவான் முருகக் கடவுளைப் பணிந்து சொல்லுவாராயினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15. மாயை வரலாறு

அறுபத்தாறு கோடி அவுணருக் கரசனுகிய அசுரேசன் என்பான் மங்கலகேசி யென்னும் அரக்கியை மணந்து, சுரசை என்னும் பெண்ணைப் பெற்ருன். அவள் வளர்ந்தபின்பு சுக்கிரன் அவளுக்குச் சகல தீமைகளையும் விளைவிக்கத்தக்க மாயா வித்தைகளெல்லாவற்றையும் கற்பித்தான். அவளது வித்தையின் வல்லபத்தைப்பார்த்து அவளுக்கு "மாயை" எனப் பெயரிட்டான். அசுரர் சிறுமையையும், நந்திதேவர் தேவர்களுக்குக் கொடுத்த சாபத்தையும் நினைத்து இனிமேல் வரப்போகும் நிகழ்ச்சிகளையு முணர்ந்து, மாயையை அழைத்து இவ்வாறு சொல்வான்:— "தேவர்களால் அவுணர்கள் வலிமைகுன்றி உனது தந்தையும் ஒடுங்கியிருக்கின்ருன். உன்னுல் அசுரகுலம் தழைக்க வேண்டும்; நீ பேரழகுவாய்ந்த வடிவுடன் சென்று காசிபனை மயக்கி இரவிற்கூடிப் புதல்வரைப் பெற்று; அவர்கள் இம்மையிற் சகல வளங்களையும் பெறக்கூடிய தவஞ் செய்யும்படியும், அதனுற் பகைவராகிய தேவர்கள் எல்லோரும் துன்பமடையும்படியும் உபாயங்களைச் சொல்லித் தவஞ் செய்யவிட்டு வருவாய்!" என்ருன். மாயை வணங்கி விடைபெற்றுக்கொண்டு தந்தையை அடைந்து, சுக்கிரன் கட்டளையைச் சொல்லி, உத்தரவுபெற்று, காசிபன் தவஞ்செய்யும் இடத்தைத் தேடிச் சென்ருள். அங்கே பூஞ்சோலைகள், தடாகங்கள், செய்குன்றுகள், அலங்கார மாளிகைகள் எல்லாந் தோற்றுவித்துப் பேரழகுவாய்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவத்துடன் நின்றாள். காசிபன் அந்த அற்புதத் தோற்றங்களைக் கண்டு வியந்து, "இந்த வனத்தில் இவைகளைக் கணப்பொழுதில் உண்டாக்கியோர் யாவர்?" என்று அதிசயித்தான்; மாயையைக் கண்டான்; மயங்கினான்; காம நோயாற் கலங்கினான்; அவளை இரந்தான். அவள் முதற் சாமத்திற் கூடிச் சூரனையும், இரண்டாம் சாமத்தில் சிங்கவடிவமாய் இருவரும் கூடிச் சிங்கமுகனையும், மூன்றாஞ் சாமத்தில் யானைவடிவமாய்க் கூடித் தாரகனையும், நாலாஞ் சாமத்தில் ஆட்டுவடிவங்கொண்டு கூடி அசமுகியையும், பின்னும் பல மிருகவடிவங்களைக்கொண்டு அறுபதினாயிரம் வெள்ளம் அசுரர்களையும் தோற்றுவித்தாள். வியர்வையில் தோற்றினோர் ஓரிலக்கத்து நாற்பதினாயிரம் வெள்ளம் அசுரர். இரவு கழிந்தது; இருவருந் தத்தம் பழைய வடிவங்களைக் கொண்டனர்.

சூரியன் உதயமானதும் மாயை இரண்டிலக்கம் வெள்ளம் சேனைகளோடும் தன் புதல்வர்கள் நிற்பதைப் பார்த்து மகிழ்ந்தாள். காசிபன் கண்டு, "இறைவன் செயல்! மாயையினால் இது நிகழ்ந்தது" என்று அளவிலா ஆச்சரியம அடைந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16. மார்க்கண்டேயர்

சூரன் சேனைகளை நிறுத்திவிட்டுத் தம்பியர் பின்வரப் பெற்றோரை அடைந்து வணங்கி, "எம்மைத் தோற்றுவித்த தந்தை தாயரே! யாங்கள் செய்வது என்ன?" என்று வினவினன். காசிபன் உபதேசிக்கின்றான்:— 'சான்றவர் ஆய்ந்திடத் தக்கவாம் பொருள் மூன்றுள. அவை: பதி, பசு, பாசம் என்பன; பதியாவது சிவனெனப்படுங் கடவுள்; பசு என்பது அளவில்லாதனவாகிய உயிர்கள்; பாசம் என்பது உயிர்களைப் பற்றியிருக்கும் ஆணவம், கன்மம், மாயை என்பன. உயிர்கள் பாசங்களினின்றும் நீங்கிச் சிவனையடைதலே பிறவியின் பயன். சிவனை அடைதற்கு உபாயம் தவஞ் செய்தலே; தவத்தால் ஆகாதது ஒன்றுமில்லை! எல்லாப் பயன்களையும் தவத்தால் அடையலாம். அதற்கு ஒருகதை சொல்வேன், கேளுங்கள்: முன்னொருகாலத்திற் காசிக்கு அருகிற் கடகம் என்னும் நகரத்தில் அந்தணர்குலத்தில் குச்சகன் என்றொருவன் வாழ்ந்துவந்தான். அவனுக்கு ஒரு புதல்வன் கவுச்சிகன் என்பான்; வேதங்களெல்லாம் படித்தவன். பிறவித் துன்பத்தை நீக்க நினைந்து, சிவனைத் துதித்துத் தவஞ்செய்ய விரும்பி ஒரு தடாகக் கரையை அடைந்தான். அங்கு ஓரிடத்திலிருந்து சிவனைநோக்கித் தவஞ்செய்தான். தன்னை மறந்திருக்கும் முனிவன் மேனியில் மிருகங்கள் தினவுதீர ஆவுரிஞ்சு கல்லெனநினைந்து உராய்ந்துசெல்லும். முனிவன் இதை யுணராது சிவனிடம் படிந்த சிந்தையனுய்த் தவஞ்செய்யும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுது, திருமால் முன்னே தோன்றித் தவத்தை மெச்சி 'உன் பெயர் மிருகண்டுயென்,' என்று சொல்லி, 'சிவபிரான் திருவருள் உண்டாக' என்றார் முனிவன் எழுந்து கைதொழுது வணங்கினன். திருமால் மறைந்தருள, முனிவன் தன்னிடத்தை யடைந்து, நிகழ்ந்தவற்றைத் தந்தைக்குக் கூறினன். அவர் கேட்டு மகனைப் புகழ்ந்து தழுவிக்கொண்டார். பின் தந்தையார் மிருகண்டுயரை வேதவிதிப்படி மணஞ்செய்ய வேண்டும் என்றார். அதற்கு அவர், 'மனைவாழ்க்கையை மேற்கொள்ளல் மோட்சம் அடைதற்குத் தடையாகும்,' என்று பல நியாயங்களைக் காட்டி மறுத்தார். பின்னும் புதல்வரை நோக்கி, 'வேதங்களிற் சொல்லப்பட்டதும், உலக வழக்கமும் இதுவே; என் சொல்லை மறுக்காது புதல்வரின்பொருட்டு மணஞ் செய்ய வேண்டும்' என்றார். கவுச்சிகர், 'தந்தை சொல் மறுப்பது மைந்தர்க்கு முறையன்று; யான் சொல்லும் குற்றங்களில்லாத பெண் கிடைத்தால் மணஞ் செய்வேன்,' என்று தொண்ணூற்றைந்து குற்றங்கள்வரையிற் கூறி, 'இக்குற்றங்கள் இல்லாதபெண்ணாய் இருத்தல்வேண்டும்!' என்றார். குச்சகர் மகிழ்ந்து பல இடங்களிலும் தேடிச்சென்று, சோழநாட்டில் அனுமயம் என்னும் வனத்தில் வசிக்கும் உசத்திய முனிவரிடம் போனார். அவர் தழுவி யுபசரித்து, "வந்ததுஎன்?" என வினவ, 'குச்சகர் எனது புதல்வனுக்கு உனது புதல்வியை மணம்பேச வந்தேன்,' என்றார். அவர் மகிழ்ந்து உடன்பட, அவர் அங்கே சிலநாள் வசித்தனர். ஒரு தினம் விருத்தை யென்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னும் அக் கன்னிகை தோழியரோடு சென்று, கான் யாற்றிலாடிப் பூஞ்சோலையில் மலர் பறித்துக் கொண்டு வரும்பொழுது ஒருமத யானை துரத்தி வர, எல்லோரும் பிரிந்து ஓடினர். விருத்தை யோடும்போது புதர்களால் மறைக்கப்பட்ட ஓர் பாழ்ங்கிணற்றில் விழுந்து இறந்தாள். தோழியர் எங்குந் தேடிக் காணுமல் அவள் தாயிடம் வந்து நிகழ்ந்ததைச் சொல்லிப் புலம்பினர். தாய் முனி வருக்கறிவித்துத் தோழியரோடுபோய் ஆபரணஞ் சிந்திக்கிடக்கின்ற வழியால் தேடிப் பார்த்துப் பாழ்ங்கிணற்றில் விருத்தை இறந்துகிடக்கக் கண்டு பிரேதத்தை வெளியே எடுத்து எல்லோரும் புலம் பினுர்கள். குச்சகர் அதுகண்டு உசத்திய முனிவ ரைத் தேற்றி, 'விருத்தையின் உடலைத் தைலத்தி லிட்டு வையுங்கள்! நாளை அவளை எழுப்பித்தருகின் றேன்!' என்று சொல்லி ஒரு குளக்கரையை யடைந்து தவஞ்செய்தார். அந்த யானையே அவ ரைத் தூக்கிப் பிடரியில் வைத்துக்கொண்டு நடந் தது அந்த யானையின் வரலாற்றை ஞானத்தால் அறிந்தார்:

பெருஞ் செல்வனுயிருந்த தருமதத்தன் என் னும் வணிகனிடம் இரசவாதிபோ லொருவன் வந்து, 'ஒன்று கோடியாகச் செய்வோம். இரும்பை யும் பொன்னுக்குவோம்; உன்னிடமுள்ள பொருள் களை யெல்லாம் கொண்டுவா,' என்றுன். வணிகன் தருமச்சொத்துக்களையும் விற்றுத் தன்னிடமுள்ள பொருள்களையும் திரட்டிக் கொடுத்தான். இரச வாதி காற்று நுழையாத ஓர் அறையில் ஓமகுண்ட முண்டாக்கி அக்கினி வளர்த்தான். வணிகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்த பொருள்களையெல்லாம் ஒளித்துவைத்துக்கொண்டு, முன்னமே இரும்பு பொதிந்து தான் வைத்திருந்த ஒரு குகையை வணிகனிடங் கொடுத்து அக்கினியில் வைப்பித்தான். பின் நெருப்பைச் சிறிது தணித்துப் புகையை யுண்டாக்கி, 'வணிகனே! நீ ஊண், உறக்கம், மாதரோடு கலத்தல் ஆதியன இன்றி இவ்விடத்தில் அக்கினியை வளர்த்துக்கொண்டிரு; யான் காளிகோயிலில ஒரு யாகம் முடித்துவிட்டு மூன்று நாள் கழித்து வருவேன்!' என்று சொல்லிப் போனான் மூன்றுதினம் கழிந்தும் இரசவாதி வராமையால் காளிகோவிலிலும் ஊர் எங்கணும் தேடியுங் காணாதவனாய் வந்து, ஓமகுண்டத்தில் வைத்த குகையை யெடுத்து உடைத்தான். குகையில் இருந்தன யாவும் இரும்பாயிருக்கக் கண்டு, 'ஐயையோ! ஏமாந்துபோனேன்!' என்று வருந்திச் சிலகாலம் நோயுழந்து பின் இறந்தான். தருமச் சொத்துக்களை விற்றதால் அவனே இந்த யானையாய்ப் பிறந்தான், என்று அறிந்து; குச்சகர் தமது தவத்தில் ஒரு சிறிது யானைக்கு உதவினர். உடனே யானை தேவவடிவம் பெற்று, முனிவரை வாழ்த்தி விமானத்திலேறி ஆகாயவழியே சென்றது. முனிவர் பின் இயமனை நோக்கித் தவஞ் செய்தார். இயமன் அவர் முன் தோன்றி, 'நீ விரும்பிய வரம் யாது?' என்ன, குச்சகர் வணங்கி, 'இறந்த விருத்தையின் உயிரைத் தர வேண்டும்!' என்றார். இயமன் அக்கணமே விருத்தையின் உடலில் உயிரைச் சேர்ப்பித்து, 'கேட்டபடி வரந் தந்தோம்!' என்று கூறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைந்தான். குச்சகமுனிவர் உசத்தியமுனிவர் ஆச்சிரமத்திற்கு நேரேவந்தார். இதனிடையில் விருத்தை கைகால்களை யசைத்து உறங்கினவள் எழுந்தாற்போன்று எழுந்தாள். இதைக்கண்ட எல்லோரும் ஆச்சரியமடைந்தனர். விருத்தை நடந்த வரலாற்றையெல்லாம் கூறினாள். உசத்தியர் குச்சக முனிவரை எதிர்கொண் டழைத்து வந்து ஆச்சிரமத்தி லிருத்தி, "மணம் பேசவென்று தாங்கள் இங்குவந்தது எனது புதல்வியின் உயிரை மீட்கவல்லவா?" என்று பாராட்டினர்.

பின்பு கவுச்சிகருக்கும் விருத்தைக்கும் சுப முகூர்த்தத்தில் திருமணம் நிறைவெய்தியது. சில காலம் குச்சகர் இவர்களது இல்வாழ்க்கைச் சிறப்பைப் பார்த்து மகிழ்ந்து, பின் தவஞ்செய்து மோட்சமடைய வடதிசைக்குச் சென்றார். கவுச்சிகரும் மனைவியும் மிருகண்டு என்னும் புதல்வனைப் பெற்றனர். அப்புதல்வற்கு உபநயனம் முடித்துக் கவுச்சிகருந் தமது தந்தையைப்போலத் தவஞ் செய்யச் சென்றார். மிருகண்டு வேதம் முதலாயின கற்று, பிரமசரிய ஒழுக்கம் முடித்து முற்கலமுனிவர் மகளாகிய மருத்துவதியை மணஞ்செய்தார். பல ஆண்டுகள் கழிந்தும் புத்திரப்பேறின்மையால் வருந்திய மிருகண்டு காசியை யடைந்து மணிகர்ணிகையென்னும்கோயிலிற் சிவபெருமானை நோக்கித் தவஞ்செய்தார். ஓராண்டு செல்லச் சிவபெருமான் தோன்றியருளி, "முனிவனே! என்னவரம் வேண்டும்?" என்றார். மிருகண்டு முனிவர் வணங்கி, "புத்திரப்பேறு அருள்க,"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றார். "நூறுவயதும், பிணியும், அவயவக் குறைவும் உள்ள புதல்வன் வேண்டுமோ, அல்லது அழகும், அறிவும், பிணியின்மையும், நம்மிடத் தன்பும் பதினறுவயதுமுள்ள புதல்வன் வேண்டுமோ?" என்று சிவபெருமான் கேட்டருள, மிருகண்டு முனிவர், "எம்பெருமானே! வயது பதினாறாயினும் தேவரீரிடத்து அன்புள்ள புதல்வனே வேண்டும்!" என்றார்.

மாண்டகு தவத்தின் மேலா
  மறைமுனி யவற்றை யோரா
ஆண்டவை குறுகி னலு
  மறிவுள னாகி யாக்கைக்
கீண்டொரு தவறு மின்றி
  யெம்பிரா னின்பா லன்பு
பூண்டதோர் புதல்வன் றனே
  வேண்டினன் புரிக வென்றான்.

—மார்க்கண்டேயப்படலம் செ. ௩௨௧

"அப்படியே தந்தோம்" என்று இறைவன் மறைந்தருளினர். அப்பொழுதே முனிவர் மனைவியார் கருவுற்று ஒரு ஆண்மகவைப் பெற்றார். அவரே மார்க்கண்டேயர். இம்மார்க்கண்டேயர் இளமையிலே எல்லாக் கலைகளையும் கற்று வல்லவராய்ப் பிரமசரியம் காத்துவந்தார். பதினறு வயது வரவும் தந்தையும் தாயும் மைந்தனைக் காணுந்தோறும் வருந்திப் புலம்புவார். அது கண்ட மார்க்கண்டேயர் தந்தை தாயாரை வணங்கி, "நீங்கள் வருந்தவேண்டாம்! சிவபெருமான் திருவருளால் யமனை வென்றுவருவேன்", என்று சொல்லி, விடைபெற்று மணிகர்ணிகையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைந்து சிவபூசை செய்தார். சிவபெருமான் தோன்றி, "நீ இயமனுக்கு அஞ்சாதே!" என்றருளிச்செய்து மறைந்தார். ஒரு தினம் இயமன் வந்து பாசத்தை வீச, மார்க்கண்டேயர் சிவலிங்கத்தைத் தழுவிக்கொண்டு இறைவனை வேண்டினார். சிவபெருமான் தோன்றி, திருவடிப் பெருவிரலால் இயமனை உதைத்தார்; இயமன் இறந்தான். "நீ என்றும் சிரஞ்சீவியாய் வாழ்வாயாக!" என்று இறைவன் அருள்புரிந்தார். விஷ்ணு முதலிய தேவர்கள் வேண்டுகோளின்படி இறைவன் இயமனை எழுப்பியருளிச் சிவனடியார் பெருமையை எடுத்தோதி விடைகொடுக்க, இயமன் அவரை வணங்கிச் சென்றான். மார்க்கண்டேயர் பல தலங்களையும் தரிசித்துக்கொண்டு பல பிரளயங்களைக் கடந்து பின் முத்தியடைந்தார். யானையைத் தேவனுக்கியதும், இறந்த பெண்ணின் உயிரை மீட்டதும், இயமனை இறக்கச்செய்து மார்க்கண்டேயரை எண்ணில்காலம் இருக்கச் செய்ததும் தவம் அல்லவா? ஆதலால் தவம் செய்து முத்தியின்பத்தைப் பெறுவீர்கள்" என்று காசிபன் உபதேசித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 17. மாயை உபதேசம்

மாயை புதல்வரைப் பார்த்து, "முனிவர் உபதேசித்தது உண்மையே! ஆயினும், தவமுனிவர்களாய் மோட்சம் அடைபவர்க்கே இவ்வுபதேசம் ஏற்றதாகும். நீவிர் இளம் சிறுவர்கள்; உங்களுக்கேற்றதைக் கூறுவேன்" என்று சொல்லத் தொடங்கினுள்: "மக்களுக்குரிய சிறந்த பொருள்கள் இரண்டு உள. அவை: கல்வி, செல்வம், என்பன. அவற்றுள்ளும் கல்வியுடையானும் கொடிய வறுமை வந்தகாலத்துச் செல்வர்பாற் சென்றிரக்க நேரிடும். இவ்வுலகிற் செல்வத்திற் சிறந்தது வேறென்றுமில்லை. எவ்வளவு சிறந்த கல்வியுடையோரும் செல்வமில்லாதிருப்பின் அவர் ஒரு பொருளாக உலகத்தோராற் கருதப்படமாட்டார். எல்லாவிதமான இன்பங்களையும், நன்மையையும், வித்தையையும், கீர்த்தியையும் தருவது செல்வம் ஒன்றே. ஆதலால் இச்செல்வம் முயற்சியுடையாரிடம் சேரும்; இடையறாத ஊக்கம் உடையவராயின் அதிகமாகப் பெருகும். அவ்வகையான செல்வத்தைப் பெற முயலுங்கள். இதுவே நீவிர் உய்தற்கேற்ற உறுதியாகும். இராக்காலத்து எம்மிடத்துத் தோன்றினீராகலின் நீவிர் அசுரராயினீர். உங்களுக்குப் பகைவர் தேவர்கள்; அவர்கள் தம் முயற்சியினுல் உயர்ந்த பதவியிலிருக்கின்றனர். நீவிரும் அவ்வாறு முயற்சிசெய்யும் வகையை யான் கூறுவேன். ஆலந்தீவிலுள்ள உத்தரபூமியே அசுரர் தவஞ்செய்தற் கிடமாம். சேனைகளோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீவிர் மூவரும் சென்று, பெரிய ஓமகுண்டம் அமைத்து, அக்கினியை மூட்டி, அதற்குரியவற்றைச் சொரிந்து, யாகஞ்செய்வீராஞற் சிவபிரான் தோன்றி உங்கட்கு வேண்டிய வரங்களைத் தருவார்!" என்று சொல்லி, யாகம் செய்யும் முறையையும், மந்திரம் முதலியவற்றையும் இந்திரவளம் பெறுதற்குரிய முறையில் உபதேசித்து, "யாகத்திற்கு வேண்டிய பொருள்கள் அனைத்தும் அவ்வப்பொழுது யான் தருவேன்!" என்று கூறிப் புதல்வருக்கு விடைகொடுத் தனுப்பினள். பின்பு காசிப முனியை நோக்கி, "நான் புத்திரரைக் காக்கும் பொருட்டுச் செல்கின்றேன்!" என்று கூறி மாயை அவரைவிட்டுச் சென்றுள். அவள் சென்றதும் காசிபர் அவளை நினைந்து வருந்தினர். பிரமதேவன் இதனை யறிந்து அங்குவந்து, முனிவனை நோக்கி, "காமமே பலவகைத் துன்பங்களையும் தருவதாகும்! அதனை விடுத்துத் தவஞ்செய்வாய்!" என்று தேற்ற, முனிவர் தெளிந்து முன்போலத் தவஞ்செய்தார்; பிரமனுஞ் சென்றுன். மாயையும் சுக்கிரன் ஏவலின்படி புதல்வர் செய்யும் யாகத்திற்கு வேண்டியவற்றையெல்லாம் கொடுக்கநினைந்து. அதன்பொருட்டு ஓரிடத்திலிருந்து தவஞ்செய்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 18. அசுரர் யாகஞ்செய்து வரம் பெற்றது

மாயையின் சொற்படி யாகஞ் செய்யும் பொருட்டுச் சேனைகள் சூழ முன்னணியிற் சிங்க முகனும், பின்னணியில் தாரகனும், நடுவிற் சூரனுமாய் அமைந்து சென்றனர். அப்போது சுக்கிரன் ஆகாயவழியே வந்து மூவரையும் ஆசீர்வதித்துச் சூரன்முன் நின்றான். சூரன், "நீ யார்?" என வினவ, "யான் உங்கள் குலகுருவாகிய சுக்கிரன்; உங்கள நன்மையையே என்றும் விரும்புபவன்; உங்களைக் காண ஆவல்கொண்டு வந்தேன்," என்றான் சுக்கிரன். சூரன் அன்புவார்த்தை கூறிக் குலகுருவாகிய அவரைக் காணக்கிடைத்தது தம் பெரும் பாக்கியமெனப் பணிந்தான். சுக்கிரன் யாகஞ்செய்யும்பொழுது பகைவரால் துன்பம் நேராதபடி காப்பாற்றும சிவனுடைய மந்திரமொன்றைச் சூரனுக்கு உபதேசித்துப் போயினன். சூரன் சேனைகளோடும் ஆலவனத்தை யடைந்து, அவுணர்களால் மலைகளைக் கொணர்வித்து ஆகாயம் வரை யுயர்ந்த பெரிய யாகசாலையை அமைத்து நான்கு திசைகளிலும் வாயில்கள் வைத்து யாகசாலையைச் சூழ மலைகளால் மதிலுண்டாக்கி, அதன்புறத்தே சேனைகளையும் காவலாக வைத்தான். யாகசாலையின் நடுவே பெரிய ஓமகுண்டமொன்றை அமைத்தான். அதைச்சூழ நூற்றெட்டுக் குண்டங்களையும், அவற்றைச் சூழ ஆயிரத்தெட்டுக் குண்டங்களையும் அமைத்தான். யாகம் செய்தற்கு வேண்டும் பொருள்களைப்பெற, மாயையை நினைந்தான். உடனே மாயை நெய்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேன், பால், தயிர், எண்ணெய் முதலியவற்றைக் கடல்கள்போலவும்; சமிதை, ஊன்வகை, மிருக வகை, தானியவகை, பொரி முதலியவற்றை மலைகள்போலவும் அங்கு சேர்ப்பித்தாள். சூரன் அது கண்டு மகிழ்ந்து தாயைப் புகழ்ந்து, ஒவ்வொரு வாயில்களிலும் துர்க்கை, காளிக்கூட்டங்கள், வயிரவக்கூட்டங்களை மந்திரமுறையால் அழைத்துக் காவலாக வைத்தான். உள்ளே ஆயிரத்தெட்டுக் குண்டங்களிலும் தீக்கடைகோலினால் உண்டாக்கிய நெருப்பையிட்டு, சமிதை, நெய் சொரிந்து அவியிட்டு யாகத்தைத் தொடங்கி; அவற்றைச் செய்யும்படி தாரகனை நிறுத்தினான். உள்ளே நூற்றெட்டுக் குண்டங்களிலும் முன் போலத் தொடங்கி, அவற்றை நடத்தச் சிங்கமுகனை நிறுத்தினான். உள்ளேயிருக்கும் பெரிய ஓமகுண்டத்தில் தான் இருந்து வேள்வியைத் தொடங்கி, அநேக காலம் செய்தான். சிவன் முன் தோன்றாமையால் தான் குண்டத்துக்கு நேரே ஆகாயத்தில் நின்று தன் கைவாளினால் தசையை அரிந்து போட்டு இரத்தமே நெய்யாகச் சொரிந்தான். அரிந்த தசைகள் முன்போல வளர்ந்தன. இப்படி அநேககாலஞ் செய்தும் சிவபிரான் வராமையால் யூபத்தம்பத்தில் விழுந்து உருவிப்போய் ஓமாக்கினியில் எரிந்து சாம்பராயினன். தமையன் இறந்ததுகண்டு சிங்கமுகனும் தாரகனும் புலம்ப, சேனைகளும் புலம்பின. சிங்கமுகன் தெளிந்து எழுந்து தன் தலைகளை அரிந்து குண்டத்திலிட்டான். தாரகனுந் தலையை அரிந்து இட்டான். அவை முன்போலத் தோன்றின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கமுகன் தமையனைப்போலத் தானும் விழ நினைந்து மேலேயெழத் துணிந்தான். அப்பொழுது சிவபெருமான் ஒரு கிழப் பிராமணர் போலக் கையிற் றண்டூன்றி அங்கு வந்து சிங்கமுகனைப் பார்த்து, "நீவிர் மிக வருந்துகின்றீர்! உங்கள் இயல்பைச் சொல்வீர்," என்றார். சிங்கமுகன் எல்லாவற்றையுங் கூறினன். பிராமணர், "சூரனைப்போல நீங்களும இறந்துபடாதீர்; சூரனை எழுப்பித்தருவோம்," என்றருளிக் கங்கையை நினைத்தார். கங்கை பெருகிவந்து, ஓம குண்டத்திற் பாய்தலும் சூரன் எழுந்தான். அது கண்டு எல்லாரும் மகிழ்ந்தனர். இறைவன் ஆகாயத்தில் இடபாரூடராய்க் காட்சிகொடுத்து, "நீவிர் விரும்பிய வரம் யாது?" என்ன மூவரும் வணங்கினர். சூரன் "எம்பெருமானே! பூமியிலுள்ள அண்டங்கள் அனைத்தையும் நான் அரசாளவேண்டும்; எனக்கு அழியாத வச்சிர யாக்கை வேண்டும்; எவ்விடங்களிலுஞ் செல்லத் தக்க ஊர்தி வேண்டும்; தேவர்முதல் யாவரையும் வெல்லத்தக்க படைகள் வேண்டும்!" என்று வேண்டினன். சிவபெருமான், "பூமியிலுள்ள ஆயிரகோடி யண்டங்களுள் ஆயிரத்தெட்டு அண்டங்களை நூற்றெட்டு யுகம்வரை அரசுபுரிவீர்!" என்று அருளினர். இந்திரமாஞாலத்தேரும், சக்கரமும், சிங்கமும் கொடுத்து; மேலும் அவன் விரும்பிய ஏனைய வரங்களையும் அருளினர். சிங்கமுகனும் தாரகனும் வணங்க, "நீவிர் சூரனது புயங்கள்போலத் தேவர்களையும் வென்று வாழ்வீர்! நமது சக்தி யொன்றேயல்லாமல் உங்களை வெல்லவல்ல பொருள் யாதுமே கிடையாது!" என்று வரங்கொடுத்து மறைந்தருளினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 19. சுக்கிரன் உபதேசம்

சூரன் முதலியோர் சிவபிரானிடம் வரம் பெற்றுத் தந்தையாகிய காசிப முனிவரை யடைந்து தாம் யாகஞ்செய்து வரம்பெற்ற வரலாற்றைச் சொல்லி, "இனி நாங்கள் செய்வதென்ன?" என்று கேட்டனர். காசிபர் சிறிது யோசித்துத், "தேவர்கள் வாழ்க்கைக்கு ஆபத்து வந்தது; அசுரருக்கு ஆக்கம் நேர்ந்தது" என்று எண்ணி, "உங்களுக்குக் குருவானவர் சுக்கிரர்; அவரை யடையுங்கள்; அவர் செய்யத்தக்கவற்றை உபதேசிப்பார்!" என்று கூறினர். சேனைகளோடும் சுக்கிராச்சாரியரிடஞ் சென்று, சேனைகளுக்குக் காவலாகத் தாரகனை நிறுவிச் சூரனும் சிங்கமுகனும் உள்ளே செல்ல, சுக்கிரன் எதிர்கொண்டு அழைத்து ஆசனத்திருத்தி, ஆசீர்வதித்து "நீங்கள் வந்தது என்?" என வினவ, சூரன் யாகஞ் செய்து சிவபெருமானிடம் வரம்பெற்றமையைச் சொல்லி, "இனி நாங்கள் செய்யத்தக்கதைச் சொல்லவேண்டும்!" என்றனர். சுக்கிரன் அவர்களைப் புகழ்ந்து, "உங்களுக்குப் பகைவர்கள் தேவர்கள்; அவர்களுக்கு அரசனுவான் இந்திரன்; அவன் அநேகம் அசுரர்களுக்குத் துன்பஞ் செய்தான்; அழித்தான். நீ தேவர்களைச் சிறைவைத்து அவர்கள் பதங்களில் அவுணர்களை யிருத்துவாய்! உன்னை நீ பிரம்மம் என்று எண்ணுவாய்! கொலை, களவு, காமம், பொய், வஞ்சனை எல்லாஞ் செய்தி; அவற்றால் ஒரு தீமையும் வராது. அவைகள் செய்யாவிட்டால் உலகில் உனக்கு அஞ்சுவா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரெவருமில்லை! சிவபிரான் தந்த ஆயிரத்தெட்டு அண்டங்களிலுஞ் சென்று, கண்டு, அங்கங்கே உனது அரசியலை நிறுவித் திரும்பிவந்து இங்கே அரசுபுரிந்திருப்பாய்!" என்றான். அதுகேட்ட சூரன் வணங்கி, "ஆயிரத்தெட்டு அண்டங்களினியல்பை அறிவிக்கவேண்டும்!" என்றான். அண்டங்கள் ஒவ்வொன்றின் இயல்பையும் அவற்றின் விஸ்தீரணம், அங்கு வசிப்போர் தன்மை ஆதிய யாவற்றையும் விரிவாகச் சுக்கிரன் எடுத்துக்கூறினன். அவற்றைக் கேட்டுச் சூரனும் சிங்கமுகனும் வணங்கி விடைபெற்றுக்கொண்டு சேனைகளை வந்தடைந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20. திக்கு விஜயம்

சூரனும் சிங்கமுகனும் வந்தவுடன் தாரகன் சென்று வணங்க, சுக்கிரன் கூறியவற்றையெல்லாம் அவர்கள் சொல்லினர். தாரகன் அவற்றையெல்லாம் கேட்டு மகிழ்ந்து, "இனித் தாமதமின்றிப் பகைவரை வெல்லப்போவதே நமக்குக் கடன்!" என்றான். அச்சமயம் மாயை தூரத்தில் தோன்றினள். சூரன் தம்பியரோடும் அசமுகியோடும் வணங்கினன். மாயை ஆசி கூறி, "யாகஞ்செய்ததும், வரம்பெற்றதும் சொல்லுங்கள்," என்றாள். சூரன் எல்லாவற்றையும் சொல்லக்கேட்டு, மாயை, "யான் உங்களைக் காணு மாசையால் வந்தேன்; நீங்கள் தேவர்களை வெற்றி கொள்ளுங்கள். எவ்வுலகங்களையும் வென்று அரசுபுரிந்து வாழ்வீர்; மாயைகள் வேண்டுமாயின், என்னை நினையுங்கள்; அக்கணமே வந்து, விரும்பியவற்றைச் செய்வேன்!" என்று கூறி அவர்கள் வணங்கச் சென்றாள். சூரன் தம்பியரோடும் சேனையோடும் குபேரன் நகரிற் சென்றான். அவன் வந்து ஆசிகூறி வணங்க, ஈசான திசையை அடைந்தான். சிவனுருத் தரித்த ஈசான உருத்திரர் இருக்கும் இடம் என்றறிந்து அவ்விடம் போகாமல் இந்திரன் காவல்செய்யும் கிழக்குத் திசையை அடைந்தான். இந்திரன் ஆகாயவழியால் மறைந்து சென்றான். அந்நகரைத் தீக்கிரையாக்கித் தென்கிழக்கில் அக்கினிதிசையை அடைந்தான். அக்கினி எதிர்த்துப் போர்செய்து சூரனுக்கு ஆற்றாமல் வணங்க, அவன் தெற்கே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயமன் திசையிற் சென்றான். இயமன் வந்து வணங்கத் தென்மேற்கில் நிருதி திசையிற் சென்றான். நிருதி வந்து, "யான் உன் இனத்தவன்;" என்று ஆசிகூற, மேற்குத்திசையில் வருணன் நகருக்கும் வடமேற்குத்திசையில் வாயுவின் நகருக்குஞ் சென்று, அவ்வத் திக்குப்பாலகர் வந்து வணங்க, போன திசைகள்தோறும் தன் புகழை நிலைநாட்டி, ஆங்காங்குள்ள பொருள்கள் பலவற்றையும் கவர்ந்துகொண்டு பூமியில் வந்து விஷ்ணுமூர்த்தி துயில்கின்ற திருப்பாற்கடலை யடைந்தான். அவுணச்சேனைகள் பாற்கடலைக் கலக்க, சீதேவி, பூதேவி இருவரும் அஞ்சினர். விஷ்ணு துயில்நீங்கிப் பஞ்சாயுதபாணியாய், கருடன்மீதேறி எதிர்த்தார். தாரகன் அவருடன் போர்புரிந்தான். சக்கரப்படையைச் செலுத்த அது தாரகன் கழுத்தில் மாலையாக விழுந்தது. விஷ்ணு அவனைப் புகழ்ந்துபோயினர். பின்பு சூரன் பொன்னுலகடைந்தான். இந்திரன், மனைவியோடு குயில்வடிவங்கொண்டு பறந்துசென்றான். தேவர்களை வருத்த, அவர்கள் அவுணர்களைப் புகழ்ந்து போற்றினர். பின் மற்றைய உலகங்களிலுஞ் சென்று வெற்றிகொண்டு சிவனுலகஞ் சென்று வணங்கி விடைபெற்று ஒவ்வோரிடங்களிலும் தன் ஆணையை நடத்த அவுணரை வைத்துப் பூமியில் வருதலும், இந்திரன் பிரமா முதலானோர் விஷ்ணுவையடைந்து, சூரனால் அடைந்த சிறுமையைக்கூறி "இனிச் செய்வதென்ன?" என்றார். விஷ்ணு எழுந்து, "தக்கன் யாகத்தில் அவியுண்ணச் சென்றிருந்த பாவத்தால் இது நேர்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாமெல்லோரும் சென்று எதிர்கொள்வோம்," என்று கூறினர். அவ்வண்ணஞ் சென்று எதிர்கொண்டு, புகழும்போது, உருத்திரர் தோற்றக் கண்டு, "சிவனுருத்தரித்த இவர் யார்?" எனச் சூரன் வினவ, "முன்னொரு காலத்தில் பிரமன் தன்னைப் பிரம்மமென எண்ணிச் சிவனை மறந்தமையால் சிருட்டித்தொழில் விருத்தியடையாமல் வருந்தினன். சிவனருளால் பிரமனது நெற்றியினின்றும் பதினொரு உருத்திரர் தோன்ற, பிரமன், 'நீவிர் வந்ததென்?' என வினவினன். 'சிவனருளால் படைத்தல்தொழில் விருத்தியாக்க வந்தோம்,' என்றார். 'நீங்கள் படையுங்கள்!' எனப் பதினொரு கோடி உருத்திரரைப் படைத்தனர். பின் படைத்தல் தொழில் விருத்தியாயிற்று 'அவர்களைத் தேவரோடு இருத்திர்!' எனச் சிவபெருமான் பணித்தனர். அவர்களே இவர்கள்" என்று விஷ்ணுமூர்த்தி கூறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 21. பட்டாபிஷேகம்

சூரபதுமன் விசுவகன்மாவைப் பார்த்து, "நாம் சேனைகளோடு இருந்து அரசுசெய்வதற் கேற்ற நகரமமைப்பாய்!" என்றான். மயன் சூரனை வணங்கித் தென்கடல் நடுவிலே வெவ் வேறு வகையான மண்டபங்களோடு கூடிய விசித்திர அலங்காரமமைந்த நகரமொன்றை யுண்டாக்கி 'வீரமகேந்திரபுரி' என்று பெயரு மிட்டான். சிங்கமுகாசுரன் இருப்பதற்கு வட கடலின் நடுவிலே அழகிய நகரமொன்றுண்டாக்கி அதற்கு 'ஆசுரம்' என்று பெயரிட்டான். தார காசுரன் இருப்பதற்கு நாவலந்தீவில் ஒரு நகரம் உண்டாக்கி, அதற்கு 'மாயாபுரி' எனப் பெய ரிட்டான். அவுணத் தலைவர்களும் சேனைகளு மிருத்தற்கு அங்கங்கே பல நகரங்களை உண்டாக்கி, சூரபதுமனிடம் வந்து தெரிவித்தான். சூரன் சேனைகளுடன் தனது நகரையடைந்து களிப் புற்று மயனைப் புகழ்ந்தான்; தனது அரண்மனையை அடைந்தான். அப்பொழுது பிரமன் முதலிய தேவரெல்லோரும் முடிசூட்டுவோமென்று அதற்கு வேண்டியனவற்றையெல்லாம் தேடிக் கொணர்ந்து சிங்காசனத்தில் சூரபதுமனை யிருத் திப் புண்ணியநீரில் ஆடுவித்தனர். பின் அழகிய பாட்டடை யுடுத்துத் திவ்வியாபரணம் பூண்டு நறு மணம் வீசும் மலர்மாலை யணிந்து, அவுணர்கள் புகழ, தேவர்களும் முனிவர்களும் ஆசிகூற, பிரம தேவன் சூரனுக்கு முடிசூட்டினன். தேவர், முனி வர், அவுணர் யாவரும் தாந்தாம் செய்தற்குரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிகளைச் செய்தனர். கருட காந்தருவ சித்த வித்தியாதரர் வாத்தியங்களை இசைத்துப் பாடினர். அரம்பை, மேனகை, திலோத்தமை, ஊர்வசி ஆதியாம் தெய்வ நங்கையர் நடனமாடினர். இவ் விதமான சிறந்த வைபவங்களோடு முடிசூட்டப் பெற்று ஏக சக்கிராதிபதியாய் சூரபதுமன் சிங்காசனத்து இருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 22. அரசு செய்தது

சூரன் அத்தாணி மண்டபத்தில் சகல வரிசைகளோடும் சிங்காசனத்திருந்தான். அவன் விஷ்ணுவைப் பார்த்து, "நான் அழைத்தவுடன் நீ யிங்கு வரவேண்டும்!" என்றான்; பிரமனைப் பார்த்து, "நீ புதல்வர்களோடு தினந்தோறும் நமது சபையில் வந்து பஞ்சாங்கம் சொல்ல வேண்டும்!" என்றான். சூரியனைப் பார்த்து, "நாள் தோறும் நமது அரண்மனைக் கோபுரசிகரங்களைக் கடவாமல் இளங்கிரணங்களை வீசிச் செல்வாய்!" என்றான். சந்திரனைப் பார்த்து, "தேய்தலின்றி எந்நாளும் முழுமதியாய் இந்நகரில் வரவேண்டும்!" என்றான். அக்கினியை நோக்கி, "இங்குள்ளவர் நினைத்தவுடன் வந்து அவர் விரும்பிய பணிகளைச் செய்து, எவர் தொடினுஞ் சுடாமல் குளிர்வாய்!" என்றான் இயமனைப் பார்த்து, "நமது நகரிலுள்ள எவ்வுயிர்களையும் கொல்லாமல் அஞ்சித்திரிவாய்!" என்றான். வாயுவைப் பார்த்து, "இந்நகரிலுள்ளார் அணிந்து நீக்கிய மாலை முதலியவற்றைத் துடைத்துச் சுத்தஞ் செய்வாய்!" என்றான். வருணனைப் பார்த்து, "வாயுகூட்டிய இடங்கள் எல்லாம் நறுமணம் வீசும் பனிநீர் கலந்த தண்ணீர் தெளிக்குதி' என்றான். இந்திரனை நோக்கி, "திக்குப்பாலகருடனும், முனிவர்களுடனும் வந்து ஏவிய பணிகளைச் செய்வாய்!" என்றான். இங்ஙனம் எல்லாருக்கும் கட்டளையிட்டான். தான் மணஞ்செய்ய நினைத்து விசுவகன்மாவின் மகளாகிய பதுமகோமளையை மணந்து பட்டத்தரசியாக்கிப் பின்னும் அநேக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதர்களைக் காமக்கிழத்தியர்களாக்கி இன்பந் துய்த்தான். சிங்கமுகாசுரனுக்கு இயமன் மகளாகிய விபுதை என்பவளையும், தாரகாசுரனுக்கு நிருதியின் புதல்வியாகிய சௌரி என்பவளையும் மணஞ் செய்வித்தான். தம்பியர் இருவரையும் பார்த்து, "உங்களுக்கு அமைத்த நகரங்கள்தோறும் அரசியல் புரிந்திருப்பீராக!" என்றனுப்பினன். பல தலைவர்களையும் சேனைகளையும் வீரமகேந்திரா புரியைக் காக்கும்படி பணித்துச் சூரன் அரசு செய்திருந்தான். இந்திரன் முதலிய தேவர்களை அழைத்து "நீவிர் தினமும் கடலிலுள்ள மீன்களைப் பிடித்து இங்கு கொண்டுவருக!" என்றான். தேவர்கள் வருந்திப் புலம்பி அங்ஙனம் செய்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 23. புதல்வரைப் பெறுதல்

சூரபதுமன் பதுமகோமளையைக் கூடிக் கட்டழகும் வீரமும் நிறைந்த ஒரு புதல்வனைப் பெற்றான். அவன் தொட்டிலில் உறங்கும்போது சூரிய கிரணம் சிறிது முகத்திற் படுதலும், பாய்ந்து சூரியனைப் பற்றிக் கொணர்ந்து தொட்டிலிற் காலுடன் கட்டிச் சிறைப்படுத்தினன். பின் பிரமதேவன் அவனை வேண்டி யிரந்து சிறை விடுவித்தான். இதனால் 'பானுகோபன்' என்னும் பெயர் பெற்றான். பின்னும் அக்கினிமுகன், இரணியன், வச்சிரவாகு என்னும் புதல்வர்களைப் பதுமகோமளை பெற்றாள். ஏனைய மனைவியர்களைக் கூடி மூவாயிரம் புதல்வர்களைப் பெற்றான். சிங்கமுகன் விபுதையிடம் அதிசூரன் என்னும் புதல்வனையும் ஏனைய நங்கையரிடம் நூறு புதல்வர்களையும் பெற்றான். தாரகன் சௌரியிடம் அசுரேந்திரன் எனபவனைப் பெறறு, மாயாபுரியில் இருந்தனன்.

சூரன் தங்கையாகிய அசமுகி யென்பவள் நெறியில்லாதவள்; பெண்ணுக்குரிய ஒழுங்குகளெல்லாம் நீங்கினவள். கட்டழகுள்ள காளையரைக் கண்டால் தானே வலிதிற் புணர்வாள். முனிவர்கள் எங்கிருந்து தவஞ் செய்யினும் அங்கெல்லாஞ் சென்று அவர்கள் தவத்தைக் கெடுப்பாள். இப்படி யெங்கும் உலாவித் திரிபவள் ஒருதினம் துருவாசமுனிவர் முன் சென்றாள். அவர் அவளைச் சூரன் தங்கை என்றறிந்து, "நீ யிங்கு வந்த காரணம் என்ன?" என்று கேட்டார். அவள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யானுன்னைக்கூடிப் புதல்வரைப் பெற வந்தேன் !" என்றாள். "உன்னைக் கூடினால் என் தவம் கெடும்; நீ தனியே இங்கு நிற்பது முறையன்று!" என்றார். அவள் பலாத்காரமாக அவர்மேல் விழுந்து தழுவிக் கூடினாள். உடனே வில்வலன், வாதாவி என இரு புதல்வர் தோற்றினர். அசமுகி அவர்களைத் தழுவி, "நீவிர் அவுணர்கள்; பெருந்தவஞ் செய்து வலிமையைப் பெறுவீர்!" என்றாள். அவர்கள் துருவாசரைப் பணிந்தார்கள். முனிவர் அவர்களை நோக்கி, "நீவிர் வேண்டியதென்ன!" என்று கேட்க, அவர்கள், "நீ செய்த தவம் முழுவதையும் தருவாய்!" என்றனர். "தவத்தைத் தவிர்த்து வேறு யாதாகிலும் வேண்டுமேற கேளுங்கள்!" என்றார். உடனே அவர்கள், "இம் முனிவனைக் கொல்வோம்" என்று முயற்சித்தனர். அதுகண்ட துருவாசர், "நீவிர் பலகாலம் முனிவர்களுக்கு இடர்செய்து அகத்தியரால் இறந்தொழிவீர்!" என்று சாபமிட்டார். பின் முனிவர், "யானிங்கிருப்பின் இவர்கள் என்னைக் கொல்வார்கள்!" என்றெண்ணி, மறைந்தார். அவர்களும் அசமுகியிடம் விடைபெற்றுப் போய்ப் பிரமாவை நோக்கி, அக்கினிமத்தியில் நின்று தவஞ் செய்தனர். பிரமா வராமை கண்டு வில்வலன் இளையோனுடலை வெட்டி ஓமகுண்டத்திலிட்டான். பிரமா தோன்றி, "உமக்கு வேண்டிய வரம் யாது?" என்று கேட்க, அவன் "எனது தம்பியை எழுப்பித் தரவேண்டும்!" என்றான். அப்படியே எழுப்பிக் கொடுத்தவுடன் அவன் அதிசயித்து, "எனது தம்பி ஆட்டுக்கடா வடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய் நிற்க யான் கொன்று பின் வாவென்று அழைத்தவுடன் உயிர்பெற்று வரும்படி வரம் தர வேண்டும்!" என்றான். அவன் கேட்ட படி வரங் கொடுத்துப் பிரமா மறைந்தார். பின் இருவரும் சூரனையடைந்து: "யாங்கள் உன் மருகர்" என்று சொல்லிப் பெற்ற வரமுங் கூறினர். சூரன் அவர்களைத் தழுவி மகிழ்ந்து, "இங்கே இருங்கள்" என்றான். சிலகாலம் அவர்கள் சூரனோடு அங்கிருந்தார்கள். பின் ஒரு வனததில் நாற்சந்தியில் வில்வலன் முனிவர் வடிவங்கொண்டு தம்பியை ஆட்டுக்கடா வடிவமாயிருக்கச்செய்து அவ்வழியால் வரும் முனிவர்களுக்கு உணவருத்தி, வாதாவியை அழைக்க அவன் உண்டவர் உடலைக் கிழித்து வெளிவர இறந்தவருடலை இருவரும் புசிப்பார். இங்ஙனம் முனிவர்களுக்குத் துன்பஞ் செய்திருந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 24. இந்திரன் மறைந்திருந்தது

சூரபதுமன் இந்திரமாஞாலத் தேரோடும் நினைத்த இடங்களுக்கு நொடிப் பொழுதிற் சென்று, ஆயிரத்தெட்டு அண்டங்களிலும் தனது ஆணையைச் செலுத்தி மீண்டு அரசு வீற்றிருந்தான். தேவர் முனிவர் யாவருக்குந் துன்பஞ் செய்து வரும்பொழுது, ஒருநாள் சூரன் அவுண சேனைத் தலைவனைப் பார்த்து, "நீ சென்று இந்திரனைப் பற்றிக் கட்டி என்முன் கொணர்க" என்றனுப்பி ஒன்பது கோடி அவுணப் பெண்களைப் பார்த்து, "இந்திராணியைப் பிடித்துக் கொணர்ந்து என்னிடந் தாருங்கள்" என்றனுப்பினான். தூதரால் அறிந்த இந்திரன் மனைவியோடு மறைந்து சென்றான். அவுணரும் மாதரும் இந்திரனையும் மனைவியையும் காணுமல், தேவரைத் துன்புறுத்தி மீண்டு நிகழ்ந்ததை அறிவித்தனர். இந்திரன் மனைவியைத் தானடைய எண்ணிய சூரன் சீவரத்தினமிழந்த நாகம்போல் துன்புற்று அநேகம் ஒற்றரை அழைத்து, "இந்திரன் மனைவியோடிருக்குமிடத்தை அறிந்து சீக்கிரம் தெரிவியுங்கள்" என்று கட்டளையிட்டான். ஒற்றர் எவ்விடங்களிலும் அவரிருவரையும் தேடித் திரிவாராயினர். இந்திரனும் மனைவியும் கரந்து போனதையும் பொன்னகரம் பொலிவிழந்ததையும் வைகுந்தத்திருந்த இந்திரன் புதல்வனாகிய சயந்தன் கேள்வியுற்றுப் பொன்னுலகடைந்து துன்பத்துடனிருந்தான். நாரதர் அங்கு வந்து, "இன்பமுந் துன்பமும் அவரவர் செய்த கன்மத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தால் வருவன; மனந் தளராதே. முன் உங்களை வருத்திய கயமுகாசுரனை யழிக்கத் தவஞ்செய்தது போலச் சூரனை அழிக்க உனது தந்தை தவஞ் செய்வான். விரைவில் உங்கள் துன்பந் தீரும்" என்று தேற்றிச் சென்றார். சயந்தன் தெளிந்து தேவர்களையுந் தேற்றியிருந்தான். முன் மறைந்து சென்ற இந்திரன் தென்னாட்டில் சீர்காழிப்பதியை அடைந்து சிவனைப் பூசிப்பதற்கு அழகிய நந்தவனமொன்றமைத்து மனைவியுடன் மூங்கில் வடிவாயிருந்து சிவனை வழிபட்டு வந்தான். இப்படி யிருக்கையில் மழையில்லாமல் நந்தவனம் வாடுவதைக் கண்டு சிவனை நினைந்து இரங்கினன்.

திருந்தலர் புரமூன் றட்ட
  சேவகற் பரவ லோடும்
பொருந்தலர் பூங்கா வாடிப்
  போயின வெனினும் பொன்று
இருந்தல மிதனில் யாரென்
  றெய்துமான் மகவா னின்னே
வருந்தலை யென்றோர் மாற்றம்
  வானிடை யெழுந்த தன்றே.

—இந்திரன் கரந்துறை படலம் செய். 47

இறைவனருளால், "இந்திரனே மழையில்லா விடினும் இங்கு ஒரு நதி பாய்ந்துவரும்; வருந்தாதே!" என்றெழுந்த அசரீரியைக் கேட்டு இந்திரன் மகிழ்ந்திருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 25. விந்தமலை

நாரதர் விந்தமலையையடைந்து புகழ்ந்து, "மேருமலை தானேயுயர்ந்தது," என்றார். அது கேட்ட விந்தமலை மேருமலையைப் பழித்து வான வெளியை மறைத்து மிகப் பெருவடிவுடன் நின்றது. போக்கு வரவு செய்ய முடியாமல் இம்மலை நிற்பதையறிந்த தேவர்கள் அகத்தியரை நினைந்து அதன் வலியை யடக்கவேண்டுமென்று இரந்தனர். அதையுணர்ந்த அகத்தியர் சிவனை நோக்கித் தவஞ்செய்ய, சிவன், அவர்முன் தோன்றி, "உனக்கு வேண்டிய வரம் யாது?" என்றார். "விந்தமலையையடக்கும் வலிமையைத் தந்தருள்க" என்றார் அகத்தியர். அப்படியே "விந்தத்தை யடக்கிப் பொதியமலையிற் சென்றிருத்தி" என்று அருள்புரிந்தார். அகத்தியர் வணங்கி, "சுவாமி! தேவரீரைப் பூசிப்பதற்கு நல்ல தீர்த்தம் உதவ வேண்டும" என்றார். எம்பிரான் பொன்னி நதியைப் பார்த்து இம்முனிவனுடன் செல்க" எனப் பணித்தார். நதி வணங்கி, "எம்பெருமானே! ஐம்புலன்களையும் வென்றவனுயினும் ஓராடவன் பின் செல்வதொல்லுமோ?" என்றாள். "இவன் அன்பன்; மெய்த்தவன்; ஆதலின் நீ யஞ்சாது இவனுடன் செல்வாய்! இவன் என்று உன் பக்கம் கையுயர்த்துவானே அன்று நீ அகன்று பூமியிற் செல்வாய்!" எனப் பணித்து, அகத்தியரைப் பார்த்து "நீ உன் குண்டிகையின்கண் காவிரித் தீர்த்தத்தை வைப்பாய்" என்றருளி மறைந்தருளினுர். அகத்தியர் தென்திசை நோக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிச் சென்றனர். செல்லும்போது மாயமாபுரி வரலும் கிரவுஞ்ச மலையைக் கண்டு அந்நெறிச் செல்ல, அவுணன் பற்பல மாயைகளைச் செய்து செல்லும் வழி தெரியாமல் திகைக்கச் செய்தான். அகத்தியர் யாவற்றையும் ஞானத்தாலறிந்து கோபங்கொண்டு தண்டாயுதத்தாலடித்து, "நீ தேவர் முனிவருக்குப் பலநாள் இவ்வாறு துன்பஞ் செய்து, பின் சுப்பிரமணியப் பெருமான் வேலால் அழியக்கடவாய்!" எனச் சாபமிட்டு, மந்திரத்தை யுச்சரித்துக் காவிரி நீரைத் தெளித்து மாயையை வென்று சென்றார். செல்லும் வழியில் விந்தமலையைக் கண்டு, "யான் செல்லச் சிறிது வழிவிடுக" என்றார். விந்தமலை அவரை இகழ்ந்து "சூரிய சந்திரர் முதலானோர் அஞ்சிச் சூழ்ந்து செல்கின்றனர். குறிய உனக்கஞ்சி யான் வழிவிடுவேனோ? திரும்பிச் செல்!" என்றது. அகத்தியர் தமது குறிய கையைப் பிரமபதம்வரையும் நீட்டி, உச்சியில் வைத்து அழுத்துதலும் விந்தம் வலிகெட்டு பிலம்புக்கது. பின்பு அது அகத்தியரை வணங்கி, "நான் அறியாமையால் உன்னை இகழ்ந்தேன்; பிழைபொறுத்து யான் எழுங்காலம் கூறியருளுக!" என்று வேண்டியது. "யான் திரும்பி இவ்வழியால் வந்தபின் எழுவாய்!" என்றார் அவர். சூரியன் முதலானோர் முனிவரையடைந்து, "இன்று நீர்செய்த உதவி வேறு யார் செய்ய வல்லார்," என்று புகழ்ந்தனர். அகத்தியர் அங்குநின்றும் செல்வாராயினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 26. வில்வலன் வாதாவி வதை

அகத்திய முனிவர் வருவதைக் கண்ட வில்வலன் வாதாவி இருவரும், "இன்றிவன் உயிர் கொள்வோம்" என்று எண்ணினர். தம்பியை ஆட்டுருவாய்ப் புல் மேயச்செய்து, தான் தவமுனி வடிவங்கொண்டு வில்வலன் அகத்தியரை வணங்கி, "இதுபோது தாங்கள் எழுந்தருளி வர என்ன தவஞ்செய்தேனோ?" என்று புகழ்ந்து, "இன்று அடியேன் குடிசையில் அமுதுண்டு செல்லவேண்டும்!" என்று வேண்டினன். அகத்தியர் அவன் வஞ்சனையை அறியாது அதற்குச் சம்மதித்துச் சென்றார். வில்வலன் நீரில் மூழ்கி, வெண்ணீறு உருத்திராக்கம் தரித்து இடமெல்லாஞ் சுத்தஞ் செய்து மிக விரைந்து அன்னமும் மற்றும் தானிய உணவும், பல கறி வகைகளும் சமைத்துப் புல் மேய்ந்து நின்ற வாதாவியாகிய ஆட்டுக் கடாவைப் பிடித்து முனிவர்முன் நிறுத்தி வெட்டி உறுப்பெல்லாம் வெவ்வேறாக்கிப் பல சரக்குகள் சேர்த்துக் கறியமைத்து எல்லாம் நிறைவுற்ற பின் அகத்தியர் முன்னின்று, "பெரியோய்! இத்துணைநேரமும் பசியால் வருந்தினை; கருணை கூர்ந்து அமுது செய்தருள்க," என்று வேண்டினான். பின்பு முனிவரை அழைத்துச் சென்று, அடிசிற் சாலையில் இருத்திப் பாதபூசை செய்து உண்கலந்திருத்தி அன்னவகை, கறிவகை யாவும் படைத்து, நெய்விட்டுப் பழங்களும் படைத்து உண்ணும்படி வேண்டினன். அகத்தியர் முறைப் படி நிவேதனஞ்செய்து படைத்தனவெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புசித்து அவன் நீர்விட ஆசமனஞ்செய்து எழுந்து சுத்திசெய்து தியானமும் செய்துவிட்டு ஓரிடத்தில் இருக்கும் சமயம் கொடியவனுகிய வில்வலன், "வாதாவி, வருக!" என்ருன். வாதாவி உள்ளிருந்தபடியே, "முன் கடல்நீரை உண்டதுபோல, எனது வலையுமுண்ட இக்குறியவனது உயிரைக் கவர்ந்து எனது வலியால் உடலைக் கிழித்துக் கொண்டு இதோ வருகின்றேன்! அண்ணு, வில்வலனே!" என்று முழங்கினன். உடனே அகத்தியர் இவரிருவரும் செய்த மாயத்தையறிந்து வெகுண்டு, "உண்டபடியே வாதாவி யழிக!" என்று தமது சரீரத்தை யொருதரம் தடவினர். வாதாவி அழிந்தான். வாதாவி அழிவுற்றதையறிந்த வில்வலன் தன்னியற்கை வடிவத்துடன் ஒரு தண்டாயுதத்தைத் தாங்கி முனிவரைக் கொல்ல வந்தான். அகத்தியர் ஒரு தருப்பையை எடுத்துச் சிவப் படையாகப் பாவித்து அவ்வசுரன்மீது விட்டார். வில்வலன் அழிந்தான். அப் பாவிகள் இருந்த இடத்தை நீங்கி அகத்தியர் அப்பாற் சென்ருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 27. காவிரி நீங்கியது

பிறகு அகத்தியர் கொங்குநாட்டை யடைந்தார். அவர் கொன்ற இருவரும் முனிவர் புதல்வராகையால் பிரமகத்தியாய் அவர் முன் தோன்ற, அகத்தியர் சிவபூசை செய்து அத்தோஷத்தை நீக்கி, அங்கே யிருந்தார் நாரத முனிவர் சீர்காழியில் மறைந்து வசிக்கும் இந்திரனையடைந்து, "சுகமாயிருக்கின் றனையோ?" என்று வினவ, இந்திரன் வணங்கி, "யான் நலம் பெற்றிருக்கின்றேன்; ஆனால் சிவபூசையின் பொருட்டு வைத்த நந்தவனம் மழையில்லாமல் வாடுகின்றது; அதுவே குறை!" என்றான். "இந்திரனே! வருந்தாதே; அகத்தியர் மேருவிலிருந்து பொதியமலைக்குச் செல்லும்பொழுது விந்தமலையை யடக்கி, வில்வலன் வாதாவியைச் சங்கரித்துக் கொங்கு நாட்டில் இப்பொழுது இருக்கிறார். அவருடைய கமண்டலத்தில் காவிரிநதியிருக்கிறது. விநாயகரைப் பூசித்து வேண்டுவாயாகில் அந்நதியைக் கவிழ்த்து விடுவார்" என்று கூறித் தம்பதத்தை யடைந்தார். இந்திரன் விநாயகரை மெய்யன்போடு வேண்டுவன சேகரித்துப் பூசித்தான். விநாயகப் பெருமான் தோன்றுதலும், இந்திரன் தன் கருத்தை விண்ணப்பஞ் செய்தான். அதுகேட்டு விநாயகர், "அப்படியே செய்வோம்" என்றருளிச் செய்து காகவடிவம் கொண்டு அகத்தியர் கமண்டலத்திலிருந்தார். அகத்தியர் தமது கையை உயர்த்திக் காகத்தைக் கலைக்க, அது பறக்க,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமண்டலம் கவிழ, காவிரி நீங்கிப் பூமியிற் பாய்ந்தது.

விநாயகர் உடனே காக வடிவம் நீங்கிப் பிராமண வடிவங்கொண்டு நின்றார். அதுகண்டு அகத்தியர் கோபங்கொண்டு குட்டுதற்குச் சென்றார். அவரைக் கிட்ட முடியாதாயிற்று. பின் விநாயகப்பெருமான் தமது உருவத்தைக் காட்டியருள, அகத்தியர் வணங்கிப் பிழைபொறுக்கும்படி வேண்டினார். விநாயகர் அகத்தியரை நோக்கி, "நீ வேண்டிய வரத்தைக் கேள்" என்றனர். "சுவாமி, குண்டிகையில் காவிரிநீரை நிரப்பித் தந்தருள்க!" என்றார். விநாயகர் ஒருதுளியெடுத்து விட்டதும் கமண்டலம் நிரம்பியது. அகத்தியர் அதிசயமுற்று முன் குட்டுதற்கு எடுத்த கைகளால் தம் சிரசிற் குட்டி வணங்கினார். விநாயகப்பெருமான் கருணைசெய்து மறைந்தருளினார். அகத்தியரும் தென்திசையை நோக்கிச் சென்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 28. திருக்குற்றாலம்

அகத்திய முனிவர் வரும்வழியில் குற்றால மென்னும் நகரையடைந்தார். அங்கு விஷ்ணு ஆலயம் ஒன்றுண்டு. அது வைணவர்களால் மிகப் பாராட்டப்பெறுவது. அந்நகரில் வைணவ மதத்தை மேற்கொண்ட மறையவர் அநேகர் வசிப்பார். அவர்கள் சிவனடியாரைக் கண்டாற் கோபித்துப் பொங்கியெழுவார்; அவ்வழியாலும் போகவிடார். அதையறிந்து அகத்தியர் அவ்வழி யால் வந்தார். அவர் வருவதைக் கண்ட வைணவர் பகைவரைக் கண்டதுபோற சீறி; நீறு, கண்டிகை அணிந்திருக்கின்ற அவரை எதிர்த்தனர். "பிச் சாண்டியாகிய சிவனுக்கடியவன் நீ; கையிலொரு கோலுங் கொண்டனை; நீ சிறியவன்; இந்நகரை யணுகாது விரைந்து செல்லுதி," என்றனர். "வேத நெறி தவறின நீர் வசிக்குமிட மென்றறியேன்; எவருஞ் சொன்னாருமில்லை; கோபங் கொள்ளா தீர்; யான் செல்கின்றேன்!" என்று கூறி, 'முன்னர் நந்திதேவர், பிரமன், ததீசி முதலியோர் வேதம் படித்தும், அந்தணராகியும், சிவனே பரம் பொருள் எனத் தெரியாது விஷ்ணுவே பரம் பொருளென்று மயங்குவீரென்று சாபமிட்டனர். அந்தச் சாபம் பலிக்கப் பெற்றவர் இவர்கள். இன்னோர் அகந்தையை நீக்குவேன்!' என்று நினைந்து மீண்டு சென்றார். தூரத்திற் சென்று, வைணவ பாகவதர்போல வடிவங்கொண்டு அவ் வழியால் வந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் வருவதைக் கண்ட வைணவப் பிராமணர்கள் அவரை வணங்கினர். "இங்கே திருமால் ஆலயம் இருப்பதாகக் கேள்வியுற்றேன். எம் பெருமானை வணங்கும் விருப்புடையேன்!" என்றார். "இதோ இருக்கிறது ஆலயம்!" என்று ஆலயத்தைக் காட்டினர். "அங்கே சென்று அவரை வழிபடவேண்டும்; திருமஞ்சனம், மலர் முதலியவெல்லாம் தாருங்கள்!" என்றார். அவர் வேண்டுவனவெல்லாம் கொடுத்தார்கள் "உள்ளே பூசிப்பதைப் பாருங்கள்" என்று சொல்லித் திரையிட்டுத் திருமாலின் சிரசிற் கையை வைத்துக் "குறுகு குறுகு குற்றாலா!" என்று அழல்கண்ட மெழுகுபோலக் குழையச் செய்து, சிவலிங்கமாக்கி அபிஷேகஞ் செய்து, மலர்மாலை சந்தனாதிகள் சாத்தித் திரையை யெடுத்துப் பூசை செய்தார். கண்ட வைணவர்கள், "இவன் மாயம் வல்லான்; முன் சைவனாய் வந்தான்; யாம் துரத்தப் போய், பாகவதர்போல் வேடம் பூண்டுவந்து இப்படிச் செய்தான். இவனைப் பிடியுங்கள்; அடியுங்கள்!" என்று சூழ்ந்தார். அகத்தியர் கோபங்கொண்டு விழித்துக் கண்களில் நின்றும் தீப்பொறிகளைச் செலுத்தினர். அந்நெருப்பு அவர்களைத் துரந்து சுட, அவராற்றாராய் அவ்விடத்தை விட்டுப் பூமியிற் பல் வேறிடங்களிலுஞ் சென்றார்கள். அவர்கள் போகவே, "இன்று முதல் இவ்விடம் சிவாலயமாயிற்று!" என்று கூறிச் சிவனை அருச்சித்து, விடைபெற்றுப் பொதியமலையை அடைந்து சிவபெருமான் திருவடிகளைத் தியானித்துத் தவஞ் செய்திருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 29. தேவர் புலம்பல்

விநாயகப்பெருமான் முன்பு காகவடிவாய்க் கவிழ்த்த காவிரிநதி பெருகிப் பாய்ந்ததால் நந்தவனம் தளிர்த்துப் பூத்துப் பொலிந்து விளங்கியது. இந்திரன் கண்டு களித்துச் சிவனைப் பூசித்துக் கொண்டிருந்தான். சூரனேவல் செய்து இளைத்த தேவர்கள் தென்னாட்டிலுள்ள சீர்காழியை அடைந்து, இந்திரனைக் கண்டு, தங்கள் துன்பமெல்லாங் கூறி, "சூரனிடம் எங்களைக் காட்டிக் கொடுத்து இப்படி மறைந்திருப்பது முறையாகுமா? எங்கள் அரசனாகிய நீ எங்களைக் காப்பாற்றாது கைவிடுதல் தருமமா!" என்று முறையிட்டுப் புலம்பினர். அது கேட்ட இந்திரன் "மாயை புதல்வன் யாகஞ் செய்யத் தொடங்கிய அன்றே நம் வாழ்வு போயது" என்று உங்களுக்குக் கூறினேனல்லவா? என்று சொல்லி வருந்தி, "எல்லோருஞ் சென்று சிவபெருமானிடத்தில் முறையிடுவோம், சிறிது இருங்கள்!" என்று நீங்கி, அயிராணியை அடைந்தான். இந்திராணி அவனை வணங்கி, "இப்பொழுது வந்ததென்னை?" என வினவினாள். "சூரனால் துன்புற்ற சில தேவர் இங்கு வந்து, தம துயரைக் கூறிப் புலம்புகின்றனர். அவர்களோடு கைலையிற் சென்று சிவபிரானை வணங்கி, நம் துயரைக் கூறினால் அப்பெருமான் கருணையால் துன்பம் நீங்கப் பெறுவோம்; அங்கு செல்வதைக் கூறவே வந்தேன்" என்றான். அதைக் கேட்ட அயிராணி சோகித்து விழுந்தாள். அவளை எடுத்துத் தெளிவித்ததும் அவள், "உம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைத் துணைக்கொண்டல்லவா இவ்வனத்தில் இருக்கிறேன்? மானத்துக்கஞ்சி நாடுவிட்டுவந்து இங்கு மறைந்திருக்கின்றோம். எங்கும் தேடித் திரியும் அவுணர் என்னைக் கண்டால் என்ன தீங்கு விளைவிப்பார்களோ?" என்று புலம்பி; "யானும் கூட வருகின்றேன்!" என்றாள். இந்திரன் அவளைப் பார்த்து, "நீ ஒன்றிற்கும் அஞ்சாதே; உனக்கு யாதேனுந் துன்பம் நேர்ந்தால், இருந்த இடத்தில் நினைக்க உடனே அரனும் அரியும் பெற்ற மகா சாத்தா வந்து உன்னைக் காப்பாற்றுவார்!" என்றான். "அவர் சிறப்புத்தான் யாதோ? சொல்வீர்!" என இந்திரன் மனைவிக்குச் சொல்லுகின்றான் :

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 30. மகாசாத்தா

"முன்னொரு காலத்தில்; தேவரு மசுரருங் கூடிப் பாற்கடலைக் கடைந்தனர். அப்போது நஞ்சு வெளிப்பட, அஞ்சி எல்லோரும் சிவபெருமானிடம் அடைக்கலம் புகுந்தனர். இறைவன் நஞ்சையுண்டு எல்லோரையுங் காத்தருளினர். பின் அவர்கள் முறைப்படி கடைந்தார்கள்; அமிர்தம் தோன்றியது. அசுரரும் அமிர்தம் உண்ண வந்ததைக் கண்டு, கண்ணன் ஒரு சூழ்ச்சியை எண்ணிப் பேரழகு வாய்ந்த மோகினி வடிவங் கொண்டு நின்றனன்; கண்ட யாவரும் மயங்கிக் காமத்தாற் கவன்றனர். மோகினி, "யானிருக்கின்றேன்; அமிர்தம் இருக்கின்றது! யாருக்கு எது வேண்டும்?" என தேவர்கள், "அமிர்தம் வேண்டும்" என்றனர். அசுரர், "மோகினி வேண்டும்!" என்றனர். எல்லா அசுரரும் மோகினியை அழைத்துக் கொண்டு ஒரு தனியிடத்தை யடைந்தனர். மோகினி அவர்களைப் பார்த்து, "உங்களுள் சுத்தவீரன் எவனோ அவனே என்னைத் தழுவுதற்குரியன்" என்று சொல்ல, ஒவ்வொருவரும் தன்னைத் தானே வீரனென்று தனித்தனி கூறிப் போர் புரிந்து இறந்தார். இருவர் மாத்திரம் இச் சூழ்ச்சியை புணர்ந்து, தேவர்களைப் போல் வடிவங் கொண்டு அவர்களோடு சேர்ந்து நின்றனர். அசுரரை இறக்கச் செய்த மோகினி வடிவு கொண்ட விஷ்ணு தேவர்களுக்கு அமிர்தத்தைப் பங்கிட்டார்; அவ்விருவரும் முன் உண்ணத் தொடங்கினர். சூரிய சந்திரர் இதைப் பார்த்துக் கண்சாடை செய்யக் கண்ணன் சட்டுவத்தால் அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழுத்தை வெட்டினான். அமிர்தமுண்ட தலைமாத்திரம் அழியாதிருக்க, உடல்கள் விழுந்தன. அவர்களைக் கோள்களாய் நிற்கும்படி அவர் கூறினர். அவ்வாறே அவர்கள் இராகு, கேது என்னுங் கோள்களாயினர். முன் தங்களைக் காட்டிக் கொடுத்தமையாற் சூரிய சந்திரரை இராகு கேதுக்கள் மறைப்பர். இதுவே கிரகணமாம்.

தேவருக்கு அமிர்தம் விருந்துசெய்த மாயன், மோகினியாயிருக்கச் சிவபிரான் அந்த மோகினியைக் கூடினர். அப்பொழுது தோற்றியவரே அரிஹரபுத்திரர். மகாசாத்தா என்பது இவரையே. அவருக்குவேண்டிய வரங்களைக்கொடுத்து "உருத்திரர்களோடுஇருந்து, எல்லாவுலகங்களையும் காவல் செய்யும்படி சிவபெருமான் அருள்செய்தனர். அவர் பெருமை அளவிடற்கரியன; இரவும் பகலும எல்லா உலகங்களையும் காப்பவர்: அவரே உங்களையுங் காப்பார்" என்று கூற, இந்திராணி இசைந்தாள். இந்திரன் ஐயனாரை நினைந்து துதித்தான். உடனே அவர் தோன்றி, "யாது வேண்டும்?" என்றார். இந்திரன் வணங்கி, சூரனால் வரும் துன்பங்களை ஆற்றாத தேவர்களுடன் கைலையில் எம்பெருமானிடம் முறையிடச் செல்கிறேன்! என் மனைவியாகிய இந்திராணி அவுணருக்கு அஞ்சுகின்றனள். ஐயனே அவளைக் காத்தருள்க!" என்று வேண்டினான். "நீ அஞ்சேல்! நான் காப்பாற்றுவேன்!" என்று கூறித் தமது சேனைத் தலைவராகிய மகாகாளரைப் பார்த்து, "இந்திராணிக்குத் தீங்கு வராமற் காவல் புரிவாய்!" என்று கூறிச் சென்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31. அசமுகியும் அயிராணியும்

இந்திரன் தேவர்களோடு திருக்கைலாசத்தை யடைந்து நந்திதேவரை வணங்க, நந்திதேவர், "எம்பெருமான் யோகத்திலிருக்கின்றார்; அவரை வணங்க இது தருணமல்ல!" என்றார். இந்திரன் தேவர்களோடு காலம்பார்த்துக் கைலையிற் காத்திருந்தான்.

இந்திராணி சீர்காழி வனத்தில் தவஞ்செய்து கொண்டிருந்தாள். சூரன் தங்கையாகிய அசமுகி—தோழியாகிய துன்முகியோடு சுற்றித்திரிபவள்—அவ்விடம் வந்தாள்; அழகிய நந்தவனத்தைக் கண்டாள். "இது பொன்னுட்டிற் சோலையை இங்கு வைத்திருப்பது போல்வதால், இந்திரன் இவ்விடத்து இருக்கின்றான் போலும்!" என்றெண்ணிச் சோலையினுட் சென்று சுற்றிவந்தாள். ஒரு புடையில் இந்திராணி தவஞ்செய்தலைக் கண்டாள். அவள் முன் அசமுகி போய்நின்று, "இந்திராணியே! உனக்கு நிகரான அழகுடையவர் யாவர்? நீயேன் வருந்தித் தவஞ்செய்கின்றனை? உன்னை யடைய என் அண்ணன் சூரபதுமன் தவஞ்செய்கின்றான். அண்ணனே ஆயிரத்தெட்டு அண்டங்களிலும் ஆணை செலுத்துபவன். உன் நாயகனே அவனுக்கு அஞ்சித் திரிபவன். இப்பொழுதே என்னுடன் வருவாய்; என் அண்ணனிடம் உன்னைச் சேர்க்கிறேன்!" என்றாள். அதுகேட்ட இந்திராணி அஞ்சி நடுங்கி, "நீதி நெறி தவறி நடப்பவள் நீ! ஆதலால் மாதர் கற்பு நெறியையும், வேத ஒழுக்கத்தையும் தவிர்த்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படிக் கூறினாய்! இங்கு நில்லாதே போதி! போதி!!" என்றாள். அசமுகி பலவந்தமாக அயிராணியின் கையைப் பிடித்து இழுத்துச் சென்றாள். இந்திராணி ஐயனாரை அழைத்து ஓலமிட்டாள். மகாகாளர் ஓடிவந்து, "இந்திராணி அஞ்சாதே!" என்று, சொல்லி, "அசமுகியே, அயிராணியை விட்டுச்செல்! உன் பிழையைப் பொறுப்பேன்; இல்லையேல் உன்னைத் தண்டிப்பேன்," என்றார். அசமுகி ஆர்த்து, முத்தலைச் சூலத்தை வீசினாள். மகாகாளர் வாளால் அதை வெட்டினார். ஒரு மலையைப் பிடுங்கி அவள் எறிந்தாள்; அதையும் அழித்தார். இந்திராணியைத் துன்முகி கையிற் கொடுத்து, அவளிடமிருந்த சூலத்தை வாங்கிக் குற்றப்போனாள்; அதையும் அழித்தார். "இவனை வெல்வதரிது!" என்று, இந்திராணியைக் கைப்பற்றிக்கொண்டு நடந்தாள். மகாகாளர், "நில்" என்று உரப்பிச்சென்று அவள் கூந்தலைப் பிடித்திழுத்து. இந்திராணியைப் பிடித்த கையை உடைவாளால் வெட்டி, காலால் உதைத்தார்; துன்முகியின் கரத்தையும் வெட்டினார். அசமுகி விழுந்து புரண்டு பலவாறு புலம்பி, "இளைஞர்கள் கையிழந்த என்னை அணையக் கூசுவரே!" என்று வருந்தினாள். துன்முகி தேற்ற அவள் எழுந்து, "சூரனிடம் முறையிடுவோம்" என்று அவளுடன் சென்றாள். மகாகாளர் இந்திராணியை நோக்கி ஒன்றுக்கும் அஞ்சாதே! உன் நாயகன் வரும் வரையும் நானுன்னைக் காப்பாற்றுவேன்!" என்றார். இந்திராணி முன்போலத் தவஞ் செய்திருந்தாள். இச் சம்பவங்களை நாரதமுனிவர் கைலையிலிருந்த இந்திரனுக்கு அறிவித்தார். இந்திரன் மீண்டுவந்து அயிராணியுடனும் தேவர்களுடனும் மேருமலையிற் சென்று மறைந்திருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 32. சூரன் தண்டஞ் செய்தல்

சூரபதுமன் சகல சம்பிரமங்களோடும் யாவரும் வணங்க அரசுபுரிந்திருக்கின்றான். கை வெட்டுண்ட அசமுகி, துன்முகியோடு சூரன் அரசிருக்கையை யடைந்து தனக்கு நேர்ந்த அவலத்தைக் கூறி, "உனக்காக இந்திராணியைப்பற்றிக்கொண்டு வரும்பொழுது இந்திரனேவலன் ஒருவன் எங்கள் கரங்களை வெட்டினன். எல்லோரையும் ஏவல்கொண்டு ஆயிரத்தெட்டு அண்டங்களையும் அடக்கியாளும் அண்ணு! உனது தங்கையாகிய எனக்கு இப்படி நிகழலாமா? பெண்ணுய்ப் பிறந்து யான் பட்ட துயர் இவ்வுலகில் யார் பட்டார்?" என்று புலம்பினுள். கேட்ட சூரன் அளவிலாக் கோபங்கொண்டு "துணைவர் இருந்தென்? பிள்ளைகள் இருந்தென்? சேனைகள் இருந்தென்? இவர்கள் கைகளை இந்திரன் ஏவலன் தடிந்தான் எனின் என் அரசாட்சி நன்ருயிருக்கின்றது! அண்டங்களெல்லாம் பரவிய என் புகழ் போய்விட்டதே," என்று அண்டம் வெடிபடச் சிரித்தான். பானுகோபன் எழுந்து தந்தையை வணங்கி, 'உனக்குப் பயந்து திரிகின்ற தேவர்கள் இப்படிச் செய்திரார்! இவர் கரங்களை வெட்டினேர் யாரென்பது அறியமுடியாத மாயையாக இருக்கிறது. யான் இப்பொழுதே போய் எங்குந் தேடி, இந்திரனையோ, இந்திராணியையோ, தேவர்களையோ பிடித்துக் கொணர்வேன். அவர்கள் மறைந்திருந்தால்—தேவருலகைத் தீக்கிரையாக்குவேன். விடை தருக!" என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரன் மகிழ்ந்து, " இப்பொழுதே செல்லுதி " என்ருன். அசமுகியை அங்கிருக்கச் செய்து துன்முகியைக் கைவெட்டுண்ட இடத்தைக் காட்டும்படி பானுகோபனேடு அனுப்பினுன். பின்பு சூரியன், சந்திரன், நாள்கள், கோள்கள், வாயு முதலிய தேவர்களை யெல்லாம் வரவழைத்து, " நீவிர் இச்சம்பவத்தைக் கண்டும் எமக்கு அறிவியா திருந்தீர். அவ்வளவு அகந்தை கொண்டீர்!" எனக் கூறி அவர்களைச் சிறைசெய்வித்தான். பிரமாவை அழைப்பித்து, " இவர் கரங்களைப் படைப்பாய்!" என்ருன். பிரமன் அவ்வண்ணம் படைத்தான். " அரசனே! இவர்களைச் சிறையில் வைத்தால் உலகம் நடைபெருது; சிறை விடுதி!" என்று பிரமன் வேண்டினுன். சூரன் அவர்களைச் சிறை விடுவித்து, எல்லோரையும் செல்ல அனுமதி கொடுத்தான்.

பானுகோபன் சேனைகள் சூழச் சென்று, துன்முகி காட்டிய இடமெல்லாம் தேடி எவரையும் காணுமையாற் சுவர்க்கலோகத்தை யடைந்தான். சயந்தனேடு பொருது வென்று, அவனையும் தேவர்களையும் தெய்வ மகளிரையும் சிறை பற்றிக் கொண்டு வந்து, சூரன் முன்னிலையில் விட்டு நிகழ்ந்ததைக் கூறி வணங்கினன். சூரன் மகிழ்ந்து யாவரையுஞ் சிறைசெய்வித்தான். இதைக் கேள்வியுற்ற இந்திரன் மேருமலையிற் சிவபெருமானை நோக்கித் தவஞ்செய்தான். இறைவன் தோன்றி, " நாம் ஒரு புதல்வனை உதவி அவனுற் சூர்கிளையை மாய்த்து உங்களைக் காப்பேம்!" என்றருளினுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபிரான் யோகத்திலிருந்தபொழுது தேவர்கள் மன்மதனை அனுப்பினர். அவன் இறைவன் நெற்றிக் கண்ணால் சாம்பராயினன். இறைவன் திருமணம் செய்து இமையவரும் இரதியும் வேண்ட, மன்மதனைத் தோற்றுவித்து, "இரதிக்கு உருவாயும் ஏனையோர்க்கு அருவாயும் இருப்பாய்!" என்றருளினன். பின்னும் தேவர்கள் சென்று வேண்ட, தேவரீரைத் தந்தருளினார். "எம்பெருமானே! யன்றிச் சூரனை அழிக்க வல்லார் வேறு யாவர்? சூர் முதல் களைந்து தேவரைக் காத்தருள்க!" என்று அசுரர் வரலாறு முழுதுஞ் சொன்னார். "எல்லாம் அறிந்த தேவரீர் குழந்தை சொற் கேட்டு மகிழும் பெற்றார்போலக் கேட்டருளினீர். அடியேன் சொன்னேன் என்னும் பிழையைப் பொறுத்தருளுக," என்று வியாழ பகவான் வணங்கினார். எமபெருமான் அருள் செய்து, "இந்திரனே! வருந்தாதே! சூரன் முதலியோரை அழித்து உனது பொன்னுலக வாழ்வைத் தருவேம்" என்றருளினார். இந்திரன் மகிழ்ந்திருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 33. வீரவாகுதேவர் தூது செல்லல்

திருச்செந்திப் பதியில் வீற்றிருக்கும் முருகக் கடவுள்: அரசதருமத்தின்படி ஒரு தூதனுப்பி, சூரன் கருத்தை யறிவோம்! என எண்ணி, வீரவாகுதேவரைப் பார்த்துச் "சூரபதுமனிடம் தூதுசென்று சயந்தன் முதலிய தேவர்களைச் சிறைவிடுத்துத் தருமநெறிப்படி அரசியற்றுவா யானல் இன்னும் அநேககாலம் இருந்து வாழ்வாய்; இல்லையேல் நாளையே போர்தொடங்கும்! முருகக்கடவுள் வேலுக்கிரையாவாய்! என்று கூறி அவன் மனக்கருத்தை அறிந்து வருதி," என்று பணித்தருளினர். "அப்படியே செய்கின்றேன்!" என்று பணிந்து விடைபெற்று வீரவாகுதேவர் சென்று, கந்தமாதனத்தையடைந்து கடலைப் பாய்ந்து இலங்கையையடைந்து எதிர்த்த காவலர்பலரைக் கொன்று சூரன்நகர்வளம் எல்லாவற்றையும் பார்த்து அதிசயமடைந்து இப் பெரிய வளங்களையெல்லாம் பெற்றும் இன்னும் பலகாலம் அனுபவியாமல் இவன் அழியப்போகின்றனே, என்று இரங்கி ஊழ்வலியை நினைந்து ஒருவருங் காணமுடியாதபடி ஒரு வடிவமெடுத்துச் சயந்தன் சிறையிருந்த இடம்சென்று தேற்றி, சூரன் அரசசபையை அடைந்தார். "இவன் உயர்ந்த சிங்காசனத்திருக்க யான் தரையில் நிற்கலாமா?" என்று சண்முகப்பெருமான் திருவடியைத் தியானித்தார். உடனே கோடி சூரியப்பிரகாசமாய் ஒரு சிங்காசனம வந்தது. அதில் வீரவாகுதேவர் இருந்தார். அங்கிருந்தோரெல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வோரும் ஆச்சரியமடைந்தனர். சூரன் கண்டு வியப்புற்று, "தனித்தவனாய் அஞ்சாது நம்முன் வந்து மாயவித்தை காட்டி இருக்கின்ற நீ யார்? யாதுகாரணமாய் வந்தனை?" என்றான். "சூரனே! சண்முகப்பெருமானுடைய தூதன் யான்! அவ ரனுப்ப இங்கு வந்துள்ளேன். தேவர்களைச் சிறைவிடுதி; தருமநெறிப்படி அரசு இயற்றுதி; இன்னும் பல்லாண்டு வாழ்வாய்; இல்லையேல் போரிற் கிளையோடு அழிவாய்! உன் மனக்கருத்து என்ன?" என்றார். கேட்ட சூரன் கண்களில் நெருப்பெழும்பக் கோபித்து, "நேற்றைப் பாலனோ என்னை யழிக்க வல்லான்? என்முன் அஞ்சாது கூறிய உன்னுயிரைக் கணப்பொழுதில் இயமனுலகுக்கு அனுப்புவேன்; ஆனால் தூதனைக் கொல்லுதல் பழியென்று விடுத்தேன். தேவரைச் சிறைவிடேன், என்று உன்னை யனுப்பிய தலைவ னுக்குப் போய்ச் சொல்லுதி; விரைந்துசெல்!" என்று உரத்துக் கூறினான். "ஊழ்வினை முறையை ஓராய்! எதிரியின் பலத்தை நாடாய்; அறி வுரையை மனங் கொள்ளாய்; வீணே அழியப் போகின்றாய்! விதியை யாரே வெல்லுவர்?" என்று வீரவாகுதேவர் கூறினர். "என் பெரு மையை எண்ணாமல் இன்னுந் தருக்கும் இவன் வலியை அடக்கிப் பிடித்துச் சிறைப்படுத்துங் கள்!" என ஆயிரம் வீரரை ஏவினான் சூரன். கணப்பொழுதில் அவர் அவர்களைக் கொன்று, "எம்பெருமான் வேலால் நீ அழிவது திண்ணம்" என்று கூறிப் புறம்போந்தார். சிங்காசனமும் மறைந்தது! சூரன் பின்பு சதமுகனை அவர்மேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏவினான். அவனையும் அவர் கொன்றார். அதுவு மன்றி அவர் தம்மை எதிர்த்த காவலாளர்களை யும் கொன்றார்; அரசிருக்கை, மண்டபம், நகரம், எல்லாவற்றையும் அழித்தார். தம்மை எதிர்த்த சகத்திரவாகுகளையும் அவர் கொன்றார். சூரன் புதல்வனாகிய வச்சிரவாகுவை அனுப்பினான்; அவனையும் கொன்றார். யாளிமுகன் அவரை எதிர்த்தான்; அவனையும் கொன்றார். இவ்வா றாகப் பல அசுரரைக் கொன்றபின் அவர் மீண்டு; சண்முகப்பெருமான் திருவடிகளை வணங்கி நிகழ்ந் தன எல்லாங் கூறினர்.

எம்பெருமான் வீரவாகுதேவரைப் பார்த்து, "மிக வருந்தினை போலும்!" என்று கருணைசெய் தனர். வீரவாகுதேவர் இந்திரனைப் பார்த்துச் சயந்தனைத். தாம் தேற்றியது கூறி அவனை மகி ழும்படி செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 34. சூரன் அமைச்சியல்

சூரன் தனது நகரம் முழுவதும் அழிக்கப் பெற்றதை நினைந்து ஒற்றரைப் பார்த்து, "பிரமாவைக் கொண்டு வாருங்கள்!" என்றான். அவர்கள், "செந்திற்பதியில் பிரமா முதலிய தேவர்களெல்லோரும் கந்தனோடிருக்கின்றனர்," என்ன, "மற்ற அண்டத்திலிருக்கும் பிரமனைப் பிடித்து வாருங்கள்!" என்றான். அப்படியே ஒற்றர் சென்று அப் பிரமனைப் பிடித்துக் கொண்டுவந்து விட்டார்கள். சூரன் பிரமாவைப் பார்த்து, "அழிந்த எனது நகரம் முன்போலாகப் படைப்பாய்!" என்றான். பிரமன் அவ்வாறே படைத்தான். சூரன் கண்டு மகிழ்ந்தான். ஒற்றர் வந்து வணங்கி, "அரசே! சிவகுமாரன் இலக்கத்தொன்பது வீரர்களும், இரண்டாயிரம் வெள்ளம் பூத சேனைகளும், கணத்தலைவர்களும் சூழப் பூமியில் வந்து, தாரகனைக் கிரவுஞ்ச மலையோடும் அழித்து, செந்திற்பதியில் இருக்கின்றான்" என்றனர். சூரன் விரைந்து மந்திரிமார், புதல்வர், சிங்கமுகன், சேனாதிபதிகள் ஆகிய எல்லோரையும் அழைத்து மந்திராலோசனைச்சபை கூட்டி, நிகழ்ந்த சம்பவங்களைக் கூறினான். தருமகோபன் முதலிய மந்திரிமாரும் பானுகோபன் முதலிய புதல்வரும், சேனாதிபதிகளும் மற்றுமுள்ளோரும் தத்தம் வீரங்களைக் கூறி, "இதற்கு ஒரு மந்திர ஆலோசனையா? ஒரு வீரனையும் சேனைகளையு மனுப்பி, வெற்றிகொள்ளலாமே!" என்று விளம்பினர். சிங்கமுகாசுரன் எழுந்து, "அண்ணா! நேற்றைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலனென்று முருகனை அவமதிக்காதே. அவன் ஆதியுமந்தமுமில்லா முதல்வன்; தேவர்களைச் சிறைவைத்து வருத்துவதையும் எமக்குத் தந்த வரத்தையும் நூற்றெட்டு யுகம் முடிவதையும் உணர்ந்து, தான் கொடுத்த வரத்தைத் தானே அழிப்பது முறையன்றென்று அறுமுகக் கடவுளைத் தோற்றுவித்தான். சண்முகக் கடவுள் பெருமையை ஆர் அறிவார்? அமலனே அவ்வுருவாயுற்றான்! என எண்ணுதி; தேவர்களைச் சிறை நீக்கிவிட்டால் அவர் போர் தொடுக்கார். எம் பிழையையும் அவர் பொறுத்தருளுவார்.

சூரவ ரைச்சிறு பாலரை மாதரைக் குறைதீர்
விரத நற்றொழில் பூண்டுளோர் தம்மை மேலவரை
அருமறைத்தொழி லாளரை யொறுத்தன ரன்றே
நிரய முற்றவுஞ் சென்றுசென் றலமரு நெறியோர்

—சூரனமைச்சியற் படலம், செய், ௪௦௩.

சாதுக்கள், பெரியோர், ஏழைகள், மகளிர் குழந்தைகள் ஆகிய இவர்களுக்குத் துன்பஞ் செய்தல் பெரும்பழியல்லவா? தேவர்களுக்குத் துன்பஞ் செய்தவர் யாராவது இதுவரையில் உய்ந்ததுண்டா? ஒருவருமில்லையே! இன்னும் நீயும் யாமும் நன்கு வாழவேண்டுமென்னும் ஆசையால் இது கூறினேன்!" என்றான்.

சூரன் நகைத்து, "தம்பீ! பகைவருக்குப் பயந்து பேடியாயினை போலும்! கள்ளியபரக் கிளைகள் போலப் பலதலைகள் இருந்தும் இரண்டாயிரம் கைகளிருந்தும் என்ன பயன்? அழியா வரம்பெற்ற யான் பாலனுக்கு அஞ்சேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவர்களைச் சிறைவிடேன்!" என்றான். சிங்கன் "விதியை விலக்க யாரால் முடியும்? இவன் அழிவது திண்ணம்; அதற்கு முன் போர் செய்து யாமிறப்பதே நன்று" என்று தனக்குள் நினைத்து, "அண்ணா! ஒன்றுக்கும் அஞ்சவேண்டியதில்லை! பாலன் போர்புரிய வந்தால் நீ போகவேண்டாம்; ஒரு ஒற்றனை யனுப்பினால் யானே சென்று போரில் அவனையும் சேனைகளையும் வெல்லுவேன்!" என்றான். சூரன் தம்பியைத் தழுவி மகிழ்ந்து, எல்லோரையும் அனுப்பிவிட்டுத் தானும் இந்திரவளத்தை அனுபவித்திருந்தான்.

சூரியன் உதயஞ்செய்தவுடன் குமாரக்கடவுள் வீரவாகுதேவர் முதலிய வீரர்கள், தேவர்கள், சேனைகள், கணத்தலைவர்கள் ஆகிய எல்லோருஞ் சூழக் கடலைக் கடந்து இலங்கையை யடைந்து வடபாகத்தில் "ஏமகூடம்" என்னும் பாசறையைத் தெய்வத் தச்சனால் அமைப்பித்து அங்கே தங்கியிருந்தனர். நாரதமுனிவர் இதனைச் சூரனுக்கு அறிவித்தனர்; ஒற்றர்களும் அறிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 35. போர் தொடங்குதல்

சூரபதுமன் அடங்காக் கோபங்கொண்டு அயலில் நின்றவரைப் பார்த்து, "பானு கோபனை அழைத்து வாருங்கள்!" என்றான். தூதுவர் சென்று சூரன் கட்டளையைத் தெரிவித்தார்கள். பானுகோபன் சூரனை யடைந்து வணங்கினான். "பகைவர் சேனைகளோடு நம் நகரின் வடபால் வந்து தங்கினர். நீ சென்று போர் புரிந்து அவர்களை வென்று வருதி!" என்றான் சூரன். பானுகோபன் விடைபெற்று நால்வகைச் சேனைகளோடும் போர்க்களத்திற்குச் சென்றான். இருவகைச் சேனைகளும் போர் புரிந்தன. பானு கோபன் வீரவாகுதேவருடன் போர் புரிந்து வெல்லமுடியாமல் மாயையால் மறைந்து தன்னிடம் சென்றான். இரண்டாம் நாள் சூரன் சேனைகளோடு வந்து யுத்தம் செய்தான். சண்முகப்பெருமானை வெல்லமுடியாமல் மாயையால் மறைந்து அரண்மனையை யடைந்தான். மூன்றாம்நாட் பானுகோபன் சென்று யுத்தஞ் செய்து வீரவாகு தேவரை வெல்லமுடியாமல் மாயைப்படையை விட்டு அவர்கள் உணர்வை மயக்கிச் சுத்தோதகக்கடலில் வைத்துக் காக்கச் செய்து, சூரனை யடைந்து, தான் வெற்றியடைந்ததாகக் கூறினான். சண்முகப்பெருமான் வேற்படையைச் செலுத்தி அவர்களை மீட்டருளினார். மீண்டுவந்த அவர்கள் சூரன் நகரை யழித்து, அநேகரை வதைத்து, சண்முகமூர்த்தியை யடைந்து துதித்தனர். நான்காம்நாள் சூரன் புதல்வனாகிய இரணியன் போர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்து ஆற்றுமல் மீன் வடிவாய்க் கடலுள் ஒளித்தான். அக்கினிமுகாசுரன், மூவாயிரர், தருமகோபன், ஆகிய இவர்கள் போர் புரிந்து வீரவாகு தேவராற் கொல்லப்பட்டனர். பானுகோபன் வந்து எதிர்த்துக் கடும்போர் புரிந்து கடைசியில் மல்யுத்தஞ் செய்தான். வீரவாகுதேவர் அவனையும் கொன்றார். ஐந்தாம்நாள் சிங்கமுகாசுரன் போர்புரிந்தான் ; வீரவாகுதேவர் அவனோடு போர்புரிந்து வெல்லமுடியாமல் தயங்கி நின்றார். சண்முகப்பெருமான் எழுந்தருளி முன் நின்று தருமநெறிகளைக் கூறியும் கேளாணுய்ப் போர் செய்யவே துணிந்த சிங்கமுகனைக் குலிசாயுதத் தாற் சங்கரித்தருளினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 36. சூரபதுமன் வதை

ஆறும்நாள் தம்பிமாரும் பிள்ளைகளும் சேனைகளும் அழிந்த பின்னும் மனமிளகாத சூரன் மற்ற அண்டங்களிலிருந்த சேனைகளை வரவழைத்துக் கொண்டு சென்று எதிர்த்தான். சுப்பிரமணியப்பெருமான் திருவிளையாட்டாக அவனோடு அநேகவிதமான யுத்தங்களைச செய்தார்; சேனைகள் முழுவதையும் அழித்தார். பின்னும் சேனைகள் வந்தன; அவற்றையும அவர் அழித்தார். பின்னும் வந்தன. திரிபுரசங்காரமூர்த்திபோலக் கணப்பொழுதினுள் ஒன்றுந் தவறாமல் அவற்றையும் அழித்தருளினார். தமியனாய்ச் சூரன் நின்றான். அப்போது கருணையால் தாம் விஸ்வரூபங் கொண்டு நின்று சூரனுக்குச் சிறிது ஞான உணர்வைக் கொடுத்து அருளினார். சூரன கண்டான்.

கோலமா மஞ்ஞை தன்னிற்
　　குலவிய குமரன் றன்னைப்
பாலனென் றிருந்தே னந்நாட்
　　பரிசிவை யுணர்ந்தி லேன்யான்
மாலயன் றனக்கு மேனை
　　வானவர் தமக்கும் யார்க்கும்
மூலகா ரணமாய் நின்ற
　　மூர்த்தியிம் மூர்த்தி யன்றோ.

—சூரபன்மன் வதைப்படலம், செய். ௪௯௯

ஆயிர கோடி காம
　　ரழகெலாந் திரண்டொன் றாகி
மேயின வெனினுஞ் செவ்வேள்
　　விமலமாஞ் சரணந் தன்னிற்
றூயநல் லெழிலுக் காற்றா
　　தென்றிடி லினைய தொல்லோன்
மாயிரு வடிவிற் கெல்லா
　　முவமையார் வகுக்க வல்லார்.

—செய். ௪௯௧

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணலார் குமரன் மேனி
 யடிமுதல் முடியின் காறும்
எண்ணிலா வூழி கால
 மெத்திற நோக்கி னுலுங்
கண்ணினு லடங்கா துன்னிற்
 கருத்தினு லடங்கா தென்பால்
நண்ணினு னமருக் கென்கை
 யருளென நாட்ட லாமே. —செய். சுசக.

"எல்லா உயிர்களும் மற்றுமுள்ள யாவும் இப்பெருமான் திருமேனியிற் காண்கின்றனவே! முழுமுதல்வனுகிய மூர்த்தி இவனே! பாலகன் என அறியாமையால் முன் கூறினேன்; எனது தம்பியாகிய சிங்கமுகனும் இளைய புதல்வனும் மந்திராலோசனை செய்யும்பொழுது கூறியவற்றை அப்போது மறுத்தேன். அவை முழுவது முண்மையென்பதை இங்கு கண்டேன்." என்று வியந்தான். சிறிது கொடுத்த ஞான உணர்வை மாற்றியவுடனே, "முன்போல இவன் ஒருவடிவைக் காட்டி என்னை இங்கு மயக்கினுன்; இவனேடு போர்புரிவதே தக்கதாகும்!" என்று எண்ணினுன். இந்திரன் மயில் வடிவாய் இறைவனைச் சுமந்து நின்றுன். அக்கினிதேவன் சேவற் கொடியாய் நின்றனன். போர்செய்ய நினைத்த சூரன் ஒரு மாயையால் இருள் வடிவங்கொண்டு அதில் மறைந்து, "தேவர்களை யுண்பேன்!" என்று சென்றுன். அதை ஞானத்தா லறிந்த தேவர்கள், "சூரன் எங்களை உண்ண வருகின்றுன்!" என்று ஓலமிட்டனர். மயில்வடிவாய்ச் சுமக்கும் இந்திரன், "எம்பெருமானே! இவனைக் கொன்று எம்மைக் காத்தருள்க," என்று வேண்டினன். "அஞ்சாதீர்!" என்று அபயங்கொடுத்தருளி, "சூரன் உயிரை உண்டு மீளுதி!" என்று குமாரக்கடவுள் தமது வேற்படையைச் செலுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினர். வேற்படையின் வரவைக் கண்டதும் மாயமெல்லாம் நீங்கிற்று. சூரன் கடல் நடுவில் பெரிய மாமரவடிவாய் நின்றான். சென்ற வேற் படை மாமரவடிவை வெட்டி வீழ்த்தியது. உடனே சூரன் உடைவாளேந்திப் போர்குறித்து வந்தான். வேல் அவனுடலை இருபிளவாக்கிக் கிழித்து, ஆகாய கங்கையில் முழுகிச் சண்முகக் கடவுள் திருக்கரத்தில் வீற்றிருந்தது. சூரனது உடம்பின் இருபாதியும் சேவலும் மயிலுமாகிய வடிவங்களைக் கொண்டு வரக்கண்ட முருகக்கடவுள் சேவலைக் கொடியாய் நிற்கும்படி பணித்து, மயி லின்மீது பாய்ந்து, "வாகனமாய் எம்மைச் சுமக் குதி!" என்று பணித்தனர்.

இந்திரனும் அக்கினியும் தங்கள் தங்கள் வடி வங்களை அடைந்தனர்; தேவர்கள் எல்லோரும் முருகக்கடவுளைப் போற்றினர். சூரன் இறந்தான் என்பது கேட்டவுடன் பதுமகோமளை எனும் மங்கை உயிர் நீங்கினள். ஏனைய காதற் கிழத்தியரெல்லோரும் புலம்பி அக்கினியிற் பதுமகோ மளை உடலை முதலில் இட்டு, பின் தாமெல்லோ ரும் விழுந்து உயிர் நீங்கினர். இரணியன் ஆகா யத்தில் நின்று புலம்பி, தந்தை முதலானோர்க்கு இறுதிக்கடன்களைச் செய்து, மோட்சமடைய எண் ணித் தவஞ்செய்தான்.

குமாரக்கடவுள் சயந்தன் முதலிய தேவர்களை யும், மங்கையர்களையும் சிறையினின்றும் மீட்பித் தார். போரிலிறந்த அனைவரையும் எழுப்பி, "சூரனது நகரைக் கடலாக்குதி!" என்று வருண னுக்குப் பணித்துத் தேவர்கள், வீரர்கள், சேனை கள், யாவருஞ் சூழச் செந்திற்பதியை அடைந்து வீற்றிருந்தருளினர். தேவர்கள் சிவாகம முறைப் படி குமாரக்கடவுளைப் பூசித்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 37. தெய்வயானை அம்மை திருமணம்

திருச்செந்திற் பதியில் முருகக்கடவுள் அசுரரைச் சங்கரித்த தோஷ நிவிர்த்தியின் பொருட்டு மயனால் ஆலயம் அமைப்பித்துச் சிவலிங்கந் தாபித்துச் சிவபூசை செய்தருளினார். பின்பு வீரர்கள், தேவர்கள், சேனைகள் தத்தம் ஊர்திகளிலிவர்ந்து சூழ்ந்துவரத் திருப்பரங்குன்றை அடைந்தார். அங்கே மயன் ஆலயம் அமைக்க எல்லோரையும் ஆங்காங்கு இருக்கும்படி பணித்துக் கோயிலை யடைந்து சிங்காசனத்து வீற்றிருந்தருளினார். அங்கு பராசரமுனி புதல்வர் அறுவர்க்கும் ஞானோபதேசஞ் செய்தருளினார்.

இது நிற்க, இந்திரன் முருகக்கடவுளுக்குத் தன் புதல்வியாகிய தெய்வயானையைத் திருமணஞ் செய்து கொடுக்க நினைத்துப் பிரம விஷ்ணுவுக்கு அறிவித்தான். அவர்கள், "விரைவில் அன்னது செய்ய முயற்சிப்பாய்!" என்றனர். இந்திரன் ஒரு தூதனைப் பார்த்து, "மேருமலையிலிருக்கும் எனது மனைவியையும் புதல்வியையும் இங்கு அழைத்து வருவாய்!" என்று பணித்தான். "நன்று" என வணங்கிச் சென்று மேருவை யடைந்து இந்திராணியைக் கண்டு, குமாரப்பெருமான்: சூரன் முதலிய அசுரர்களைச் சங்கரித்துத் தேவர்களைச் சிறைமீட்டுத் திருப்பரங்குன்றில் எழுந்தருளினார். உன்னையும் புதல்வியையும் திருப்பரங்குன்றிற்கு அழைத்துவரச் சொன்னான் அரசன்," என்றான். உடனே அயிராவதத்திலேறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திராணி புதல்வியுடன் திருப்பரங்குன்றை யடைந்து இந்திரனிருக்கை யெய்தினள். தெய்வ மகளிரையும் சயந்தனையும் கண்டு மகிழ்ந்திருந் தாள். இந்திரன் தேவர் குழுவுடன் சண்முகப் பெருமான் சந்நிதியை யடைந்து, "எம்பெரு மானே! சூர்முதல் களைந்து எமது துன்பத்தை நீக்கியருளினை! யாம் செய்யத்தக்க கைம்மாறு ஒன்றுமில்லை; ஆயினும் அடியேன் புதல்வியைத் திருமணஞ் செய்துதர விரும்பினேன்; ஏற்ற ருள்க," என்று வேண்டினன். முருகக்கடவுள், "அவள் முன்னமே என்னை அணையத் தவஞ் செய்தாள்; அங்ஙனம் செய்வாய்!" என்றார். இந்திரன் மகிழ்ந்து தேவர் முனிவர் யாவர்க்கும் பூவுலகில் முசுகுந்தச் சக்கரவர்த்தி முதலியவர் களுக்கும் அறிவித்தான். எல்லோரும் அங்கு வந்து குழுமினர். மிக அலங்காரமான திருமண மண்டபம் அமைத்துப் பிரமா முதலிய தேவரு டன் சென்று மணஞ்செய வரும்படி குமாரக்கட வுளை அழைத்தான். முருகக்கடவுள் சகல வரிசை களோடும் எழுந்தருளிச் சென்று தெய்வயானை அம்மையைத் திருமணஞ் செய்தருளினர். அத் தன்மையாகச் சிலகாலம் கழிந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 38. விண்குடியேற்றியது

சண்முகப்பெருமான் ஒரு தினம் தேவர், வீரர், சேனைகள் யாவரும் சூழ்ந்துவரப் பொன்னுலகை யடைந்து முன் அசுரரால் அழிக்கப்பட்ட அந் நகரை முன்னையினும் சிறப்புற மயனால் அமைப் பித்து, பிரமன் முதலியோரைப் பார்த்து, "இந் திரனுக்கு முடிசூட்டுவீராக!" என்றருளினார். அதற்கு வேண்டிய எல்லாவற்றையும் சேகரித்து அரியணையிலிருத்திப் பரிசுத்த தீர்த்தத்தாலாட்டிப் பட்டாடை யுடுத்தி இரத்தினாபரண பூஷிதனாக்கி முடிசூட்டினார். முன்போல் அரசியல் நடத்தி இனிதிருப்பாயாக என்று இந்திரனை அங்கு நிறுவி ஏனைய தேவர்களைத் தத்தமிடங்கட்குச் செல்லும் படி விடைகொடுத்து வீரரும் சேனைகளுஞ் சூழ தெய்வயானை அம்மையாரோடும் திருக்கைலா சத்தை யடைந்து, சிவபெருமானையும் உமையம் மையாரையும் வணங்கி விடைபெற்றுக் கந்தமாத னத்தை யடைந்து தமது திருக்கோயிலிற் சென்று, வீரர் முதலானவர்களை முறைப்படி அமைந்த இடந்தொறும இருக்கப் பணித்துத் தெய்வயானை யம்மையாரோடு சிங்காசனத்தெழுந்தருளினர்.

இந்திரன் சூரனாற்பட்ட துன்பங்களை நினைத்து வாழ்க்கையை வெறுத்துத் தவஞ்செய்து வீடெய்த எண்ணினன். இதையறிந்த வியாழ பகவான் ஒரு சூழ்ச்சியால் இந்திரனையடைந்து உலகாயதமதத்தைப் போதித்து, காமசாத்திர முறைகளை எடுத்துக் கூறினர். அதுகேட்ட இந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரன் மயங்கிச் சயந்தனிடம் அரசியலை யொப் பித்து இந்திராணியுடன் தனித்திருந்து மதன நூன் முறைப்படி கணமும் பிரியாது இன்ப மனுபவித்திருந்தான்.

சயந்தன் ஒருதினம் வியாழகுருவை வணங்கி, "சூரனுல் நாம் துன்பமடைய வேண்டிய காரணம் என்ன? தமியேன் அறியச் சொல்லவேண்டும்!" என்று கேட்டான். வியாழபகவான் சொல்லுவா ருயினுன் :

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 39. தக்கன் தவம்

தக்கன் என்பவன் தந்தையாகிய பிரம தேவனை யடைந்து, "முழுமுதல்வனாகிய கடவுள் யார்? அவரைக் குறித்துத் தவஞ் செய்யும்முறை யாது?" என வினவினன். பிரமன் வேதங்கள் சொல்லும் உண்மைகளை எடுத்துக்கூறி, "சிவன் ஒருவனே பரம்பொருள்! நாமெல்லாம் அவனாணை யால் நடப்பவர்கள். எவ்வுயிர்களிலும் உயிரில்லாப் பொருள்களிலும் நிறைந்திருப்பவன்; மூவரில் ஒருவனுவான்; அவன் அவர்களில் வேறாயும் நிற்பான். அவனோடு எம்மையும் சேர்த்துச் சொல்பவர், தாமும் நரகடைந்து எம்மையும் நரகடைவிப்பர்; அவன் பெருமை சொல்லவொண்ணாதது. அப்பெருமானை நோக்கி மானதவாவியிடைச் சென்று தவஞ் செய்வாய்!" என்று உபதேசித்தான். தக்கன் பணிந்து மானதவாவிக் கரையிலிருந்து சிவபெருமானை நோக்கித் தவஞ் செய்தான். அவன் தவத்தை யுணர்ந்த சிவபிரான் உமாதேவியாரோடு இடபவாகனராய்த் தோன்றி யருளினார். தக்கன் எழுந்து வணங்கித் துதித்தான். "நீ வேண்டிய வரம் யாது" என இறைவன் அருள, "சகல உலகங்களிலும் எனது ஆணை செல்லவும்; உன்னை வந்து வணங்குபவர்களெல்லாம் என்னை வந்து வணங்கவும்; தேவர்கள் அவுணர்கள் யாவரும் யானேவின பணி செய்யவும்; புதல்வரும் மகளிரும் அளவிலாதோர் யான் விரும்பிய பொழுதில் தோன்றவும்; உமாதேவி எனக்குப் புதல்வியாய் வரவும்; நீ மறையவனாய்

வந்து அவளை மணஞ் செய்யவும் வரந் தருவாய்!" என்று வேண்டினன். "நீ விரும்பிய வரமெல்லாம் தந்தோம்! நன்னெறியில் நிற்பாயாகில் இத்திரு நிலைபெறும்," என்றுகூறிச் சிவபெருமான் மறைந்தருளினர். பிரமன் ஞானத்தால் சிவபிரானிடம் பெற்ற வரங்களை அறிந்து உய்யும்வழியறியாது மயங்கினன் என்று வருந்தி அவன் முன் வந்தான்.

வந்த பிரமனைத் தக்கன் பார்த்து, "பொன்னுலகும் இணையாகாத அழகிய நகரமும், அரண்மனையும் அமைப்பாய்!" என்ருன். பிரமன் அவ்வாறே அமைத்து அதற்குத் "தக்கமாபுரி" என்று பெயருமிட்டான். தக்கன் அதைப்பார்த்து மகிழ்ந்து, அரண்மனையிற் சென்று தவமுனிவர் துதிக்கச் சிங்காசனத்து இருந்தான். வியாழகுருவால் இத்தன்மைகளை அறிந்த இந்திரன் தேவர்களோடு அங்கு வந்தான். சுக்கிராச்சாரியால் இதையறிந்த அவுணராசன் அவுணர்களோடு வந்தான். சூரியன், சந்திரன், நாள், கோள், திக்குப்பாலகர், மேலுலகத்தோர், பாதலலோகத்தோர் பலரும் வந்தனர். எல்லோரும் தக்கனை வணங்கி நின்றனர். தினமும் இவ்வண்ணம் யாவரும் வணங்க, எவ்வுலகமும் தன் ஞணை செல்லத் தக்கன் அரசுபுரிந்திருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 40. தக்கன் மகப் பெற்றது

தக்கன் வேதவல்லியென்னுந் தனது மனைவி யோடு கூடி ஆயிரம் புதல்வர்களைப் பெற்றான். அவர்களுக்கு முப்புரிநூல் அணிவித்து, வேதங்க ளுங் கற்பித்து, "மானதவாவிக் கரையில் இருந்து சிவனை நோக்கித் தவஞ் செய்து எல்லாவற்றை யும் படைக்கும் வரம் பெற்று வாருங்கள்!" என்று அனுப்பினான்.

அவர்கள் அவ்வாறு தவஞ் செய்யும் பொழுது, நாரதமுனிவர் அங்கு சென்று, "எதற்காகத் தவஞ் செய்கின்றீர்?" என்று அவர்களைக் கேட்க, அவர்கள் தக்கன் பணித்ததைக் கூறினர். நாரதர் நகைத்து, "குளிக்கப்போய்ச் சேறு பூசி யதைப்போலத் தவஞ் செய்து முத்தியடைவதை விட்டு, மேலும், பிறப்பு, இறப்பு என்னுந் துன் பத்தைத் தருவதாகிய படைத்தல் தொழிலைச் செய்ய வரம்பெறப் போகின்றீரா?" என்றார். அவர்கள் வணங்கி, "அதற்குரிய வழிகளைச் சொல்லுக!" என்றனர். நாரதமுனிவர் அவர் களுக்கு ஞானத்தையுபதேசித்து, முத்தியடைதற் குரிய வழியைக் கூறிச்சென்றார். அவ்வண்ணமே அவர்கள் தவமாற்றி முத்தியடைந்தனர். தக்கன் நெடுங்காலமாய்ப் பிள்ளைகள் மீண்டுவராமையால் ஞானத்தால் அவர்கள் தன்மையை அறிந்து; பின்னும் ஆயிரம் மக்களைப்பெற்று, முன்போலவே அனுப்பினன். அவர்களும் முன்சென்றவர்களைப் போல நாரதரால் உபதேசிக்கப்பெற்றுத் தவஞ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து முத்தியடைந்தார். தக்கன் அதையறிந்து கோபங்கொண்டு, "நாரதன் எங்கும் அலைந்து திரியக் கடவன்!" என்று சபித்து, "இனி மக்களைப் பெறுவதில்லை!" என்றெண்ணி இருபத்துமூன்று பெண் பிள்ளைகளைப் பெற்று முனிவர்களுக்கு மணஞ் செய்து கொடுத்தான். அவர்கள் புதல்வர் புதல்வியரைப் பெற்றுப்பெருகி வாழ்ந்தனர். பின் இருபத்தேழு புதல்வியரைப் பெற்றுச் சந்திரனுக்கு மணஞ் செய்துகொடுத்து, "எல்லோரையும் சமமாகவே பாவி!" என்றான். அப்பெண்களே இருபத்தேழு நட்சத்திரங்கள் பெயரால் வழங்கப்படுபவர். சந்திரன் கார்த்திகை, ரோகணி என்னும் இருவரிடத்தும் அதிக காதல்கொண்டான். மற்றையோர் தங்களைச் சந்திரன் அலட்சியம் செய்தான் என்று தக்கனிடம் முறையிட்டனர். தக்கன் கோபங்கொண்டு, "சந்திரன் கலைகள் தேய்க!" என்று சாபமிட்டான். எல்லாக் கலைகளும் தேய்ந்து ஒரு கலைமாத்திரம் இருக்க, சந்திரன் வருந்தி இந்திரனிடமும் பிரமாவிடமும் முறையிட்டான். அவர்கள் சொல்லியபடி சிவபெருமானை அடைந்து துதித்துத் தக்கன் சாபத்தைக் கூறினன். சிவபெருமான் ஒரு கலையைத் தமது சடையில் தரித்தருளினார். தக்கன் சாபமனுகாதாயிற்று. "இன்றுமுதல் ஒரு நாளைக்கு ஒரு கலையாக வளர்க!" என்று சிவபெருமான் அருளினார். அதனால் சந்திரன் கலைகள் தேய்வதும் வளர்வதுமாயின. சந்திரன் சிவபெருமானை வணங்கி விடைபெற்றுச் சென்றான். இதையறிந்த தக்கன், "யானிட்ட சாபத்தைச் சிவனே மாற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லான் ?" என்று கொதித்தான். புலகன் என்னும் முனிவன் "தக்கனே! கோபங்கொள்ளாதே; சிவனை இகழ்ந்தவர் உய்யார்; தன்னையடைந்தவர் துயர்தவிர்ப்பது அவனியற்கை; ஒரு பட்சத்தில் தேய்தலும் ஒரு பட்சத்தில் வளர்தலுமாயிருத்தலால் உனது சாபத்தையும் நிலைநிறுத்தினான்; சந்திரனைப்போலச் சிவபிரானும் பின்னர் உனக்கு மருகனுவான். அவனை மனங்கொண்டு பரவுதி!" என்றான். தக்கன் கோபந்தணிந்து அரசுபுரிந்திருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 41. உமை தக்கன் மகளானது

திருக்கைலாசத்தில் வீற்றிருக்கும் உமையம்மை சிவபெருமானை வணங்கி, "உமது உண்மை நிலையைச் சொல்லியருளவேண்டும்!" என்றாள். இறைவன், "உயிர்கள் உய்யும்பொருட்டு ஐந்தொழில் புரிவோம்; நீக்கமற யாண்டும் நிறைந்திருப்போம்; எமக்கென ஒரு உருவமில்லை; அருளே எமது உருவமாகும்!" என்றிவ்வாறு கூறியருளினர். இறைவி, "அருளே உருவமென்னில் அவ்வருள் யான்தானே!" என்று தன்னை வியந்தாள். இறைவன் எவ்வுயிர்களும் இயங்குந்தன்மையை மாற்றினன். எல்லாம் செயலின்றிச் சடமாயின. இறைவி ஒன்றும் இயங்காமைகண்டு ஆச்சரியமடைந்தாள். "சுவாமி, என்பொருட்டு இதனைச் செய்து காட்டினை; உமக்கு ஒரு கணம்; உயிர்களுக்குப் பல யுகங்களாயின. உயிர்கள்மல்க அருள்புரிக" என்றாள். இறைவன் அங்ஙனம் அருள்புரிந்து, "இப்பாவம் உன்னைச் சேர்ந்தது," என்று அருளினன். அம்பிகை, "அது நீங்கும் வழி அருள்க!" என்று வேண்டினள். "பூமியில் தக்கன் மகளாய் அவதரித்துத் தவஞ்செய்வாய்! யாம் வந்து உன்னை மணஞ்செய்வோம்" என்று அருளினன்.

அம்பிகை காளிந்தி நதியில் ஒரு தாமரைப் பூவில் வலம்புரிச்சங்கு வடிவாய் இருந்தாள். மாசி மகத்தில் எல்லோரும் நீராட அங்கு வந்தனர். தக்கனும் வேதவல்லியோடு வந்து நீராடித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்புகையில் வலம்புரிச்சங்கைக் கண்டு எடுத்தான். உடனே அது அழகிய பெண் குழந்தை ஆயிற்று. மனைவியிடம் அக்குழந்தையைக் கொடுத்தான். இருவரும் மகிழ்ந்து அதை அரண்மனையிற் கொண்டு சென்று வளர்த்தனர். வேதவல்லி குழந்தையின் வரலாற்றை வினவ, முன் தான் தவஞ் செய்ததும், இறைவன் வரம்கொடுத்ததும் கூறி, "இறைவியே குழந்தையாய் வந்தாள்," என்றான்.

இறைவி ஐந்தாண்டுப் பருவங்கடந்து ஆறுவது ஆண்டில், "யான் சிவபெருமானை நோக்கித் தவஞ் செய்யப்போகின்றேன்!" என்றாள். தக்கன் கன்னிகாமாடமமைத்துத் தோழியரோடு தவஞ் செய்ய விடுத்தான். உமை கன்னிகா மாடத்துச் சென்று சிவனை நினைத்துத் தவஞ்செய்தாள். சில ஆண்டுகள் செல்ல, இறைவன் விபூதியணிந்து உருத்திராக்கம்பூண்டு, பிராமணப் பிரமசாரிபோல் கன்னிகாமாடத்தை யடைந்தார். காவலாய் நின்றோர் அவர் வரவை யறிவிக்க, அம்மை அவரை யழைத்துவரச்சொல்ல உள்ளே சென்ற பிரமசாரி, "ஏன் இப்படித் தவஞ்செய்கின்றாய்?" என்றார். "சிவபெருமானை மணக்க விரும்பி!" என்றாள் இறைவி. பிரமசாரி சிரித்து, "உனது தவத்திற்குச் சிவன் வருவானோ?" என்று கூற, உமை, "வராவிடில் தவஞ்செய்து உயிரைவிடுவேன்!" என்றாள். "யான் உனை மணஞ்செய்ய விரும்பி வந்தேன்!" எனலும்; அம்பிகை செவியை மூடிக் கொண்டு ஓடினாள். அங்குச்சென்று இறைவர் தம் வடிவைக் காட்டினார். காட்டவும் அம்பிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுந்து அவரைப் பணிந்தாள். சில தோழியர் தக்கனிடம்போய் இதை யறிவித்தனர். தக்கன் வேதவல்லியோடுவந்து, "மணஞ்செய வரவேண்டும்!" என்று சிவனையும் உமையையும் அழைத்துக்கொண்டு சென்றான். நகர் முழுவதும் அலங்கரித்து, தேவர் முனிவர் யாவரையும் வரவழைத்துச் சுபமுகூர்த்தத்தில் திருமணம் நிகழ்த்தினான். தக்கன் தன் மகளைத் தத்தஞ்செய்து கொடுத்ததும் இறைவன் மறைந்தருளினர். தக்கன் மிக்கோபங் கொண்டான். உமையும் வருந்திப் பின்னும் கன்னிகாமாடத்திற் சென்று தவஞ்செய்தாள். இறைவன் அங்குவந்து இடபவாகனத்தில் இறைவியை யழைத்துச் சென்றருளினர். தோழியர் சென்று இதனைச் சொல்லக்கேட்ட தக்கன், "முன்னும் இவன் என் மகளை மணமண்டபத்தில்விட்டுத் திடீரென மறைந்தான். நங்குலத்திற்குத் தீராத வசையையும் பழிச்சொல்லையும் உலகிற் பரவச் செய்தான். பின்னும் எனக்குத் தெரியாமல் வந்து என் புதல்வியை அழைத்துச்சென்றான். எனது ஆணையையும் நீக்கினன்!" என்று அதுமுதலாகச் சிவனை இகழ்ந்து வெறுத்து இருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 42. பிரமதேவன் யாகஞ்செய்தது

தக்கன் சிவனை இகழ்ந்ததை உணர்ந்த பிரமன், "இவனோ! சிவனருளிய வரத்தால் எமக்கெல்லாந் தலைவனாயினன். இப்போது சிவனை இகழ்கின்றான்; இனி எமக்குத் தீங்கு நேரும்போலும்!" என்று அஞ்சித் தக்கனையடைந்து, அவனோடு இனிமையாகப் பேசி, "நீ கைலையிற்சென்று சிவனையும் உமையையுங் கண்டுவா!" எனக் கூறினன். தக்கன் பிதாவின் சொற்படி கைலையை யடைந்தான். அங்கு காவல்செய்யும் பூதர் அவனைத் தடுத்தனர். தக்கன் கோபித்து "மகளையும் மருகனையும் காணச்செல்கின்றேன். காவற்காரராகியநீவிர் ஏன் என்னைத் தடுக்கின்றீர்?" என இகழ்ந்தான். அவர்கள், "அன்பில்லாத தக்கனே! பரம்பொருள் என அறியாது அவரை அவமதிக்கின்றனை; பேதையே!" என்னத் தக்கன் மீண்டு தன் இருக்கையை அடைந்தான்.

"மகளும் மருமகனும் ஏவித்தான் அக்காவலர் தன்னைத் தடுத்தார்போலும்" எனஎண்ணி, அங்கு வந்த தேவர் முனிவர் யாவரையும் பார்த்து, "இனிமேல் சிவனே பரம்பொருள் என்றுகூறும் வேதவாக்கியங்களை விடுங்கள்; பரம்பொருளாக அவனை ஒருவரும் மதியாதீர். இது எனது ஆணை!" என்றுகூறி யாவரையும் அனுப்பினன். பலகாலங் கழிந்தபின் பிரமன் சிவனை முதல்வனாகக்கொண்டு யான் ஒரு யாகம்செய்வேன் என்று எல்லோருக்கும் அறிவித்து திருக்கைலையிற்சென்று சிவபிரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னுக்கும் அறிவித்து இறைவனே எழுந்தருளிவர வேண்டுமே என்றான். "நந்தி வருவான்;" என்று இறைவன் அருளினன். பிரமா தக்கனுக்கும் அறிவித்துச் சென்று யாகத்தைத்தொடங்கி நடத்தும்போது, தேவர், முனிவர் யாவரோடும் தக்கன் அங்குசென்றான். எல்லோர்க்கும் ஆசனமுதவி இருக்கச்செய்து, யாகஞ்செய்ய நந்திதேவர் வந்தார், கணத்துடன். பிரமன் எழுந்து வணங்கி நந்திதேவரையும் கணத்தவரையும் ஆசனத்திருத்தி யாகத்தை நடத்த, தக்கன் கோபித்து, "நாமெல்லாம் இருக்கும் சபையின் நடுவில் சுடலையாடியின் ஏவலனை இருத்தினை! சிவனுக்கு அவிப்பாகம் கொடுத்தலாகாது! விஷ்ணுவுக்கு முதலில் அவிப்பாகம் கொடுத்து யாகத்தைச் செய்!" என்றான். நந்திதேவர் கோபங்கொண்டு "இப்படிச் சொன்ன உன் தலையை இப்போதே துணிப்பேன், அது இறைவன் கட்டளையல்ல என்று விடுத்தேன்!" என்றார். பின்னும் அவர் அவனைப் பார்த்து, "சிவபிரானை இகழ்ந்து யாகஞ்செய்பவர் அழிவர்; யாகமும் சிதையும்; அங்குவந்தோ ரனைவரு மிறப்பர்!" என்று சாபமிட்டுச் சென்று, இறைவனுக்கு நிகழ்ந்ததை விண்ணப்பித்து இருந்தார். பிரமனுடைய யாகம் நிறைவேறாது தடைபட்டது. எல்லாருஞ் சென்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 43. ததீசி முனிவர்

தக்கன் தனக்குப் பயந்து பலகாலமாக ஒருவரும் யாகஞ்செய்யாதிருப்பதை யறிந்து, "சிவனை விலக்கி, யானே ஒரு யாகஞ் செய்கின்றேன்" என்று எல்லார்க்கும் அறிவிக்க ஏவலரை யனுப்பினான். யாகசாலையை அழகாக அமைப்பித்தான். வேண்டிய பொருள்களை எல்லாம் குறைவறச் சேகரித்தான். ஏவலாளரைப் பார்த்து, "எல்லாரும் வந்தனரா?" என்று வினவினான். "ததீசி முதலிய சில முனிவர்களைத் தவிர மற்றவர்கள் எல்லோரும் வந்தனர்" என்று ஏவலர் கூறினர். தக்கன் யாகத்தைத் தொடங்குதலும், பல முனிவர் சூழத் ததீசியும் வந்தார். தக்கன் அவர் தனக்குப் பயந்து வந்தார் என்று எண்ணி ஆசனத் திருத்தினன். முனிவர் தக்கனை, "யாது காரணமாக என்னை அழைத்தனை?" என்றார். தக்கன் முன் நிகழ்ந்தவற்றைக் கூறிச், "சிவனை விலக்கி விஷ்ணுவை முதல்வராகக்கொண்டு ஒரு யாகஞ் செய்யப்போகின்றேன். இவர்களெல்லாரும் அவியுணவிற்கு வந்திருக்கின்றனர்!" என்றான். ததீசி நகைத்து, "நீ இச்செல்வமெல்லாம் யாரிடம் பெற்றாய்? அவனை மறந்தாய்; மயலுற்றாய்; யாகஞ் செய்யும்படி விதிக்கும் வேதமே சிவனை முதல்வனாகக் கொள்ளும்படி விதித்திருக்க, அதை விலக்கலால் வேதநெறியையும் மாற்றினாய்! சிவனையன்றி முதல் அவி ஏற்கும் தலைவர் யார்? வேதங்களையும் விஷ்ணு பிரமா முதலிய உயிர்களையும் உலகங்களையும் உலகப் பொருள்களையும் தோற்றுவித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவன் அவன் அல்லனோ? தோற்றுவிப்பவன் தானே ஆதலால் முத்தொழில் செய்பவரில் தானும் ஒருவனுய் இறுதித்தொழில் செய்கின்றான். தேவர்களுக்குரிய பதங்களையெல்லாம் கொடுத்தவன் அவனன்றோ! உயிர்க்குயிராய் எல்லாவற்றையும் இயக்கியும், அவற்றின் வேருயும், அன்பாலடைந்தார்க்கு முத்தியின்பத்தைக் கொடுக்கும் முதல்வனுயு மிருப்பவன் அவனன்றோ? 'அவனன்றி ஓரணுவும் அசையாது,' என்னும் அருமைவாக்கை நீ கேட்டதில்லையோ? வேதம் உபநிடதமெல்லாம் இவ்வுண்மைகளை இயம்பவும் உணராமல் மயங்கினை! பெற்ற தந்தையை நீக்கி இன்னொருவரைத் தந்தை என்று அழைப்பார்போன்று சிவனை விலக்கி யாகம் செய்யத் துணிந்தனை. சிவனை இகழ்ந்து உய்ந்தவர் யாவர்? இவைகளை உணருதி. சிவபெருமானை முதல்வனுகக்கொண்டு யாகத்தைச்செய்து வாழ்வாய்!" என்று கூறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 44. ததீசி உத்தரம்

ததீசி முனிவர் கூறிய அறிவுரையைக்கேட்ட தக்கன், பின்னரும் மயங்கி அகந்தைகொண்டு, "உங்கள் பரம்பொருள் புலித்தோலை யுடுப்பனே? மான், மழு, பாம்பு, வெண்டலை இவைகளை அணிவனே? பூதங்களைச் சேனையாய்க் கொள்வானே? எருதில் ஏறித் திரிவானே! சுடலையில் ஆடுவானே? ஒருத்தியைத் தலையிற் சுமந்து ஒருத்தியை இடப்பாகத்தில் வைப்பானே? பிள்ளைகளையும் பெறுவானே?" என்று வினவினன். ததீசி முனிவர், "மதியில்லாத தக்கனே! தனக்கென வேண்டுதல் வேண்டாமை யிலாத இறைவன், உயிர்களுக்கு அருள்புரியும்பொருட்டே அங்ஙனம் செய்தார்! அவற்றைக் கூறுவோம் கேட்பாய் :-

முன்னொரு காலத்தில் தாருகாவனத்திருந்த முனிவர்கள், 'கடவுளென்றொரு பொருளில்லை; நல்ல கருமத்தைச்செய்தால் அதுவே பலன் தரும்' என்னும் கன்மப் பிரமவாதக் கொள்கையினராய்த் தவஞ்செய்தனர். அவர்களுக்குத் 'தெய்வமொன்றுண்டு' என்னும் உணர்ச்சியை உண்டாக்க எண்ணிய சிவபெருமான், விஷ்ணுமூர்த்தியை யழைத்து மோகினி வடிவங்கொண்டு முனிவர் பக்கஞ் செல்லவிடுத்துத் தாம் மன்மதாகாரமான அழகு தோன்ற பிச்சாடன வடிவங்கொண்டு, கரத்திற் பலிபாத்திரந் தாங்கி, முனி பத்தினியர் பக்கமாய்ச் சென்றார். மோகினியைக் கண்டதும், முனிவர் தவஞ்செய்வதை விட்டுக் காம மயக்கங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு எழுந்து அவள்பின் சென்றார். பிச்சாடன வடிவைக் கண்டு மங்கையர் மயங்கிப் பின் தொடர்ந்தனர். முடிவில் முனிவர் மோகினியைக் கூட முடியாமல் மங்கையரிடஞ் சென்றனர். அம் மங்கையர் நிருவாணியிடம் மயங்கித் தாமே காதல்கொண்டு கருவுற்று, நாற்பத்தெண்ணுயிரவரைப் பெற்றனர். அவர்களைத் தம்மை நினைந்து தவஞ்செய்யும்படி சிவபெருமான் பணித்தருளினர். முனிவர்கள் அதுகண்டு வெட்கமுந் துக்கமுமுடையாராய்த் தம் பத்தினியரை மனையில் இருக்கும்படி யேவி, "இவர்கள் கற்பைக் கெடுத்த இவனைக் கொல்வோம்" என்று சூழ்ந்து, மாரண யாகம் செய்தனர். அவ் வோமகுண்டத்தில் தோன்றிய பொருள்களைச் சிவனைக் கொல்லும்படி அனுப்பினர். புலி வருதலும் அவர் உரித்து அதன் தோலையுடுத்தார்.

மான், மழு, அக்கினி, உடுக்கு இவைகளைக் கரங்களிலே தாங்கினார். பூதகணங்களைச் சேனையாயிருக்கும்படி பணித்தார்; பாம்பை அணிந்தார்; வெண்டலையைச் சடையிலே தரித்தார்; முயலகனை மிதித்து ஆடினார். ஒருவாற்றானுங் கொல்ல முடியாமல் 'இவனே முழுமுதற் கடவு'ளென்று முனிவர் உணர்ந்து வணங்கிப் பிழையைப் பொறுக்கும்படி வேண்டினர். இறைவன் கருணைசெய்து மோகினியுடன் மறைந்தார்.

கயாசுரன் என்பவன் யானையுருக்கொண்டு, உயிர்களை வருத்தினன். எல்லோரும் அடைக்கலம் புகுந்து வேண்ட, இறைவன் யானையை உரித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் தோலைப் போர்த்தருளினர். சர்வசங்கார காலத்தில் அழிந்தவற்றை மீளத் தோற்றுவிக்கும்பொருட்டு அவர் நடனமாடுவர். அக்காலத்து 'தருமதேவதை தன்னைக் காத்தருள்க' என்று வேண்ட, இடபவாகனமாக அதைக்கொண்டருளினார்.

முன்னொருகால் அம்பிகை விளையாட்டாக இறைவனுடைய கண்களை மூடினள்; அண்டங்களெல்லாம் இருள் சூழ்ந்தது. எம்பெருமான் நெற்றிக் கண்ணைத் திறந்தார்; இருள் நீங்கிற்று. அம்பிகை நாணிக் கரங்களை எடுத்தாள். பத்து விரல்களிலும் வியர்வை பெருகிக் கங்கைகளாய் ஓடின. எவ்விடங்களையும் அழிப்பதுபோல அவை செல்லப் பிரம விஷ்ணுக்கள் வேண்டுதலுக்கிணங்கிக் கங்கையைச் சிரசில் தாங்கி உலகங்களைக் காத்தருளினர்.

ஒருகாலத்தில் விஷ்ணு பிரமா முதலியோர், 'நாம் பிரமம்' என்று மயங்கினர். அப்போது இறைவன் வைரவக் கடவுளைத் தோற்றுவித்துப் பிரமாவின் உச்சிச் சிரசைக் கிள்ளி, மற்றையோரிடஞ் சென்று இரத்தத்தைப் பிச்சையாக ஏற்று, இறந்தவர்க்கு உயிர்கொடுத்து, அகந்தையை யடக்கி அண்டங்களெல்லாவற்றையும் காக்கச் செய்தனர்.

இந்திரன் ஒருகாலத்தில் அகந்தையுடன், சிவபெருமானை வணங்கத் திருக்கைலாசத்துக்குச் சென்றான். இறைவன் பூதவடிவுடன் வெளியில் தோன்றினர். இந்திரன் பார்த்து 'புதியவனுகிய

நீ யார்?' என்று கேட்டனன். இறைவன் யாதுங் கூறுராய், அச்சந்தரும் பார்வையுடன் நின்றார். இந்திரன் வெகுண்டு குலிசப்படையை எறிந்தான். குலிசம் அவர் மேனியிற் பட்டுத் துகளாயது. இறைவன் யாவரு மஞ்சத்தக்க உக்கிர வடிவு கொண்டு நின்றார். இந்திரன் பணிந்து அகந்தை நீங்கித் துதித்தான். இறைவன் கோபத்தைக் கடலில் வீசினர். அக்கோபமே சலந்தரன் உருவமானது. சலந்தரன் வளர்ந்து விருந்தை யென் பாளை மணஞ்செய்தான். பின் பலகாலம் எல்லா உயிர்களுக்குந் துன்பஞ்செய்தான். தேவர்கள் அஞ்சிச் சிவனிடம் முறையிட்டனர். சலந்தரன் ஒருநாள சிவனை மதியாது கைலைக்குச் செல்ல, இறைவன் பிராமணர்போல வடிவுகொண்டு, வெளியில் நின்று பூமியில் ஒரு வட்டங் கீறி, 'இதையெடுத்துத் தலையில் வைப்பாயேற் சிவனை வெல்வாய்!' என்றனர். அப்படியே அதையவன் தூக்கிவைத்தான். அது சக்கரப்படையாகிச் சலந்தரன் உடலைக் கிழித்துச் சிவனிடஞ் சேர்ந்தது. விஷ்ணு சலந்தரன் உடலிற் புகுந்து விருந்தையோடு கூடியிருந்தார். ஒருநாள் மாயையைமறந்து நித்திரை செய்யும்போது விஷ்ணு என்பதை யறிந்து, 'இறந்த என் கணவனுடலிற் புகுந்து என்னை வஞ்சித்தான்!' என்று விருந்தை கோபங் கொண்டு, 'வஞ்சனையால் என் கற்பைக் கெடுத்தாய்; உன் மனைவியைப் பகைவர் கவரப் பூமியிற் குரங்குகளோடு திரிவாய்!' என்று சாபமிட்டு, அக்கினியில் விழுந்து உயிர் நீங்கினள். சலந்தரனைக் கொன்ற சக்கரப்படையை விஷ்ணு, ஒருகாலத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திற் சிவனைப் பூசித்துப் பெற்றார். தேவரும் அசுரரும் பாற்கடலைக் கடைந்தகாலை நஞ்சு தோன்றியது; எல்லோரும் அடைக்கலம்புகுந்து வேண்ட, இறைவன் அதையுண்டு கண்டத் தடக்கி எல்லோரையுங் காத்தருளினர். இங்கே கூறிய எல்லாம் அகந்தை கொண்டவரை யடக்கவும், அன்புடையவரைக் காக்கவும் முதல்வன்செய்த அருட்செயல்கள் என எண்ணுவாய்!" என்று கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 45. கயமுகன் தோற்றம்

இந்திரன் ஒரு காலத்தில் அவுணரைப் போரில் வென்று, பொன்னுலகில் இருந்தான். அசுரேசன் தான் தேவரால் துன்புற்றதைக் குருவாகிய சுக்கிரனுக்குக் கூறினான். சுக்கிரன், "மேருவின் தென் பால் மாகதன் என்னும் முனிவன் தவஞ்செய்கின்றான்; உன் குலத்துக் கன்னி யொருத்தியை விடுத்து, அவனைக் கூடச்செய்வாய்! அப்போது ஒரு புத்திரன் தோற்றுவான். அவனால் உன் குலந் தழைக்கும்!" என்றான். அசுரேசன் மகிழ்ந்து சென்று விபுதை என்பவளிடம் இதனைக் கூறி அவளை அனுப்பினான். விபுதை சென்று, மாகதன் முன்னே தவஞ்செய்து நின்றாள். முனிவன் விழித்த பொழுது ஒரு களிறும் பிடியும் புணர்வதைக் கண்டு, காம வசத்தன் ஆனான். விபுதை முன் போய்ப் பணிந்து முனிவனைப் பார்த்து, "உன்னைக் கணவனாகப் பெறத் தவஞ்செய்தேன்!" என்றாள். முனிவன் களிறு வடிவாகவும் விபுதை பிடிவடிவமாகவும் கூடினர். உடனே யானைமுகத்தோடு கயமுகன் என்னும் அசுரன் தோன்றினான். விபுதையின் வியர்வையில் அநேகம் அசுரப்படைகள் தோன்றின. கயமுகன் சேனைகளுடன் எவ்வுலகமுஞ் சென்று உயிர்களை வருத்திவந்தான். சுக்கிரன் அவனை அணுகி, "யான் உன் குல குரு; நீ இப்படித் திரிவது நன்றன்று! உன் பகைவராகிய தேவரை வென்று அரசியற்றச் சிவனை நோக்கித் தவஞ்செய்து வரம் பெறுவை!" என்று அதற்குரிய முறைகளை உபதேசித்தான். கயமுகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படியே சென்று தவஞ்செய்தான். சிவபெருமான் அவன்முன்னே தோற்றியருள, அவன் வணங்கி, "தேவர் முதலிய யாவரும் என் ஆணைக்குள் அடங்க அரசுபுரிய வேண்டும். எவர்களாலும், எவ்வித ஆயுதங்களாலும் யான் அழியாதிருத்தல் வேண்டும்!" என்று வரம்பெற்றான். 'மதங்கமாபுரி' என்னும் நகரமமைத்து, அதிலிருந்து அரசியற்றினான். அவன் விசித்திரகாந்தி என்பவளை மணஞ்செய்தான். இந்திரன் முதலிய தேவரை யழைத்துத் தினமும் தன்முன் வந்து, அவர்கள் தத்தம் சிரசில் மும்முறை குட்டித் தாழ்ந்தெழுந்து போக வேண்டும் என்றான். பலருக்கும் இவ்வாறு துன்பங்களைச் செய்தான். இப்படிப் பல ஆண்டுகள் கழிய, தேவர்கள் சிவபிரானிடம் முறையிட்டார்கள். "அஞ்சாதீர்! நாம் ஒரு புதல்வனைத் தோற்றுவித்து, அவனால் உங்கள் துன்பத்தைப் போக்குவிப்போம்!" என்றருளித் தேவர்களுக்கு விடை கொடுத்தனர். பின்பு சிவபெருமான் திருக்கைலாச நந்தவனத்தில் உமாதேவியாரோடு உலாவிச் சித்திர மண்டபத்தை அடைந்தனர். அம்பிகை சித்திரங்களைப் பார்த்தாள். அங்கே எழுதப்பட்டிருந்த பிரணவம் களிறும் பிடியுமாகிய இரு வடிவங்கொண்டு கூட, விநாயகர் தோன்றினர். சித்திரம் முன்போலானது. விநாயகர் சிவனையும் உமையையும் வணங்க, "மைந்தனே! உன்னை முதல் நினைத்து வழிபடுவார்க்கு விக்கினங்களை நீக்குதி; தேவர்களைத் துன்புறுத்தும் கயமுகனைச் சங்கரித்து, அவர்களைக் காப்பாற்றுவாய்!" என்றருள்செய்து, கைலையை யடைந்திருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருதினம் விஷ்ணுமூர்த்தி கைலையிற்சென்று வணங்கினர் அவரைச் சாட்சியாகவைத்து, சிவனும் உமையும் சூதாடினர். உமை வென்ருள். "யார் வென்றது?" என்று கேட்க, "சிவன் வென்ருர்!" என்று விஷ்ணு கூற, உமை கோபங் கொண்டு, "நீ பாம்பாகுக!" என்று சபித்தாள். விஷ்ணு இறைவனை வணங்கி, "எப்போது என் சாபம் நீங்கும்?" என்ருர். "தென்னுட்டின் ஆலவனத்தில் பெரிய ஆலமர மொன்றுண்டு. அம் மரப்பொந்தில் நீ இருப்பாய்! விநாயகர் கயமுகனைச் சங்கரித்து மீண்டு வரும்பொழுது அவரைத் தரிசிப்பாய்! சாபம் நீங்கும்" என்ருர். விஷ்ணு அப்படியே போயிருந்தார். தேவர்கள் விநாயகப்பெருமானை யடைந்து, கயமுகன் செய்யும் துன்பங்களைக் கூறினர். விநாயகப் பெருமான் கணங்கள் சூழச் சென்று, கயமுகனை யெதிர்த்து, அவன் சேனைகள் முழுவதையும் அழித்து; அவன் ஆயுதங்களால் அழியாமை கண்டு, தமது ஒரு கொம்பை முறித்து எறிந்து, அவனைச் சங்கரித்தார். கயமுகனது இரத்தம் பெருகியோடிய அவ்விடம் செங்காடு என்று பெயராயிற்று. தேவர்கள் எல்லோரும் பூமழை பொழிந்து விநாயகரைப் போற்றினர். விநாயகப் பெருமான் திருச்செங்காட்டில் சிவலிங்கத்தைத் தாபித்துப் பூசித்தார். அந்த ஆலயம் "கணபதிச்சரம்" என வழங்குகிறது. விநாயகர் அவ் வழியால் வரும்பொழுது பாம்பாயிருந்த விஷ்ணு தரிசித்தார். உடனே சாபம் நீங்கித் தம் வடிவைப்பெற்று, விஷ்ணு விநாயகமூர்த்தியைப் பூசித்தார். அத்தினம் மார்கழிமாதப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூர்வபக்கச் சட்டியாகும். விஷ்ணு, "எம்பெரு மானே! இத்தினத்தில் தேவரீரைப் பூசிப்பவ ருக்கு எல்லாச் செல்வங்களையும் கொடுத்து அருள்க!" என வேண்டினர். விநாயகப் பெரு மான் அருள்புரிந்து திருக்கைலையை யடைந்து, தேவர்களுக்கு விடைகொடுத்து வீற்றிருந்தருளி னார்." என்று இவ்வாறு கூறிமுடித்த ததீசி முனி வர் தக்கனைப் பார்த்து: "சிவனை முதல்வராகக் கொண்டு யாகஞ்செய்வாய்!" என்றார். தக்கன் "நீ யாது கூறினும், ஏது வரினும் சிவனுக்கு அவி கொடேன்!" என்றான். முனிவர் கோபித்துப் பல சாபங்களைக் கூறினர். தம்முடன் வந்த முனி வர் பலர் சூழத் ததீசிமுனிவர் அவ்விடம்விட்டுச் சென்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 46. தக்கன் யாகம்

ததீசி முனிவர் சென்றபின்பு, தக்கன் யாக சாலையிற் கற்பகதரு, காமதேனு, சங்கநிதி, பதும நிதி, சிந்தாமணி என்னும் செல்வப்பொருள்களை வைத்து, ஏவலர் மூலம் அவரவர் விரும்பியபடி உணவுவகைகள், செல்வங்கள் அளவில்லாதன கொடுத்தான். தன் புதல்வியர், மருகர் யாவருக்கும் வேண்டியவற்றை நல்கினன். எல்லோரும் இவ் வாறு மகிழும்படி தானஞ்செய்து, வேள்வித்தீயில் மந்திரமுறைப்படி அவிசொரிந்து, யாகஞ் செய் தான். நாரதமுனிவர் திருக்கைலாசத்தையடைந்து சிவபெருமானை வணங்கினர். சிவபெருமான், "திரிலோக சஞ்சாரியாகிய நாரதனே! நீ பூமியிற் கண்ட புதுமையைப் புகல்வாய்!" எனலும், நாரதர், "சுவாமி உய்யும் நெறியறியாத தக்கன் தேவரீரை விலக்கி, வேதநெறிதவறி யாகஞ் செய் கின்றான். விஷ்ணு முதலிய தேவர் குழுமியிருந்து அவியுண்கின்றனர்!" என்றார். உமாதேவியார் எழுந்து, "எம்பெருமானே! தக்கன் செய்யும் யாகத்தைப் பார்த்துவர அருள்புரிக!" என்றாள். "நங்கையே! அறிவு மயங்கிய தக்கன் உன்னை மதியான்; அங்குச் செல்லலை!" என்றார். "எம் பெருமானே! அவன் பிழை பொறுத்தருளுக. யான் செல்ல விடைதருக!" என்று பின்னும் வேண்டினள். "நீ விரும்பினால் அங்கு போய்ப் பார்த்து வருக" என்று விடைகொடுத்து அருளி னர். உமையம்மை மகளிர்சூழ விமானத்திற் சென்று, யாகசாலையை அடைதலும் கண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக்கன், "பித்தன் மனைவியாகிய நீ, நான் அழை யாமல் இருக்க ஏன் வந்தாய்? உன் கணவனுக்கு அவிகொடேன்; இங்கு நில்லாதே விரைந்துபோ! போ!!" என்றனன். கேட்ட இறைவி கோபங் கொண்டு, சாபம் மொழிந்து, கைலையையடைந்து, சிவபெருமானை வணங்கி, "உன்னையும் என்னையும் இகழ்ந்த தக்கன் யாகத்தை அழித்தருள்க!" என்று விண்ணப்பஞ் செய்து வீற்றிருந்தாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 47. யாக சங்காரம்

உமையம்மை மனக்குறிப்பை அறிந்த சிவபெருமான், நெற்றிக் கண்ணினின்றும் ஆயிரம் முகங்களும் இரண்டாயிரம் கைகளும் உடைய வீரபத்திரரைத் தோற்றுவித்தார். அம்பிகை தனது கோபத்தினின்றுந் தோற்றுவித்த ஆயிரம் முகங்களும் இரண்டாயிரம் கைகளுமுடைய பத்திரகாளி, வீரபத்திரருக்குத் துணைவி ஆயினள். இருவரும் சிவனையும் உமையையும் வணங்கி, "எம்மைத் தோற்றுவித்த காரணம் என்னை?" என்றனர். சிவபெருமான், "மைந்தனே! தக்கன் நம்மை இகழ்ந்து யாகம் செய்கின்றான்! அங்கு சென்று எமது அவியினைக் கேட்குதி; தந்தால் மீண்டு வருவாய்; தராவிடில் தக்கனைக்கொன்று, அங்கிருப்பவரைத் தண்டித்து, யாகத்தை அழிப்பாய்! யாமங்கு வருவோம்!" என்றருளினர். வீரபத்திரர் அளவில்லாத கணத்தவர்களை உண்டாக்கிக்கொண்டு, பத்திரகாளியுடன் யாகசாலையை அடைந்தார். கணத்தவர்களைப் புறத்தே காவலாக நிறுத்தி உள்ளே சென்றார். கண்டதும் அங்கிருந்தோர் எல்லோரும் அஞ்சி மயங்கினர். தக்கனும் உள் நடுங்கினன். வெளியில் அஞ்சாதவன்போல் பாசாங்கு செய்து, "நீ யார்? இங்கு வந்ததென்னை?" என்றான். "தக்கனே, நான் சிவனுடைய குமாரன்! சிவனுக்குரிய அவிப்பாகத்தைக் கொடு!" என்றார். தக்கன், "உங்கள் சிவனுக்கு உலகம் அவிகொடாது" என்றான். அங்கிருந்த நாலு வேதங்களும் குடிலையும் எழுந்து,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யாகங்களுக்குத் தலைவன் சிவபெருமானே! அல்லாமல் வேறொரு தேவர் உண்டோ! தாமதியாமல் அவியைக் கொடுப்பாய்!" என்றன. அவனவ்வாறு கொடாமைகண்டு சிவனைத் துதித்துச் சென்றன. வீரபத்திரர் கோபங்கொண்டு தண்டாயுதத்தால் விஷ்ணுவுக்கு அடித்தனர்; பிரமனுக்குக் குட்டினர்; இருவரும் மயங்கி விழுந்தார்கள். கலைமகள் முதலானோர்க்கு மூக்கையும் [redacted] அறுத்தார். சந்திரனை உதைத்துத் தேய்த்தார். சூரியனுக்குப் பற்கள்விழ அடித்தார். பகன் கண்ணைப் பறித்தார். இயமன் தலையை வெட்டினார். குயிலாய்ப் பறந்த இந்திரனை வெட்டினார். அக்கினியின் கையை அரிந்தார். அவன் மனைவியின் மூக்கைக் கிள்ளினார். நிருதியைத் தண்டால் அடித்தார். உருத்திரரை ஓடும்படி வெருட்டினார். எச்சன் தலையை விழுத்தினார். தக்கன் தலையை வெட்டி ஓமகுண்டத்திலிட்டார். வேதவல்லி முதலியோர் வந்து புலம்பினர்.

பத்திரகாளி, நங்கையர் தலைகளை வெட்டிப் பந்துபோல் அடித்தாள். விஷ்ணு அயர்ச்சி நீங்கி, கருடன் மீதேறி எதிர்த்தார். சிவனருளால் ஒரு தேர்வர, வீரபத்திரர் அதிலேறினார். இது சமயமென்று பிரமன் சாரதியாய்ச் செலுத்தினன். போர்புரிந்து ஆற்றாதவராய் விஷ்ணு மயங்கி நின்றார். அப்போது, "வீரனே, கோபந்தணிக!" என்று அசரீரி கேட்டது. வீரபத்திரர் கோபந்தணிந்தனர். சிவபெருமான் உமாதேவியாருடன் இடபவாகனத்தில் தோன்றியருளினர். அம்பிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்து இரங்கி, "எம்பெருமானே இறந்தவர் களையும் எனது தந்தையையும் எழுப்பியருள வேண்டும்!" என்றாள். இறைவன் வீரபத்திரர்க்கு அருள, வீரபத்திரர் எல்லோரையும் எழுப்பினர். தக்கனைக் காணுமையால் பிரமன் விண்ணப்பஞ் செய்ய, அவன் தலை முன் அக்கினியில் எரிந்ததால் ஒரு ஆட்டுத்தலையை வைத்துத் தக்கனையும் எழுப் பினர். எல்லோரும் நடுங்கி, சிவபெருமானையும் உமாதேவியையும் வீரபத்திரரையும் பலமுறை பணிந்து, "தேவரீரை மதியாது அறியாமையாற் செய்த பிழையைப் பொறுத்தருள்க!" என்று துதித்தனர். சிவபெருமான் கருணைசெய்து எல் லோரும் உங்கள் பதவிகளை அடைந்து முன் போல வாழுங்கள்!" எனப் பணித்தனர். வீர பத்திரர் பத்திரகாளி, சேனைகள் சூழ உமாதேவி யாரோடும் திருக்கைலாசத்தை அடைந்தார். மேலுலகத்தில் இருந்து எல்லா அண்டங்களையும் காக்கும்படி வீரபத்திரருக்கு அருள் செய்து, விடை கொடுத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 48. அடி முடி தேடியது

பிரமதேவன் தக்கனையடைந்து, "பெரியோர் கூறியதைக் கேளாமல் எல்லோருக்கும் எவ்வளவு துன்பத்தை விளைத்தாய்? நாமும் இப்படியே முன்னொரு காலத்து மயங்கி, இறைவனருளால் உணர்ச்சி பெற்று உய்ந்தோம்!" என்றான். "அது எப்படி?" என்று தக்கன் கேட்க, பிரமன் பின் வருமாறு சொல்லத் தொடங்கினான்:—"எனக்கொரு பகல் கழிந்தாற் சலப்பிரளயம் வரும்; உலகமெல்லாம் நீருள் அமிழ்ந்துவிடும்; இராக் காலம் நீங்கிப் பகல் வந்ததும் முன்போல எல்லாவற்றையும் படைப்பேன். அதனால் 'நானே பரம்பொருள்' என்று அகந்தை கொண்டேன். விஷ்ணு ஆலிலையில் அறிதுயில் கொள்ள, யான்போய் அவர் மார்பிற் குத்தி எழுப்பி, 'நீ யார்?' என்றேன். 'நான் உன்னைப் பெற்ற பிதா; எல்லாவற்றையும் காக்கும் பரம்பொருள்!' என்று அவர் சொன்னார். நம் இருவருக்கும் போர் மூண்டது. 'வெல்பவரே பரம்பொருள்' என்று கூறி, அநேககாலம் போர் செய்தோம். எங்கள் நடுவில் அக்கினிமலையொன்று தோன்றி, எங்கள் படைகளை விழுங்கி நின்றது. 'இம்மலையின் அடிமுடியைக் காண்பவரே பரம்பொருள்' என்று அசரீரி கேட்டது. விஷ்ணு பன்றியாய் அடியையும், யான் அன்னமாய் முடியையும், பலகாலம் தேடிச் சென்றோம். அடிமுடி காணப்பெறாமல் வலிமை நீங்கி இறைவனைத் துதித்து இருவரும் பூமியில் வந்து சிவபெருமானைப் பூசித்து மயக்கம் நீங்கி அவனரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளால் எங்கள் பதவிகளைப் பெற்றேம். நீயும் மெய்யன்போடு சிவபெருமானைப் பூசித்து, அவனருள் பெறுவாய்!" என்று பிரமன் கூறினன். தக்கன் இவற்றையெல்லாங் கேட்டுக் காசியிற் சென்று மணிகர்ணிகைக்குப் பக்கத்தில் ஒரு ஆலயம் அமைத்து, சிவலிங்கப்பெருமானைத் தாபித்துப் பல ஆண்டுகளாகப் பூசை செய்தான். சிவபிரான் தோன்றி அவனைக் கணநாதனுயிருக்கும்படி அருள் புரிந்தார். தக்கனும் புனிதனுயினன். தேவர் முனிவர் யாவரும் தத்தமிடங்களையடைந்து சிவபூசை செய்திருந்தார்கள்." என்று இவ்வாறு வரலாறுகளை வியாழபகவான் கூறக் கேட்டுச் சயந்தன் வணங்கி மகிழ்ந்திருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 49. கந்தவிரதம்

முன்னொரு காலத்தில் முசுகுந்தன் வசிட்ட முனிவரை யடைந்து, "கந்தசுவாமியின் விரதங்களைக் கூறியருள்க" என்று வேண்டினான். வசிட்டர் சொல்லுவார்: "சுக்கிரவார விரதம், கார்த்திகை விரதம், கந்தசட்டி விரதம் ஆகிய இவ் விரதங்கள் கந்தசுவாமியின் விரதங்களுள் மிகச் சிறந்தன. பகீரதன் என்பான் கோரன் என்னும் அசுரன் தனது நாட்டைக் கைப்பற்ற, அவன் தனது மனைவி மக்களோடு காட்டையடைந்து, சுக்கிர வார விரதமனுட்டித்துப் பழையபடி தன் நாட்டைப் பெற்று இன்புற்றிருந்தான். நாரதமுனிவர் கார்த்திகை விரதத்தை முறைப்படி அனுட்டித்து ஏழுமுனிவரினும் உயர்ந்த பதவியைப் பெற்றார். ஐப்பசி மாசத்தில், பூர்வபக்கப் பிரதமைமுதல் ஆறுநாளும் அனுட்டிக்கின்ற கந்தசட்டி விரதத்தை தேவர் முனிவர் அந்தணர் முதலியோர் அனுட்டித்து அளவில்லாத பயன்களைப் பெற்றனர்" என்று வசிட்ட முனிவர் கூறினர். கேட்ட முசுகுந்தன் குமாரக்கடவுளைக் குறித்து இவ்விரதங்களை முறைப்படி அனுட்டித்தான். குமாரக்கடவுள் தோன்றி, "வேண்டிய வரம் யாது?" என்ன, முசுகுந்தன் துதித்து, "எம்பெருமானே! இவ் வுலகமெல்லாம் எனது செங்கோல் நடக்க வீரவாகுதேவர் முதலியோரைத் துணைவராகத் தந்தருளுக!" என்று வேண்டினான். "அப்படியே ஆகுக!" என்று குமாரக்கடவுள் வரங்கொடுத்தனர். வீரவாகுதேவர் முதலாயினோர் மானுடர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களாய் முசுகுந்தன் துணைவராயினர். அவர்களுக்கு அவன் நாடுகள், நால்வகைச் சேனைகள் எல்லாங் கொடுத்தனன். தெய்வ அரம்பையர்கள் கந்தன் ஆணையால் முன் மானுடமகளிராய் அவதரித்திருந்தவரை வீரருக்கு மணம் புரிவித்தான். அவர்கள் முசுகுந்தன் மனைவியாகிய சித்திரவல்லி வளர்த்த கிளியை இயமன் மனைவி தூதுவராற் கவர்ந்ததையறிந்து இயமனோடு போர்புரிந்து அவனைத் தோற்கடித்துக் கிளியைக் கவர்ந்து வந்தனர். சித்திரவல்லி கருக்கொண்டிருக்கும் போது வயாவினால் விரும்பிய பழவகை, காய் வகைகளைக் கொண்டுவரும்படி ஏவலரை அனுப்ப, மலைநாட்டிலுள்ளோர் அரசனாணையை இகழ்ந்தமை கேட்டு வீரவாகு முதலிய வீரர்கள் போய் அவர்களை அடக்கி வென்று, விரும்பியவற்றைக் கொணர்ந்தார்கள். எங்கும் இவ்வாறு அரசனுக்கு வெற்றியுண்டாகும்படி செய்தனர். முசுகுந்தன் மகிழ்ந்து அரசு செய்துவந்தான். இந்திரன் வலாசுரனோடு போர்புரிந்து அவனை வெல்லமுடியாமையால் முசுகுந்தனை அழைப்பித்தான். முசுகுந்தன் சேனைகளோடு சென்று வலாசுரன் சேனைகள் முழுவதையும் அழித்தான். இந்திரன் வச்சிராயுதத்தால் வலாசுரனைக் கொன்றான். தனக்கு உதவிசெய்தமைக்கு உகந்து முசுகுந்தனையழைத்துச் சென்று கூடஇருத்தி தியாகராஜ மூர்த்தியைப் பூசித்தான். முசுகுந்தன் கண்டு துதிக்க, அம்மூர்த்தி "எம்மைப் பூவுலகிற் கொண்டுசென்று பூசிப்பாய்" என்று இந்திரன் அறியாமற் கூறி அருளினர். இந்திரன் பூசைமுடிந்தவுடன் அன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போடு விருந்து செய்து அணிகலன் முதலிய பல வுங் கொடுத்து, "இன்னும் என்ன வேண்டும்?" என்றான். முசுகுந்தன், "யான் பூவுலகிற் கொண்டு சென்று பூசிப்பதற்கு இம்மூர்த்தியைத் தருக!" என்றான். "அரசனே! முன்னொருகாலத்து பிள்ளைப்பேறு குறித்து விஷ்ணுமூர்த்தி சிவனை நோக்கித் தவஞ்செய்ய இறைவன் உமாதேவி யோடு காட்சிகொடுக்க, விஷ்ணு இறைவனை வணங்கி, 'புத்திரப்பேறு தந்தருள்க!' என்றார். அப்படியே இறைவன் வரங்கொடுக்க அம்பிகை விஷ்ணு தன்னை வணங்காமையால், 'அப்புதல் வன் இறைவன் நெற்றிக்கண்ணு லழிக!' என்று சாபமிட்டாள். விஷ்ணு பின்னும் பலகாலம சிவன், உமை, முருகன் மூவரும் ஒருங்கமைந்த சோமாஸ்கந்தமூர்த்தியை அமைத்துப் பூசித்தார். சிவன் உமையுடன் காட்சிகொடுக்க, விஷ்ணு முதல் அம்பிகையையும் இறைவனையும் வணங்கி ஞர். சிவன் இறைவிக்கு அருள, 'இறைவி, எரிந்த புதல்வன் முன்போலத் தோற்றுக!' என்று அருள் செய்தாள். அன்றுமுதல் விஷ்ணு இம்மூர்தநியை மார்பில் வைத்துக்கொண்டு பாற் கடலில் துயின்றனர். இது இப்படியாக; யான் முன் யுத்தத்தில் வாற்கலியென்னும் அசுரனுக் குத் தோற்று விஷ்ணுவிடம் முறையிட்டேன். இந்த மூர்த்தியை என்னிடந் தந்து, 'அன்போ டிவரைப் பூசித்தால் துன்பமெல்லாந் தீர்வாய்!' என்றார். பின்பு விஷ்ணு சிதம்பரத்திற் சென்று மன்றிலாடும் மணியை வணங்கி, அருள்பெற்று வாற்கலியென்னும் அசுரனைக் கொன்று எங்களைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்தனர். யான் அன்றுமுதல் இம்மூர்த்தியைப் பூசித்து வருகிறேன். விஷ்ணுவின் சம்மதம் பெற்றால் அதைத் தருகின்றேன்!" என்றான்.

முசுகுந்தன் விஷ்ணுவிடஞ் சென்று வேண்டி, அவர் சம்மதம் பெற்று இந்திரனிடம் வந்து அறிவித்தான். இந்திரன் மயனால் இதேபோல ஆறு உருவம் செய்வித்து முசுகுந்தனிடம் கொடுக்க, அவன் வாங்கி, "அவ்வாறு உருவமும் அவரல்ல," என்று சொன்னான். தான் பூசித்த மூர்த்தியைக் கொணர்ந்து காட்டி, இந்திரன், "இவராமோ?" என்றான். "இவர்தான்!" என்று அவ்வுருவத்தை வாங்கினான். மற்ற ஆறு மூர்த்திகளையும் முசுகுந்தனிடம் கொடுத்தான். முசுகுந்தன் இந்திரனிடம் விடைபெற்று, பூமியிலவற்றைக் கொணர்ந்து, "இந்திரன் பூசித்த மூர்த்தியைத் திருவாரூரிலும், மற்ற ஆறு மூர்த்திகளையும்; நாகபட்டினம், திருநள்ளாறு, திருக்காறாயில், திருக்கோளிலியூர், திருவாய்மூர், திருமறைக்காடு என்னும் ஆறிடங்களிலும் தாபித்து, திருவிழாச் செய்தான். இந்திரன் தான் பூசித்த மூர்த்தியைக் கொடுத்ததால், புலையுருவடைந்தான். திருவாரூரை அடைந்து திருவிழாச் செய்வித்து, பூசித்துப் பழைய வடிவம் பெற்றுப் பொன்னுலகடைந்தான். பின் முசுகுந்தன் புதல்வனாகிய அங்கிவன்மனுக்கு முடிசூட்டிவிட்டு, தவஞ்செய்து கைலையை அடைந்தான். வீரவாகு முதலானோர் பழைய வடிவைப் பெற்று குமாரக்கடவுளை அடைந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 50. வள்ளியம்மை திருமணம்

தொண்டை நாட்டிலுள்ள வள்ளிமலைச்சாரலிற் சிவமுனிவர் தவம் செய்திருந்தார். அவ்வழியால் அழகிய பொன்மானொன்று உலாவியது. முனிவர் கண்டு காதல் கூர்ந்தார். காட்சிமாத்திரையால் மான் கருக்கொண்டு வள்ளிக்கிழங்கு கிண்டிய குழியிற் கருவுயிர்த்தது. பிறந்த குழந்தை மனிதவடிவமாயிருக்கக் கண்டு அவ்விடத்தை விட்டு அது ஓடியது; குழந்தை அழுதது.

பதினன்கு புதல்வரைப் பெற்றும் ஒரு பெண் குழந்தை வேண்டுமென்று தவஞ்செய்த நம்பியரசன், மனைவியாகிய கொடிச்சியுடன் அவ்வழியால் வந்தான். குழந்தை அழும் ஒலிகேட்டு ஓடிச் சென்று எடுத்து மனைவி கையிற் கொடுத்தான். "தமக்கு ஒரு பெண் குழந்தையைக் கொடுத்தான் இறைவன்!" என அவனை வழுத்தி, சிறுகுடியிற் கொண்டு சென்று 'வள்ளி' எனப் பெயரிட்டு அன்போடு இருவரும் வளர்த்தனர். பன்னிரண்டுப் பருவம் வருதலும், தமது சாதி வழக்கப்படி அவளைத் தோழியரோடு புனங்காவல் செய்ய வைத்தான் நம்பிராசன்.

நாரதமுனிவர் தலைவியின் பேரழகை யுற்று நோக்கி, தணிகை மலையில் வீற்றிருக்கும் முருகக் கடவுளிடம் விண்ணப்பித்தார். முருகன் தானமுன் கொடுத்த வரத்தை நினைத்து, வேட்டுவ வடிவங் கொண்டு அப் புனத்துக்குச் சென்றார். தினைப் புனத்தில் தலைவியுடன் காதல் தோன்ற வார்த்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாடி நிற்க, வேட்டுவர் அங்கு வந்தார். தலைவி அவரை, "இங்கு நில்லாது ஓடும்!" என்று கூற, முருகன் வேங்கைமரமாயினன். வேடுவர் அவ்விடத்தை விட்டுப்போனதும் அவர் முன்போலத் தோன்றி, காதல்மொழிகளைப் பேசிநின்றார். பின்னும் வேடுவர் வந்தனர். முருகன் சைவ, தவ விருத்த வடிவங்கொண்டு, எதிரே சென்று நம்பியரசனுக்கு விபூதி கொடுத்து அவனை ஆசீர்வதித்தார். நம்பியரசன் வணங்கி, "யாது வேண்டி இங்கு வந்தீர்?" என்று கேட்க, "யான் தீர்த்த யாத்திரை செய்து வருகின்றேன்! எனது கிழப்பருவம் நீங்க இம் மலையில் கன்னி தீர்த்தமாட வந்தேன்" என்றார். "நல்லது, நீர்சொன்ன தீர்த்தத்தில் ஆடி எம புதல்விக்குத் துணையாய் இருப்பீர்!" என்று அழைத்துச்சென்று, வள்ளிநாயகியிடம் அவ் விருத்தரை விட்டுச் சென்றான். கிழவர் "பசிக்கிறது!" என்றார். தலைவி தேன் கலந்து தினைமாவை அவருண்ணும்படி கொடுத்தாள். கிழவர் அதையுண்டு, "நா வரளுகிறது; தண்ணீர் கொடு!" என்றார். "சுவாமி, இம் மலைக்கு அப்பால் ஏழு மலை கடந்து அதற்குமப்பால் ஒரு சுனை இருக்கிறது. அங்கு சென்று பருகி வருக!" என்று தலைவி கூறினள். கிழவர், "எனக்கு வழி தெரியாது! நீ சென்று காட்டுவாய்!" என்ன, தலைவி அவரை அழைத்துக்கொண்டு போய் அங்கு விட்டாள். தண்ணீர் பருகின கிழவர்: "என் தாகத்தைத் தவிர்த்தாய்! இனி என் மோகத்தைத் தவிர்ப்பாய்!" என்றார். "பால்போலத் தோன்றி நஞ்சுபோ லிருக்கின்றது உமது இயற்கை! எமது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலத்துக்கு வசையுண்டாக்க வந்தீர்; போம்!" என்று கூறி, "நான் முந்திப்போவேன்!" என்று தலைவி போக; முருகன் யானையாய் வரும்படி விநாயகரை நினைத்தார். யானை வந்தது.

முழங்கி வந்த யானையைக்கண்டு வள்ளி பயந்து, கிழவரைத் தழுவிக்கொண்டு, "நீர் சொன்னபடி செய்வேன்! இவ் வேழத்தினின்றும் என்னைக் காத்தருள்க" என்றாள். முருகக்கடவுள் விநாயகரை அனுப்பிவிட்டுத் தனது சுயவடிவைக் காட்டியருள, வள்ளி விழுந்து வணங்கினாள். முருகன் அவளைப்பார்த்து, "நீ புனங்காக்கச் செல்வாய்; யாம் வருவேம்!" என்று அவளை அனுப்பினர். பின்பு அவர், அவள் தன் பாங்கியுடன் தனித்திருக்குஞ் சமயத்தில் வேட்டுவ வடிவத்துடன் சென்றார். இருவர் கண்ணோக்கத்தையுங் கண்ட பாங்கி காதலுண்மையைக் குறிப்பாலுணர்ந்து, அயற் புனத்திற் சென்றாள். முருகன் அங்குச்சென்று, வேண்டுவனகூறிப் பாங்கிவாயிலாகத் தலைவியைப் பெற்று மகிழ்ந்தான். இங்ஙனமாக, தினையும் விளைந்தது. வேடர்வந்து வள்ளியையும் தோழியையும் சிற்றூருக்கு அனுப்பி, தினையை அரிந்து சென்றார்.

சிறுகுடிக்குச் சென்ற தலைவி முருகனை நினைந்து தனியே புலம்பியிருக்க, செவிலித்தாய் கண்டு, வேலனையழைத்து வெறியாடுவித்தாள். முருகன் ஆவேசப்பட்டு, "யாமே இவளைத் தீண்டினோம்! சிறப்பை நேர்ந்தால் குறைநீங்கும்!" என்றான். செவிலித்தாய் அங்ஙனமே செய்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகன் கூறியதைக் கேட்ட வள்ளி யெழுந்து மகிழ்ந்திருந்தாள். பின்பு முருகன் நடு இரவில் குடிசையின் புறத்தே நிற்க, பாங்கி எவருமறி யாதபடி வள்ளியை அழைத்துக் கொண்டுவந்து விடுத்தாள். இருவருஞ் சென்று ஒரு பூஞ்சோலை யிலே தங்கினர்.

விடிந்ததும் புதல்வியைக் காணுமல் தாய் நம்பியரசனுக்குச் சொல்ல, அவன் வேடுவர்சூழத் தேடிச்சென்று பூஞ்சோலையில் அவளிருக்கக் கண் டான். முருகக்கடவுளோடு எல்லோரும் போர் புரிந்தனர். கொடியாகிய சேவல்கூவ, முருகனை எதிர்த்தோர் எல்லாரும் இறந்தனர். முருகன் எழுந்து போயினன். தலைவியும் பின் தொடர்ந் தாள். நாரதர் அங்குவந்து நடந்தவற்றையெல் லாம் முருகனிடம் கேட்டு; "உறவினரெல்லாரும் இறந்துகிடக்கப் பெண்ணைக் கொண்டுபோதல் முறையாகுமா?" என்றார்.

முருகன் திரும்பிவந்து வள்ளியின் வாயிலாக அவர்களை உயிர் பெற்றெழச் செய்து தமது திருவுருவைக் காட்டினர். எல்லோரும் விழுந்து வணங்கிச் சிற்றூருக்கு வந்து மணஞ் செய்து செல்லும்படி முருகனை வேண்டினர். முருகன் அங்ஙனமே சென்றான். புலித்தோ லாசனத்தில் மணமக்களை இருத்தினர். முருகக்கடவுள் பார்வை யால் வள்ளிநாயகி தெய்வக்கோலத்தோடு தோன் றக் கண்டு எல்லோரும் ஆச்சரியமடைந்தனர். நாரதமுனிவர் ஆசிரியராய்க் கிரியைகள் செய்யத் திருமணம் செவ்வனே நிறைவேறியது. முருகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுள் "தேவருந்தொழ அரசியல் செலுத்தி வாழ்க!" என்று நம்பியரசனுக்குக் கூறி வள்ளி நாயகியாரோடும் தணிகைமலையை யடைந்து வீற்றிருந்தார். அம்மலையின் பெருமையைத் தலைவிக்குக் கூறி, சில தினங் கழிய, கந்தமாதனத்தை யடைந்து தெய்வயானையம்மையாருக்கு வள்ளி நாயகியின் வரலாற்றைக் கூறி, இருவரும் இரு பக்கத்தும் பொருந்தச் சிங்காசனத்து வீற்றிருந்தனர். உய்ந்தன உலகெலாம்!

"கல்லகங் குடைந்த செவ்வேற்
கந்தனோர் தருவ தாகி
வல்லியர் கிரியை ஞான
வல்லியின் கிளையாய்ச் சூழப்
பல்லுயிர்க் கருளைப் பூத்துப்
பவநெறி காய்த்திட் டன்பர்
எல்லவர் தமக்கும் முத்தி
யிருங்கனி யுதவு மென்றும்."

"ஆறிரு தடந்தோள் வாழ்க
வறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்கக்
குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க
யானைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க
வாழ்கசீ ரடிய ரெல்லாம்."

திருச்சிற்றம்பலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org